# கண் திறவாய்



தாஸிம் அகமது

# கண்திறவாய்

## கவிதைகள்

எனது அன்பு மகள் (பெறாமகள்)

காதாம்பினி. பூனுகலை ரசிக்க

அன்புடன்

சித்தப்பா

தாஸிம் அகமது

2012.

தாஸிம் அகமது

# கண்திறவாய்

**கவிதைகள்**

**ஆசிரியர்** : தாஸிம் அகமது

இல. 09, சவுண்டர்ஸ் கோர்ட்
கொழும்பு 02

**முதற்பதிப்பு** : மே, 2011

**வெளியீடு** :
SJ வெளியீட்டகம்
இல 9
சவுண்டர்ஸ் கோர்ட்
கொழும்பு 2
ஸ்ரீ லங்கா

**பதிப்புரிமை** : சித்தி ஜரீனா தாஸிம்

**அட்டை அமைப்பு** : மேமன்கவி
பக்க வடிவமைப்பு : புவனா

**விலை** : SR **300/=** ரூபாய்


**KANTHIRAVAAI**
*TAMIL POEMS*

Dr. Thassim Ahamed
No. 09, Saunder's Court
Colombo 02
Tel : 094 112438801
Email : doctorthassim@gamil.com

**Published by:**
SJ Publisher
No - 09,
Saunder's court
Colombo 2
Sri Lanka

1st Edition : May 2011

*ISBN 978-955-53408-0-9*



# சமர்ப்பணம்

ஊரில் ஓதல்பள்ளி உறவு
கொழும்பில் அறைத் தோழன்
உங்கள்
இறுதி மூச்சுவரை
பகிரங்கப்படுத்தப் படாத
உறுதியான நட்பு
அரசியலுக்கப்பாலும்
நேசிக்கப்பட்ட
நான் எனும் நீயாய்
நாமிருந்தோம்
முஸ்லிம் சமூகத்தின்
அரசியல் கண் திறந்த
அதிமானுடனே
இந்நூல் உங்களுக்கு....

*வெளியீட்டுரை*

கன்னி முயற்சியாக கவிஞர் தாஸிம் அகமது அவர்களின் கண்திறவாய் எனும் இஸ்லாமிய எழுச்சிக் கவிதைகள் நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். கணணி வேலைகளில் செல்வி புவனா இரவு பகல் ஈடுபட்டு நூலாக்கம் செய்வதற்கு பெரிதும் உதவினார். எமது வேண்டுகோளுக்கிணங்க குறுகிய காலத்தில் ஏ.ஜே பிரின்டர்ஸ் இந்நூலை அச்சிட்டுத் தந்தனர். எதிர் காலத்தில் மேலும் பல வெளியீடுகளைச் செய்வதற்கு எண்ணியுள்ளோம். எழுத்தளார்களதும், வாசகர்களதும் ஆதரவை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

சித்தி ஜெரீனா தாஸிம்

SJ வெளியீட்டகம்
இல: 9,
சவுண்டர்ஸ் கோர்ட்
கொழும்பு 2
ஸ்ரீ லங்கா

மே மாதம் 2011

இலட்சிய வாழ்வுக்கு இஸ்லாமிய இலக்கியம்

*மலேசியாவைச் சேர்ந்த*
*இறையருட் கவிஞர்*
*செ. சீனி நெய்னா முகம்மது அவர்களின் அணிந்துரை*

## இருநோய் தீர்க்கும் இலட்சியக் கவிஞர் தாஸிம் அகமது

மலேசியாவின் உலக இசுலாமியத் தமிழிலக்கிய மாநாட்டுக்கு அழைப்பேந்திய குழுவுடன் கொழும்புக்குச் சென்றபோது சிலமுறை வாய்த்த சிறுநேரச் சந்திப்புகளிலேயே சிந்தையில் பதிவுபெற்றவர் மருத்துவர் தாஸிம் அகமது. பின்னர், அணிந்துரைக்காக அவர் அனுப்பிய இந்த நூலிலுள்ள கவிதைகளின்வழி, அவரைக் கவிஞராக மீண்டும் சந்தித்தபோது, முந்திய பதிவு மேலும் ஆழமும் அழுத்தமும் பெற்றது.

பெரும்பாலும் இலக்கியவாணர்களது படைப்புகளுக்கும் அவர்களது இயல்புகளுக்கும் தொடர்பிருப்பதில்லை. ஆனால், கொழும்பில் கண்ட மருத்துவர் தாஸிமுக்கும், நூலில் கண்ட கவிஞர் தாஸிமுக்கும் பெரிய வேறுபாடு எதனையும் என்னால் காணமுடியவில்லை. அவரது இயல்புகளில் பொதிந்திருந்த உணர்வுகளே கவிதைகளில் வெளிப்பட்டிருந்தன. இசுலாமியப் பற்றுறுதி, இறையச்சம், நபிக்காதல், மனிதநேயம், எல்லாருக்கும் நல்லதை விரும்பும் அருண்மை, எளிமை, இனிமை போன்ற அவரது நல்லியல்புகளே கவிதைகளின் கருவும் உருவுமாகியிருந்ததைக் கண்டு வியந்தேன்; மகிழ்ந்தேன்.

கவிதை என்பது கலை. அந்தக் கலைத்திறன் நல்லவனுக்கு மட்டுமன்றி அல்லவனுக்கும் வாய்க்கலாம். எனவே, கவிஞன் எத்தகையவன் என்பதைப் பொருத்துக் கவிதைகளும் நல்லவையாகவோ அல்லவையாகவோ வெளிப்படலாம். உயர்ந்த இலட்சியங்கள் உடையவனிடம் வாய்க்கும் கலைத்திறனே, ஆக்கக் கருவியாகப் பயன்படுகிறது. கவிஞர் தாஸிமுடைய ஒவ்வொரு கவிதையிலும் உயர்ந்த இலட்சியங்களையே காணமுடிகிறது.

சில எடுத்துக்காட்டுகள் இதனை உணர்த்தப் போதுமானவை:

"மண்ணுலகின் அடியினிலே புதைந்திருக்கும்
மறைபொருள்கள் அத்தனையும் கண்டெடுப்போம்
செந்நெல்கள் கழனியிலே குலுங்கக் காணச்
செறிவுமிகு காடுகளைச் சீர்மை செய்வோம்"

வாசகனை ஆக்கத்தை நோக்கி அழைத்துச்செல்லும் வரிகள் இவை.

"கூழைத்தான் உணவாகக் கொண்டிடினும்
குறையின்றி இறைவனையே புகழ்ந்திடுவோம்
வாழைகள்போல் சந்தனம்போல் என்றென்றும்
வான்புகழத் தியாகங்கள் செய்திடுவோம்"

நன்றியுள்ள இறையடியானின் அழகிய அடையாளங்கள் இவை.

"அன்பெங்கள் இதயத்தில் ஊற்றெடுத்து
அணையின்றி ஓடிவரும் நட்பமைப்போம்"

உயர்ந்த நட்புக்குச் சிறந்த விளக்கம் இது.

"கல்விச் செல்வம் தனையடைந்தோர்
கருணைச் செல்வம் விரும்பாமல்
அல்லும் பகலும் வீண்வழியில்
அறிவைச் செலுத்த விரும்புவரோ"

கருணைச் செல்வம் என்ற அழகிய புதுமைத் தொடர், கல்வியாளர்களைச் சிந்திக்கச்செய்வது.

"நாங்கள் ஏன்தான் வீணாக
நம்பியவற்றைக் கைவிட்டு
ஏங்கித் திரிந்து இறுதியிலே
இதயம் வெடித்துச் சாகின்றோம்"

வினாக்களால் இறைநம்பிக்கையாளரின் இதயக்கண்களைக் கசக்கிவிட்டு, விடையும் தருகிறார் கவிஞர்.

"எங்கள் பார்வை அத்தனையும்
இறைவன் விரும்பும் பார்வையென
எங்கள் செய்கை அத்தனையும்
இறைவன் விரும்பும் செய்கையென
எங்கள் நினைப்பு அத்தனையும்
இறைவன் விரும்பும் நினைப்புஎன
எங்கள் வாழ்வில் அமைந்துவிடின்
என்றும் இன்பம் நிரம்பிவிடும்!"

எழுப்பிய வினாக்களுக்குக் கவிஞர் தரும் விடை இது.

"வானம் பூமியெலாம் இறைபடைத்த நாள்முதலாய்
வளர்ந்துதேய்ந்துவரும் கூனல் இளம்பிறையே"

"மேதினி தோன்றிய இறைதூதர் அனைவரும்
நீதி போதித்த நெடுங்கதைகள் நீயறிவாய்"

காலங்காலமாகப் பிறைநிலவை, மாதர்நெற்றிக்கு ஒப்பீடாகவும் காதலுக்கு தூதாகவுமே காணுகின்ற கவிஞர்களிடையே, கவிஞர் தாஸிம் பிறையுடன் உரையாடும் முறை நமக்கு வியப்பூட்டி மகிழ்விக்கிறது.

"நித்திரையை நாடுகையில் என்சமூகம் தூங்கும் - அந்த
நிலைகண்டு பொறுக்காது நெஞ்சமுமே ஏங்கும்
எத்தனையோ கனவுகளை என்மனதும் காணும் - அதில்
இஸ்லாத்தின் சமூகமொன்றே எப்பொழுதும் தோணும்"

இலட்சியக் கவிஞனது ஏக்கமும் கனவும் எப்படியிருக்கும்? இப்படித்தானே!

"எங்கும் உலகம் இருளாக
எங்கள் வாழ்வில் இருப்பதற்கு
காரணம் யாதென் றறிகையிலே
எங்கள் கண்கள் இரண்டையுமே
நாங்கள் தானே குத்திவிட்டோம்!
மங்கல் அதனை மறைப்பதற்கு
மருந்தாய் ஒன்றும் இருக்கிறதே!

அந்த மருந்தே அறநெறியாம்
அந்த மருந்தே திருமறையாம்
அந்த மருந்தே அண்ணலரின்
அன்பு வாழ்க்கைத் தத்துவமாம்!"

அகக் குருட்டுக்குக் காரணத்தை உணர்த்தி, அதுதீர மருந்தும் கூறுகிறார் மருத்துவக் கவிஞர் தாஸிம்.

"கண்கள் கனன்று கக்குகின்ற நெருப்பினிலே
எங்களைப் பழிப்போரை எரிக்கப் பார்க்கின்றேன் - ஆனாலும்
உண்மை தெரிந்தால் உணர்வார்கள் ஓர்நாளில்
என்னும் எண்ணத்தால் இருக்கின்றேன் பொறுமையுடன்"

தாயி.்.பு நகரில் அன்று வெளிப்பட்ட அண்ணலாரின் அருட்பண்பு இந்த வரிகளிலே மீண்டும் ஒளிர்கிறது.

"இரவின் அமைதியிலே இவ்வுலகம் உறங்குகையில்
ஒருவன் மட்டுந்தான் உறங்கா திருக்கின்றான்!
மாலை ஒளியினிலே மயக்கம் சேருகையில்
மூலக் கருப்பொருளாய் முற்றாய் இனிக்கின்றான்"

காணும் பொருளிலெல்லாம் இறைவனைக் கண்டுமகிழும் பேறு கவிஞருக்கு வாய்த்த பெரும்பேறு!

"புனிதமுள்ள இஸ்லாத்தின் போதனைகள்
புத்தகத்தின் ரூபத்தில் இருப்பதனால்
மனிதர்கள் எப்பயனும் பெறமாட்டார்
வாழ்வினிலே கடைப்பிடித்தல் கூடுமென
உனதுள்ளம் கூறுகின்ற உண்மையினை
உலகிற்கு எடுத்தோத எழுந்திடுவாய்
மனிதரெலாம் மாமறையின் மறைபொருளை
மகிழ்வோடு எற்குமொரு காலம்வரும்"

எத்துணை ஏற்றமிக்க எதிர்பார்ப்பு; ஊக்கமிக்க நம்பிக்கை! இசுலாமிய உடன்பிறப்புக்கு ஒரு கவிஞன் கூறுதற்குரிய சிறந்த செய்தி இதனைவிட என்ன உண்டு!

"விடாமல் பெய்து வெள்ளம்வரின்
விளைவோ வாழ்வில் துயராகும்
அடடா அண்ணல் நபியென்னும்
அருளின் மாரி என்றென்றும்
விடாமல் பொழிய வேண்டுமென
வேண்டி நின்ற திவ்வுலகு!"

அனைத்துலக அருட்கொடையாம் அண்ணல் நபியின் அருண்மைக்கு எத்துணை இனிய விளக்கம்!

எடுத்துக்காட்ட இனிய அடிகள் எல்லாக் கவிதைகளிலும் உள்ளன. மலர்ச் சோலைக்குள் நுழையுமுன்னர், வாயிலில் தவழும் தென்றலில் கமழும் நறுமணத் துகள்களாகவே இந்த எடுத்துக்காட்டுகள் தரப்பட்டன.

கவிஞரின் கவிதைப் பண்புபற்றி ஒன்று சொல்லவேண்டும். தொல்காப்பியர் கவிதைக்கு எட்டு வனப்புகள் கூறுகிறார். அவற்றுள் முதலாவது அம்மை; மூன்றாவது தொன்மை. அறிஞர்களின் விளக்கப்படி, அம்மை என்பது, அன்னை குழந்தைக்கு கூறுவது போன்ற எளிமையும் இனிமையும் தெளிவும் இயைந்த நடை. தொன்மை என்பது, பண்டைய நிகழ்ச்சிகளை இன்றைய நடப்புகளில் ஏற்றிக்கூறும் உத்தி. இவை இரண்டுமே கவிஞர் தாஸிமுக்கு கைவந்து கைகொடுக்கின்றன. புயலாக வீச வேண்டிய உணர்வையும் கருத்தையுங்கூடத் தென்றலாகத் தவழவிடும் இவரது திறன் அரியது.

"சொர்க்க வாசல் திறந்திருந்தால்
சுகமாய் அங்கே புகலாமோ
மக்கள் துயரை உணராது
மார்க்கம் பேச வரலாமோ"

மக்களின் ஏக்கம் உணராமல் மார்க்கம் பேசுவோரைக் கிள்ளிவிடும் இந்த மெல்லிய அடிகள், மேற்கூறிய அம்மை வனப்புக்கு அழகிய எடுத்துக்காட்டு.

"தணலிடையே இட்டாலுங் கொள்கையதன்
தன்மையினைக் கைவிடாதே வளர்த்தோமே
மணலிடையே கால்புதைத்துச் சூரியனின்
மட்டில்லா வெப்பத்தைச் சகித்தோமே
கனல்பறக்கச் சினம்வந்தும் மனதுதன்னைக்
கல்லாக்கி இறைவனுக்காய்ப் பொறுத்தோமே
குணவொழுக்கக் குன்றின்மேல் அமைந்தவொரு
கோபுரத்தின் விளக்காகத் திகழ்ந்தோமே
பிணமாக நாமன்று வாழ்ந்திருந்தால்
பிழையில்லா வழியின்று காண்போமா
மணல்வீடு கட்டியிங்கு விளையாடி
மார்க்கத்தைப் பாழாக்கி விட்டோமே!"

நபிபெருமானார் காலத்து நிகழ்ச்சிகளை இன்றைய நிலைமைகளில் ஏற்றி உணர்வூட்டியிருக்கும் இந்த அடிகளில் தொன்மை எனும் உத்தி தொய்வின்றி வெளிப்படுகிறது.

இது, வெளிநாட்டுக் கவிஞரது நூலுக்கு அணிந்துரை எழுத நான்பெற்ற முதல்வாய்ப்பு. அ்து, அருமை உடன்பிறப்பு, கவிஞர் தாஸிமுடைய நூலுக்காக அமைந்தது பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

உடல்மருத்துவத்தைத் தொழிலாகக்கொண்ட மருத்துவர் தாஸிம், தம் கவிதைகளின்வழி மனமருத்துவத்தைத் தொண்டாகக் கொண்ட கவிஞராகவும் விளங்குகிறார். ஒருநோய் தீர்க்கும் பணியே உயர்ந்த தொண்டாகும் நிலையில், இருநோயும் தீர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் இவருக்கு, எல்லாம் வல்ல இறைவன் அழகிய நற்கூலிகளையும் பரிசுகளையும் வழங்குவானாக. இவரது தொழிலும் தொண்டும் தொடர்ந்து வெற்றிபெறவும், நற்பணி நிறைந்த வாழ்வில் எல்லா நலன்களும் இனிது வாய்க்கவும் வாழ்த்துகிறேன். இறைவன் அருள்வானாக!

உள்ளன்புடன்,
செ. சீனி நைனா முகம்மது,
பினாங்கு, மலேசியா
23-04-2011

***கல்விமான் எஸ்.எச்.எம். ஜெமீல் MA***
***முன்னாள் அமைச்சுச் செயலாளர் அவர்களின் வாழ்த்துரை***

கவிதை, சிறுகதை, நாடகம், கட்டுரை, இலக்கிய ஆய்வு, வானொலி, தொலைக்காட்சி மற்றும் பட்டிமன்றம் என்பனவற்றில் ஈடுபாடு கொண்டுள்ள வைத்திய கலாநிதி தாஸிம் அகமது அவர்கள் வைத்தியம் மற்றும் இலக்கியத்தில் பிரகாசித்துவரும் குடும்பமொன்றின் ஐந்தாவது தலைமுறையைச் சேர்ந்தவராவார்.

கிழக்கு மாகாணத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் கல்விப் போதனைத் தலங்களாயிருந்த காலத்தில், பிரபல்யம் பெற்று விளங்கிய ஒருவர் 'பெரிய வாத்தியார்' என்பவராவார். இவர் வைத்தியத்திலும் சிறந்து விளங்கினார். அவரது காலத்திலிருந்து தற்போதுள்ள ஏழாம் த்லைமுறைவரை, இப்பரம்பரையைச் சேர்ந்த 43 பேர் மருத்துவ துறையில் தமது சேவைகளை அர்ப்பணித்தோரவர். இன்னும் பலர், அன்றையப் புலவர்களிலிருந்து இன்றையக் கவிஞர், ஆய்வாளர் வரை இலக்கிய கலைத்துறைகளிலும் சிறப்புற்று விளங்குவோராவர். இத்தகைய பரம்பரைப் பின்னணி தாஸிம் அகமதுவுக்குண்டு. இவரது தந்தை மிராஸாஹிப் அகமதுவும் ஒரு வைத்தியரும் இலக்கிய வாதியுமாவர்.

கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் நான் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் அங்கு நல்மாணாக்கனாகக் கற்றுக் கொண்டிருந்த தாஸிமின் முதலாவது கவிதையான 'வாழும் புலமை' அம்மாணவப் பருவத்திலேயே தினபதி பத்திரிகையில் பிரசுரமானதை இன்று மகிழ்ச்சியுடன் பின்னோக்கிப் பார்க்க முடிகிறது. அதனைத் தொடர்ந்து 'கவிஞன்' எனும் சஞ்சிகையின் மூன்றாம் இதழில் இவரது கவிதையான 'நம்பிக்கை' 1970 இல் வெளிவந்தது. இவற்றினைத் தொடர்ந்து நூற்றுக் கணக்கான கவிதைகளை யாத்துள்ள இவரின் தொகுப்பு நூல்கள் 'வெள்ளையில் ஒரு புள்ளி' 'சுழற்சிகள்' என்பனவாகும்.

முற்போக்கு, பிற்போக்கு, நற்போக்கு, மரபு, புதுக்கவிதை எனப்படும் கோஷ்டிகளுக்குள் சிக்கித் தனது பார்வையையும், பங்களிப்பையும் சுருக்கிக் கொள்ளாது, மரபுக் கவிதை மற்றும் புதுக்கவிதை எனும் இரண்டிலும் காலூன்றியுள்ளதோடு அகலமான இலக்கியப்

பார்வையையுடைய இக்கவிஞர், ஏனைய கவிஞர்களுக்கும் அத்தகைய தளமொன்றினை அமைத்துக் கொடுப்பதில் முன்னின்று உழைத்திருக்கிறார். தலைநகரான கொழும்பில் 1981இல் ஆரம்பிக்கப்பட்டு மிக உற்சாகமாகவும் கிரமமாக நிகழ்ச்சிகளை நடத்தியும் வந்த வலம்புரி கவிதாவட்டத்தின் (வகவம்) ஸ்தாபகத் தலைவர் இவராவார். அதன் செயலாளர் கவின் கமல் (இர்ஷாத் கமால்தீன்) ஆவார். மாதாந்தம் பௌர்ணமி தினங்களில் திறந்த வெளிக் கவியரங்குகள் நடத்திப் புகழ்பெற்றது இவ்வகவமாகும். இத்தகைய 90 கவியரங்குகளை நடத்திய இக்கவிஞர் குழாம் தனது கவியரங்குகளை நாட்டின் பல பாகங்களிலும் நடத்தியுள்ளது.

கொழும்பு கவின்கலை மன்ற முன்னாள் தலைவர் உலக இஸ்லாமியத் தமிழிலக்கிய 2002 (கொழும்பு) மாநாட்டின் இணைப்பாளர், இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் முன்னாள் தேசிய இணைப்பாளர், இலங்கை இஸ்லாமிய முற்போக்கு இலக்கிய மன்றத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர், உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மலேசிய மாநாட்டின் இலங்கைக் குழுவின் செயலாளர் என அவரது பணிகள் விரிந்து செல்கின்றன. அதிலும் சிறப்பு யாதெனில் பிரபல்ய மருத்துவராகத் தனது பெருந்தொகையான நோயளர்களுக்கு வைத்தியம் செய்துகொண்டே, இத்தகைய பணிகளையும் முன்னெடுத்துச் செல்லும் ஆற்றலும் ஆர்வமும் இவருக்கிருப்பது வியந்து நயக்கத்தக்கதாகும். ஒரு நூற்றாண்டு வரலாற்றினைக் கொண்ட கொழும்பு கொம்பனித் தெருவிலமைந்துள்ள நூலகத்தின் இன்றையத் தலைவருமாவார்.

இளமையில் முகிழ்ந்த கவித்துவத்தை வளர்த்தெடுத்து வளமாக்கியெடுப்பதில் அருகேயிருதவர் இன்னொரு கவிஞராவார் என்பதைத் தாஸிம் அகமது ஒருபோதுமே பெரிய சத்தத்தில் எடுத்துகூறிப் பெருமையில் பங்குபோட முண்டியடித்துக் கொண்டதில்லை. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸைத் தொடங்கி, அதனைப் பாரிய விருட்சமாக்கி, இந்நாட்டு முஸ்லிம்களுக்கு அரசியல் நிழல் வழங்கிச் சரியான பாதையில் அவர்களை இட்டுச் சென்ற மாபெருந் தலைவர் அஷ்ர..ப் எனும் அதிமானுடனைப் பற்றி இன்று எத்தனையோ பேர் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். அவர்களுள் எத்தனையோ பேர் பிறப்பிலிருந்து தாமே அஷ்ர..பின் ஆப்த நண்பர்கள் போலும், ஆஸ்தான ஆலோசகர்கள் போலும், அவர்களின்

ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் விரும்பிக் கேட்டே அவர் செயற்பட்டதுபோலும் எழுத்திற் பதிந்து கொண்டிருக்கிறார்கள்; ஆனால் இவர்கள் அனைவரையும் விட, அஷ்ர.்.பின் மிக இளமைக் காலத்திலிருந்தே கனிஷ்ட பாடசாலை மாணவத் தோழனாகவும், கொழும்பில் இளைஞனாக வாழ்ந்த காலத்தில் ஒரே அறையில் வாழ்ந்து சகல சுக துக்கங்களிலும் பங்கு கொண்டவரும், இறுதிக் காலம் வரை மிக அமைதியாக அந்நட்பைப் பேணியவரும், அஷ்ர.்.பிடம் எத்தகைய உதவியைக் கேட்காதவரும் தாஸிம் ஆவார். எனவே தலைவர் அஷ்ர.்.பின் வாழ்க்கை வரலாற்றினை எழுதுவதற்கு அதி தகுதியுடையவர் இவரேயாவார். மறைந்த தலைவரின் பெயரைத் தம்மோடு தொடர்பு படுத்தி எவரெவரோ பிரபல்யம் தேடிக்கொண்டிருக்கும் ஒரே காலகட்டத்தில் தனது புகழ்பாடத் தனது ஆப்த நண்பனின் பெயரை தாஸிம் உபயோகிக்காதிருப்பது எவ்வளவு உயர்ந்த பண்பாகும். இதே போன்றுதான் அஷ்ர.்.ப் அவர்களின் அரசியல் வரலாற்று ஆணிவேரின் ஆழத்தையும், அந்தஸ்த்தின் உச்சத்தையும் அறிந்தவர். அக்கட்சியின் செயலாளரும் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ரி. ஹஸன் அலி ஆவார். ஏனைய அனைவரும் அதற்கடுத்த படியிலுள்ளோரேயாவர்.

இஸ்லாமிய எழுச்சிச் சிந்தனைகளை இலக்கியமாக்க வேண்டும் எனும் உணர்வு அஷ்ர.்.ப் மற்றும் தாஸிம் போன்றோரின் இளமைக்கால அபிலாஷைகளாகும். காலக்கிரமத்தில் அவை நிறைவேறின இலங்கை வானொலியில் ஒலிபரப்பான 'அன்புச் சகோதரிக்கு' எனும் கவிதைத் தொடர் தாஸிமின் வெளிப்பாட்டினைப் புலப்படுத்திய இளமைக்கால செயற்பாடாகும். இப்போது வெளியிடப்படும் 'கண் திறவாய்' எனும் கவிதைத் தொகுதி அதன் பக்குவப்பட்ட முதிர்ச்சி நிலையேயாகும். மரபில் அமைந்த அழகிய பொதுக் கவிதைகளையும், தத்துவ, அறிவுரை மற்றும் இஸ்லாமிய எழுச்சிக் கவிதைகளையும் தரும் இந்நூல் அனைவரது கவனத்தையும் நிச்சயம் ஈர்க்கும்.

தாஸிமின் கலை இலக்கிய ஈடுபாடும் கவிதா வளமும் பெருக இறைவனின் துணை என்றும் குன்றாதிருக்க இறைஞ்சுகிறேன்.

மே 2011 எஸ்.எச்.எம். ஜெமீல்

## ஆசியுரையும் அறிவுரையும்

என் அகத்தமர்ந்த வைத்திய கலாநிதி இலக்கிய வாரிதி தாஸிம் அகமது அவர்களுக்கு மருதூர் மஜீத் எழுதிக் கொள்வது நலம், விழைவதும் அ.்.தே, நிற்க தங்களின் "கண்திறவாய்" நூலுக்கு ஆசியுரை கேட்டபோது அகமகிழ்ந்தேன். உங்களின் வெள்ளையில் ஒரு புள்ளி, சுழற்சிகள், ஆசுகவி வாழ்த்துப்பா ஆகிய நூல்கள் எனைக் கண்திறவாய் எனக் கூறுகின்றன.

வெள்ளையில் ஒரு புள்ளியில் உள்ள கவிதைகள் உங்கள் தமிழ் இலக்கியப் புலமைக்கு தக்கசான்று. நீங்கள் எனது தமிழ் வகுப்பு மாணவராய் கல்முனை ஸாஹிராவில் படித்தபோது முளையில் தெரியும் விளையும் பயிர் எனத் தெரிந்து கொண்டேன். வைத்தியம், கவிதை இரண்டின் உறவும் நெருக்கமானது. உங்களுக்கு கவிதையும், வைத்தியமும் கைக்கெட்டிய தூரமே பரம்பரை கற்றுப்பாதி கல்லாமல் பாதியல்லவா. கண்களாய் இரண்டையும் காத்தலும் கடன்.

தொட்டால் நோய் தீரும் கைராசி உங்களுக்கு அதனால் கவிதையை விட்டாலும் விடுவீர்கள் என்ற பயம் எந்தனுக்கு ஆகவே உரிமையோடு இரண்டையும் அணைத்து ஆதரித்து மனிதமேன்மைக்கு பயன்படுத்துமாறு அறிவுரை கூறி உங்களின் கண் திறவாய் கவிதை நூல் மலேசிய மண்ணில் அற்புத வெளியீடாக ஆகக்கடவது என ஆசியும் கூறி விடைபெறும்.

மணிப்புலவர்
மருதூர் ஏ. மஜீத்
B.A. (Hons),Dip.in Education (P.G) S.L.E.A.S.

மே மாதம் 2011

## இலட்சியக் கவிதைகளுக்குக் கிடைத்த பேறு

நீண்ட இடைவெளிக்குப்பிறகு கண்திறவாய் எனும் இந்நூல் வெளிவந்திருக்கிறது. வெள்ளையில் ஒரு புள்ளி, சுழற்சிகள் ஆகிய எனது இரு கவிதைத் தொகுப்புகளும் கவிதைப்பிரியர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று இன்றும் பேசப்படுகின்றன. சுழற்சிகளில் வெளிவந்த அநேக கவிதைகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வெவ்வேறு சேவைகளில் அடிக்கடி ஒலிபரப்பப்பட்டன. ஒலிபரப்புக்கு உதவியர்களுக்கு நன்றிகள்.

இந்திய மாதஇதழான இனிய திசைகளில் சுழற்சிகளிலுள்ள பல கவிதைகள் பிரசுரிக்கப்பட்டன. அதன் ஆசிரியர் எனது ஆப்த நண்பர் பேராசிரியர் சேமுமு முகம்மதலி அவர்களுக்கும் நன்றிகள்.

வெள்ளையில் ஒரு புள்ளி மறுபிரசுரம் செய்ய படவேண்டும் என எனது இலக்கிய நண்பர்கள் வேண்டிக் கொண்டிருக்கின்றனர். மேலும் வெளிவராத நூற்றுக்கணக்கான கவிதைகள் என்வசமுள்ளன. அவற்றைத் தொகுத்து எதிர் காலத்தில் வெளியிடும் போது வெள்ளையில் ஒரு புள்ளி, சுழற்சிகள் ஆகியவற்றை மறுபிரசுரம் செய்ய எண்ணியுள்ளேன்.

இலக்கிய நண்பர்களான காப்பியக் கவிஞர் ஜின்னா ஷரிபுத்தீன், கவித்தாரகை அல்அசூமத், யாத்ரா ஆசிரியர் கவிஞர் அஷ்ரப் சிகாப்தீன் ஆகியோர் எனது இஸ்லாமிய எழுச்சிக் கவிதைகள் தொகுக்கபட்டு வெளியிடப்பட வேண்டுமென அதிக ஆர்வம் காட்டியதோடு அன்புத் தொல்லையும் கொடுத்துக் கொண்டிருந்தனர். இத்தொகுப்பிலுள்ள பல கவிதைகளை நண்பர் அஷ்ரப் சிகாப்தீன் யாத்ராவில் பிரசுரித்து உதவினார்.

கவிஞர் அல் அசூமத் எனது கவிதைகள் அனைத்தையும் பார்வையிடுவதற்காக என்னுடன் பலநாட்களைக் கழித்துள்ளார். கண்திறவாயிலுள்ள இஸ்லாமிய எழுச்சிக் கவிதைகளை வியந்து பாராட்டியதோடு பல சந்தர்ப்பங்களில் பல வாழ்த்துக் கவிதைகளையும் நான் வேண்டிக் கொள்ளமாலேயே எழுதி வைத்து விட்டுச் சென்று விடுவார். அவற்றுள் ஒன்று இத் தொகுப்பில் இடம் பெறுகின்றது.

நான் எழுதியுள்ள பல்வேறு பாவினங்களில் அமைந்துள்ள கவிதைகளுள் இஸ்லாமிய எழுச்சிக் கவிதைகள்தாம் எண்ணிக்கையில் அதிகமானவை. அவற்றைத் தொகுத்து வெளியிடுவதற்கு தகுந்த சந்தர்ப்பமொன்றை எதிர்பார்திருந்தேன். அச்சந்தர்ப்பம் மலேசியாவில் நடைபெறும்

உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டின் போது கிடைத்தது பெரும் பேறெனக் கருதுகிறேன். "இலட்சிய வாழ்வுக்கு இஸ்லாமிய இலக்கியம்" எனும் மலேசிய மாநாட்டு தொனிப் பொருளுக்கு ஏற்ற விதத்தில் எனது கவிதைகளும் அமைந்திருப்பது எனக்குக் கிடைத்த இன்னுமொரு பேறாகும். முஸ்லிம் பெண்ணே எனும் தலைப்பில் அந்தாதித் தொடர் ஒன்றை இத்தொகுப்பில் சேர்த்துள்ளேன். அத்தொடர் ஒரு புதிய வடிவமாக அறிமுகப்படுத்தப் படுகின்றது. அதுபற்றிய வாசகர்களின் கருத்துக்களை வரவேற்கின்றேன்.

மறைந்த மாமனிதர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களுக்கும் எனது இஸ்லாமிய எழுச்சிக் கவிதைகளுக்கும் நிறையத் தொடர்புகளுண்டு. அந்தப் பின்னணியை ஒரு நூலாகவே எழுதி வெளியிடலாம். விரிவஞ்சி விடுக்கின்றேன். இத் தொகுப்பிலுள்ள அநேக கவிதைகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தொலைக்காட்சி, மேடை நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் ஒலிபரப்பப்பட்டும், வாசிக்கப்பட்டும் வரவேற்பைப் பெற்றன. தொகுப்பாக நூல்வடிவில் வரும்போது வாசகர் பரப்பு விரிவடையும் என்ற எதிர்பார்ப்புடன் இந்நூலை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டின் வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையிலும் நான் அனுப்பிவைத்த எனது கவிதைகள் அடங்கிய இறுவட்டினை ஆற அமர இருந்து பார்வையிட்டு அழகியதோர் அணிந்துரையை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்த மலேசியாவைச் சேர்ந்த இறையருட் கவிஞர் செ. சீனி முகம்மது அவர்களுக்கும் உடன் உதவிய நண்பர் பிதாவுல்லாகான் அவர்களுக்கும் எனது ஆழ்ந்த நன்றிகள். வாழ்த்துரை வழங்கிய எனது ஆசரியர் கல்விமான் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள், ஆசியுரை வழங்கிய எனது இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆசான் மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் அவர்கள், பக்க அமைப்பிலும், கணணி வடிவமைப்பிலும் உதவிய எனது பெறாமகள் செல்வி புவனா, மற்றும் பதியுஸ்ஸமான், அட்டைப்படம் வரைந்து உதவிய மேமன்கவி, எனது நூலாக்கத்திற்கு மறைமுகமாக இருந்து உற்சாகமளித்த பாராளுமன்ற உறுப்பினர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் எம்.ரி. ஹஸன்அலி அவர்கள், அனிஸ்டஸ் ஜெயராஜ், எனக்குப் பின்னாலிருந்து பொறுமைகாத்து உதவிய எனது அன்பு மனைவி சித்தி ஜெரீனா. நூலாக்கம் செய்து தந்த ஏ.ஜே. பிரின்டர்ஸ் ஆகியோருக்கு எனது நன்றிகள்.

*எங்கும் ஆளும் ஓர் இறைக்கே எல்லாப் புகழும் உரித்தாகும்.*

தாஸிம் அகமது

மே மாதம் 2011 கொழும்பு 02

ஆசுகவி கவித்தாரகை

## அல்அஸூமத் அவர்களின் சாற்றுக் கவிதை

வெளிச்சமும் காற்றும் வியத்தகு காட்சித்
தெளிவும் சிறப்புடன் அமைந்ததோர்
பாதையை விட்டுப் பயங்கரம், பாழிருள்,
வேதனை சூழ்ந்த வெறுமைத் தரையில்
உலகோர் நடக்கும் உபத்திரவத்தைப்
புழுங்கும் மனதால் புகைபப்பட மெடுத்துக்
கலங்கும் மென்மைக் கவிஞர் அஹமது
இலங்கைக் கவிஞர் இவரோ புவியின்
அனைத்து நன்மையும் அளக்கத் துடிப்பவர்
மனத்துள் வீழ்ந்த மாயக் கறுப்புப்
புள்ளியை அளக்கப் புறப்பட்டுள்ளார்
வெள்ளையாம் அவரின் வீர நெஞ்சின்
தமிழால் அல்லல் தலைகுனிந்ததுவே!
சமகால கவிஞருள் தாஸீம் அஹமதோர்
உலகக் கவியாய் உயர்ந்து வருகின்றார்.
உலகெலாம் எமக்காம் ஊரே எனுஉம்
மொழியை அவரும் முன்னால் வைத்துளார்.
அழூஉம் அவரின் அகத்தால் நாமும்
புதிதோர் உலகையே போற்றுதல் கொண்டோம்.
சதிகளின் நரகாய்ச் சந்தியில் நிற்கும்
நிலத்தை எமது நெஞ்சுள் உறுத்திக்
கலக்கிச் செல்லும் கவிஞரின் கூற்றுகள்
வேண்டும் எமக்கோர் வேறோர் உலகெனத்
தூண்டி யறுக்குந் தொழிலைச் செய்யும்
கனிகள் இருப்பவோர் காய்கள் கவர்தல்
எனுமொழிக் கிணங்கிடற் கிவர்தம் தமிழின்
மென்னடை தேசிக விநாயகம் பிள்ளையின்
தண்ணடை ஒத்துத் தரளமாய் ஒளிரும்

குற்றவாளியின் குறுவாள் தானும்
இற்றுச் சாணை இழந்திடும் மொழி நடை
அறுகும் முறைகள் அற்புதம்! எனினும்
முனை மழுங்கியதோர் முரட்டுலகிற்கோ
சிறிதாய்க் கடுமையும் சேருதல் வேண்டும்!
மருத்துவரானதால் மருந்தின் கடுமையை
வார்த்தையில் நீத்திட வரித்தனர் போலும்
நேர்த்தியாய் மரபின் நிழலில் அமர்ந்து
யாத்துள கவிதையில் ஆங்காங்கிடையே
சேர்த்துளார் சிற்சில செருகலை மீறி
அவையும் கவிதைக்கனிசெய்துளவே
புவியினர் எவர்க்கும் புரிந்திடற் காயவர்
இலகு தமிழிலே இசைத்துள கவிதைகள்
வளரும் கவிஞரை மரபிலும் வளர்க்கும்
மனங்களைக் கவரும் மரபுக் கவிதையில்
தனியாம் இடத்தைத் தாஸிம் அஹமது
பிடித்தனர், கிழக்கின் பெருமையைக் காக்கும்
படிப்பினை அவராற் பரந்தது காண்பீர்
மருத்துவத் தொழிலுடன் மனங்கவர்
மரபும் தாஸிமும் வாழிய நீண்டே.

-அல்அஸுமத்-

**கண் திறந்தால்.....**


| | |
|---|---|
| அவன் | 01 |
| எந்நாளோ? | 03 |
| வேணவா | 05 |
| தரமாய் வாழ்வோம் | 07 |
| அவர்கள் | 09 |
| கண்திறவாய் | 12 |
| ஏக்கம் | 16 |
| பிறையே நீ சாட்சி | 18 |
| பகட்டு விடு | 22 |
| பிணியும் மருந்தும் | 24 |
| காலம்கருதி...... | 27 |
| எதிர்பார்ப்பு | 29 |
| ஈடேறவழி | 32 |
| நெஞ்சக்கனல் | 36 |
| வருக ரமழானே | 38 |
| அற்புதப் பரிசு | 40 |
| நம் கடமை | 43 |
| எமது முகவரி | 44 |
| தோழனுக்கு...... | 45 |
| ஆதர்சம் | 47 |
| முரண்படாதிரு | 49 |
| தியகத்தில் மலரும் மலர் | 51 |
| அழிக்க முடியாத ஆத்மாக்கள் | 53 |
| இறைவனின் பிரதிநிதிகள் | 61 |
| பாத்திமாவே | 64 |
| உபாயம் | 66 |
| குர்ஆனின் வழி நடப்போம் | 68 |
| வணக்கத்துக்குரியவன் | 69 |
| நர்ன் கண்ட உமர் | 71 |

## அரங்கக் கவிதைகள்


வைரியின் வலை காணாய் 75
விடாமல் பொழியும் பெருமானார் எனும் அருள்மாரி 82
நபிமணி நயந்த நற்பெருநாள் 87
இறுதி ஹஜ் 93
மீறல்கள் 100
நலிவுற்றோர் வாழ்வுக்கு ஒளி தந்த நபிமணி 106


## முஸ்லிம் பெண்ணே


முஸ்லிம் பெண்ணே 113
திருக்குர்ஆன் 114
கல்விச் செல்வம் 115
நாளையச் சமூகம் 116
நல்லாட்சி 117
சுவனம் 118
இன்பம் 119
மகிழ்ச்சி 120
வெற்றி 121
அர்ப்பணம் 122
சீர்மை 123
புது வாழ்வு 124
இன்ப வாழ்வு 125
அழகிய நன்மை 126
தெளிவு 127


## பாமடல்


தனிமரமும் தோப்பாகும் 128

# அவ்ன்

இரவின் அமைதியிலே
இவ்வுலக முறங்குகையில்
ஒருவன் மட்டுந்தான்
உறங்காதிருக்கின்றான்!

மாலை ஒளியினிலே
மயக்கம் சேருகையில்
மூலக் கருப் பொருளாய்
முற்றாய் இனிக்கின்றான் !

நீலக் கடலினிலே
நெளியும் அலையாகிக்
கோலச் செறிவுகளைக்
கொண்டு வருகின்றான் !

## 02

சோலை மலர்களிலே
தூய வடிவாகிச்
சீலச் சுவைகளினைச்
சிந்தத் தருகின்றான்!

ஓலைக் குடிசையிலே
ஒதுங்கும் மனிதனுக்கும்
மேலாம் வாழ்வளித்து
மேன்மை செய்கின்றான் !

முதலாம் பொருளாகி
முற்றும் அறிந்தவனாய்
எதிலும் உறைகின்ற
இறைவன் அவனாவான் !

# எந்நாளோ

பொருளிற் புதுமை காண்போமே
புலரும் அந்நாள் எந்நாளோ!
தெருளும் நீங்கிப் பாவத்தைத்
தீண்டா திருப்பதும் எந்நாளோ?
இருளைப் போக்கி இவ்வுலகில்
ஏற்றங் காண்பதும் எந்நாளோ!
அருளைச் சொரியும் இறைவனடி
அறிந்து வணங்குவ தெந்நாளோ!

நீதி நெறிக ளெங்கெங்கும்
நிறைந்து காண்ப தெந்நாளோ?
சோதி பரப்பி மக்கள் துயர்
துடைத்து மகிழ்வ தெந்நாளோ?
ஓதி யுணர்ந்தோ ரவ்வழியில்
ஓர்ந்து நடப்ப தெந்நாளோ?
நாத ரிறசூல் நபிமணியின்
நல்வழி தொடர்வ தெந்நாளோ?

பாதம் நோகச் சேவைசெய்து
பகட்டை வெறுப்ப தெந்நாளோ?
காதல் நெஞ்சங் கொண்டேநாம்
கருணை பகிர்த லெந்நாளோ?
மோதல் முட்டல் ஏதுமின்றி
மோட்சங் காண்ப தெந்நாளோ?
சாதி வெறியைத் துரத்தித்
தகர்த்தே எறித லெந்நாளோ?

கள்ளின் மடியில் மயங்கியுறங்கும்
கயமை மடிவ தெந்நாளோ?
துள்ளித் திரியும் மனதையடக்கித்
தூய்மை செய்த லெந்நாளோ?
பிள்ளை மனதாய் நாங்களெல்லாம்
பேதம் நீக்குதல் எந்நாளோ?
உள்ளத் தொளியைப் பற்றிஇறைவன்
உவப்பைப் பெறுவது மெந்நாளோ?

காலச் சுழலில் உருண்டு வளரும்
காவியம் வளர்த்தல் எந்நாளோ?
சாலச் சிறந்த கற்பனை கொண்டு
சற்கவி புனைதல் எந்நாளோ?
கோலக் கைகள் சிவக்கும் வண்ணம்
கொடுத்து மகிழ்வ தெந்நாளோ?
நாள்தா னதுவோ நம்கனவு
நனவாய் மாறும் பொன்னாளே!

# வேணவா

என்னுடைய இதயம்
எனது சமூகத்துக்காய்
இறவாமல் இருக்க வேண்டும்!
கண்கள் இரண்டும்
காலத்தால் ஒளியிழந்து
மங்காது மிருத்தல் வேண்டும்!

இதயத்தின் அடியினிலே
இழையோ டுகின்றனவே
புதிதான எண்ணங்கள்
புரட்சிமிகு கருத்துக்கள்

இதயத்தினடியினிலே
இத்தனையு மிருந்தாலும்
உதவாத சில பேரும்
உலகத்தில் வாழ்கையிலே....
சிதைகின்ற அவர் வாழ்வைச்
சிந்தித்துப் பார்க்கையிலே....

என்னுடைய இதயம்
எனது சமூகத்துக்காய்
இறவாமலிருக்க வேண்டும்!

கோடரிக் காம்புகளாய்க்
குவலயத்தில் வாழ்வோரின்
கோடரி இதயங்கள்
கூட்டாய் இயங்குகையிலே



தாஸிம் அகமது

உண்மையை மூலையில்
ஒதுக்கி வைப்பவரின்
கண்கள் ஒளி மிகுந்த
காட்சி ரசிக்கையிலே...

என்னுடைய இதயம்
எனது சமூகத்துக்காய்
இறவாமலிருக்க வேண்டும்
என்னுடைய இதயம்
இறவாமலிருக்குமெனில்....

பொன்னான இதயங்கள்
பலதை உருவாக்க
என்னாலிப் புவியில்
இயலாது போய்விடினும்
பொன்னான என் சமூகம்
புழுதியில் புரளாது
நன்றாய் வாழ்வதற்கு
நலியாதுழைத்திடுவேன்!

என்னைப் போல் வேறு சிலர்
இருக்கின்றார் அவருடனே
என்னுடைய இதயமும்
எனது சமூகத்துக்காய்
இறவாமலிருக்க வேண்டும்
கண்கள் இரண்டும்
காலத்தால் ஒளியிழந்து
மங்காதுமிருத்தல் வேண்டும்

– யாத்ரா

07

# தூய்மையாய் வாழ்வோம்

நெஞ்சின் முள்ளாய்க் குத்துகின்ற
நீசத் தனங்கள் பலபோக்கிப்
பஞ்சப் பிணிகள் அனைத்துடனே
பாவச் செயல்கள் தமைநீக்கி
நெஞ்சம் உருகி நினைவிழந்து
நெய்யாய் வடிந்து இறைவன்பதம்
அஞ்சி அஞ்சித் தொழுதிந்த
அகிலந் தன்னை உயர்த்துவமே!

ஆசை வெறியைப் பணியாக்கி
அன்பு நெறிக்குப் புகழூட்டி
வேசை உறவை வெறுப்பாக்கி
வெற்றிப் பாதை பலகாட்டி
மோசச் செய்கை பலபகைத்து
முக்தி வழிக்கு உயிரூட்டிப்
பேசும் பேச்சை இனிதாக்கிப்
பிரிவினை நீக்கி உயர்வோமே!



தாஸிம் அகமது

சுமைகள் தாங்கும் திடம்கொண்டு
தூய்மை வாழ்வுக் கணிசெய்து
நமது முன்னோர் காட்டிநின்ற
நல்ல வழிக்கு மெருகூட்டி
எமது வாழ்வில் வருந்துன்பம்
எதுவும் சகிக்கும் மனங்கொண்டே
அமைதி நிலவும் பான்மையுடன்
அறிவைத் தேடி உயர்வோமே!

இருந்து கையிற் கோலேந்தி
எழுதும் எழுத்தா லுணர்வூட்டி
உருண்டு வளரும் வாழ்வினிலே
உள்ள ஊழல் தமைப்போக்கி
இருண்டு கிடக்கும் சமுதாய
எழுச்சிக் காகக் கரந்தூக்கித்
திரண்ட மக்கள் குழாமாக
தெய்வ சக்தியைப் புகழ்வோமே!

அண்ணல் நபியின் மணிமொழியை
அறிவுக் கடலாய் நாம்கருதி
எண்ணித் துணிந்து கருமங்கள்
இதய சுத்தி யுடன்செய்து
மண்ணுக் கிரையாய் மடிகின்ற
மனிதன் அடையும் சுகபோகந்
தன்னை நினைத்து வருந்தாது
தரமாய் வாழத் துணிவோமே!

# அவர்கள்

நமக்கு முன்னே வாழ்ந்தவர்கள்
எழுதி வந்த கோல்கள் எங்கே?
தமக்கெனவே வாழாத
தலைவர்களின் கருத்து மெங்கே?
நமக்கெனவே பொது வழியும்
நமக்கெனவே அரசியலும்
நமக்கெனவே இல்வாழ்வும்
நல்கியவர் இன்றெங்கே?

இரத்தத்தை வீரத்தின்
இலட்சியத்தின் பாதையிலே
சுரக்க வைத்துச் சிந்தியவர்
சுக்கானாய் முன்நின்று
இரத்தத்தின் களரியிலே
எமது படை நடத்தியவர்
பரத்தையர்கள் கூட்டத்தைப்
பறக்க வைத்து ஓட்டியவர்
சிரத்தையுடன் காத்து வந்த
சீர்மைகளும் இன்றெங்கே?

அவர்களது வாள்நிழலில்
எத்தனையோ ராஜ்ஜியங்கள்
நவமான பொக்கிஷங்கள்
நாடாளும் பல மன்னர்
அவைகள் ஆட்சி நெறிகள்
சுவையுள்ள வரலாற்றைச்
சொரிய வைத்த சிந்தனைகள்
இவையெல்லாம் எங்களுக்கும்
இனிமேலும் கிடைக்காவோ?

போர்க் களத்தின் மத்தியிலே
பொங்கு சினம் கனல் பறக்க
வீரத்தைக் காட்டியவர்
வெற்றி பெற்ற தலங்கள் எங்கே?
'போர் செய்யும் இலட்சியமும்
பொங்கு சினம் போக்கவல்ல
நேர் நின்று போராடி
நீதியினை வளர்த்திடவே'
என்றவர்கள் ஏந்தி நின்ற
இலட்சியத்தின் வாள்கள் எங்கே?

அவர்களின் பிரார்த்தனைகள்
அத்தனையும் இறையோனால்
அவமதிக்கப் படாதிருந்த
ஆச்சரியம் எப்படியோ?
அவர்கள் பிரார்த்தித்தால்
அவர்கள் வேண்டி நின்றால்
அவர்கள் நினைத்தவைகள்
அவர்கள் காலடியில்....

 தாஸிம் அகமது

ஆனாலும் அவர்கள்
அப்படியும் வாழவில்லை
வீணான உணர்ச்சிக்கு
வேண்டாத தேவைக்குத்
தானாக விளைகின்ற
தப்பான நினைவுக்குத்
தேனாக அவையெல்லாம்
தித்திப்பாய் இனித்தாலும்
வீணான தென்றவற்றை
வீசினரே யார்க்காக?

வீசுகின்ற காற்றிடையே
மேலெழுந்து பறக்கின்ற
தூசுகளும் அவர்களது
துயர் சரிதம் கூறிநிற்கும்
மாசகற்றி இப்புவியில்
மறுமலர்ச்சி காணவைத்தோர்
பேசி நின்ற பேச்செல்லாம்
பிரிந்தெங்கே இருக்கிறதோ?
அங்கேதான் எங்களது
எதிர்காலம் மறைந்திருக்கும்

உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு 2002 - கொழும்பு சிறப்புமலர்

நாம் இங்கே எதற்காகப் பிறந்துள்ளோம்
நரகத்தின் வாயில்களை திறப்பதற்கா?
தூய்மைமிகு வாழ்வுதந்த முன்னோரின்
சுவடுகளை அழித்திங்கே இன்புறவா?
நாமமது முஸ்லிமென இருந்துகொண்டு
நாசத்தின் எல்லைகளை மிதித்திடவா?
ஊமைகளாய் இருப்பதனா லேதுபயன்
உணர்ச்சிகளை மூட்டைகட்டி வைத்தோமா?
ஏமாந்து விட்டோமே நாமெல்லாம்
எதிர்காலக் கோட்டைகளைத் திறப்பதற்காய்
ஈமானின் விளக்கொளியில் நடப்பதற்காய்
இனிமேலும் உணர்ச்சி பெற வேண்டாமா?

மெய்யான ஞானத்தின் ஊற்றெல்லாம்
மேலான திருமறையில் ஊறிநிற்கப்
பொய்யான செயற்கையெனும் ஊற்றினிலே
புரண்டெழுந்து நடப்பதற்கு நாணிலையா?
கொய்யாத மலர்களின் மணமேபோன்று
கூம்பிவிட்ட மலர்மணமும் தந்திடுமா?
செய்யாத அருஞ்செயல்கள் இருந்துமதைச்
செய்யாம லொதுக்குவதால் நன்மையுண்டா?
பெய்யாத வானிலையைப் பழிப்பதனால்
பெருமழையு மிப்புவியில் பெய்திடுமா?
எய்யாமல் அம்புகளை மறைத்துவிட்டோர்
இலட்சியத்தைக் குறிபார்த்தலது நன்றா?

கண்வெளுத்தே உடல்நலியச் சேவைசெய்த
கனவான்கள் அடைந்தநிலை தெரியாதா?
மண்ணுலகில் தலைகாட்டும் பாவத்தை
மறைப்பதற்கும் எவராலும் முடியாதா?
புண்பட்டுக் கிடக்கின்ற சமூகத்தைப்
புழுதியிலே புரட்டுவதால் சொஸ்தமுண்டா?
'எண்ணத்தின் சாயல்தான் செய்கைகளும்'
என்றுநபி சொன்னதுமே படுபொய்யா?
கண்ணிமைகள் இரண்டினையும் திறத்தலின்றிக்
கனவுலகில் சஞ்சரித்தால் நன்மையுண்டா?
உண்மைக்குச் சாவுமணி அடித்துவிட்டே
ஒளிந்திருந்தால் நம்நோக்கு வென்றிடுமா?

வீரத்தின் முத்திரையை நாமன்று
வெற்றியுடன் பதித்தின்பம் பெற்றோமே!
நேரத்தைப் பொன்னனவே மதிப்பிட்டு
நெற்றியினால் வியர்பனிக்க உழைத்தோமே!
தூரத்தைக் கருதாது நெடுவழியில்
தொடர்ந்துசென்று நம்நோக்கு வளர்த்தோமே!
பாரத்தைக் கருதாது நெஞ்சுகளால்
பளுவுள்ள சுடுகல்லைச் சுமந்தோமே!
தீரத்தைத் தோளிரண்டின் மேலேயும்
திரட்டிவைக்கத் துணிந்தோமே! ஆனாலும்
வீரத்தின் முத்திரையை நாமின்று
விலைமாதர் மடியினிலே பதிக்கின்றோமே!

தணலிடையே இட்டாலுங் கொள்கையதன்
தன்மையினைக் கைவிடாது வளர்த்தோமே!
மணலிடையே கால்புதைத்துச் சூரியனின்
மட்டில்லா வெப்பத்தைச் சகித்தோமே!
கனல்பறக்கச் சினம்வந்தும் மனதுதன்னைக்
கல்லாக்கி இறைவனுக்காய்ப் பொறுத்தோமே!
குணவொழுக்கக் குன்றின்மே லமைந்தவொரு
கோபுரத்தின் விளக்காகத் திகழ்ந்தோமே!
பிணமாக நாமன்று வாழ்ந்திருந்தால்
பிழையில்லா வழியின்று காண்போமா?
மணல்வீடு கட்டியிங்கு விளையாடி
மார்க்கத்தைப் பாழாக்கி விட்டோமே!

உள்ளத்தின் உணர்ச்சிகளை எழுப்பிவிட்டு
உலகத்தைக் கண்கொண்டு பார்த்தோமா?
பள்ளத்தை நோக்கிநிதம் நடந்துசென்றால்
பாதாளக் கிடங்குகளைக் காணோமா?
வெள்ளத்தின் பெருக்கத்தா லலைமோதும்
வெண்ணுரைகள் போலிங்கே ஆனோமே!
எள்ளளவும் மறுமையினை நினைக்காத
இவ்வுலக வாழ்க்கையுமே நிலைத்திடுமா?
தள்ளுகின்ற பசிக்கொடுமை நமக்கிருந்தால்
தர்மத்தைச் செய்வதற்குத் துணிவோமா?
துள்ளுகின்ற பசுக்கன்றும் தாய்வழியில்
துடிதுடிப்பாய்ச் செல்வதுமே தெரியாதா?

அன்னியரின் கலாசாரப் போர்வைக்குள்ளே
அழகாகத் துயில்புரிந்து மகிழ்கின்றோமே!
புண்ணியத்தின் வாசலுக்குள் புகுவதற்குப்
போதுமென்றா இச்செயலைச் செய்கின்றோம்?
தன்னியக்க சீலர்களாய்த் திரிகின்ற
தலைகளுக் கடிபணிந்து வாழ்வதனால்
என்னபயன் கண்டுவிட்டோ மிப்புவியில்
எந்தவொரு முன்னேற்றங் கண்டோமா?
சின்னமனம் படைத்தவரா யுயர்வழியைச்
சிரிப்புக்கே இடமாக்கி விட்டோமே
அன்னத்தின் நடைநடந்த காக்கையுமே
அழகான தன்னடையை இழந்ததுபோல்!

எத்தனையோ நாளாகச் சகிக்கின்றோம்
இனிமேலும் தாமதிக்க நேரமுண்டா?
புத்தகத்தின் பூச்சாக இருந்துவிட்டால்
பூமியின்மேல் பறப்பதற்கு முடிந்திடுமா?
சித்திரத்தில் வருகின்ற கலையம்சம்
சீவனுள்ள பொருளாக மாறிடுமா?
எத்தனையோ பலபணிக ளெங்களையும்
எதிர்நோக்கி இருப்பதையும் பார்த்தோமா?
அத்தனையும் ஆண்டவனி னுரிமைபெற்ற
ஆழமுள்ள கருத்தாக ஒலிக்கையிலே
பித்தரைப்போல் வாழ்வதனால் பயனுண்டா?
பிரியமுள்ள கண்ணிரண்டைத் திறப்போமா?

அகில உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டு மலர்
சென்னை 2007.

நித்திரையை நாடுகையில் என் சமூகம் தூங்கும் - அந்த
நிலைகண்டு பொறுக்காது நெஞ்சமுமே ஏங்கும்
எத்தனையோ கனவுகளை என் மனதும் காணும் -அதில்
இஸ்லாத்தின் சமூகமொன்றே எப்பொழுதும் தோணும்

புத்தகத்தைப் புரட்டுகையில் என் நினைவும் ஓடும் - ஓர்
புனிதமிகு கருத்தெங்கே இருக்குதெனத் தேடும்
சித்தமெலாம் திரண்டுள்ளே ஒன்றாகச் சேரும் - நம்
சீர் கெட்ட நிலைகண்டு என்னுள்ளம் சீறும்!

சீர் கெட்டுப் போன என்றன் சமூகத்தை மாற்றும் - பல
சிந்தனையில் ஆழ்ந்த எனை நெஞ்சமுமே தேற்றும்
ஓர் நாளில் உயர்வுண்டு என அதுவுங் கூறும் - அந்த
உணர்ச்சியினால் கண்ணிரண்டில் நீர் வந்து சேரும்!

கண்ணிரண்டும் நல்லவற்றைக் காண்பதற்குத் திறக்கும் - சில
காட்சிகளைக் கண்டிடவே மனங்கூசி வெறுக்கும்
உண்மையுள்ள இடந்தேடி பார்வையுமே போகும் - நெஞ்சில்
உறுதியுடன் சேர்ந்திடுமோர் அமைதியுண்டாகும்

காலிரண்டும் நல்வழியைத் தேடி நிதம் நடக்கும் - அங்கே
கல் நிறைந்த பாதையிலே முள்ளுகளும் கிடக்கும்
ஓலமிடும் ஏழைகளின் ஓசைகளும் கேட்கும் - அவை
உயர்வுக்காய்ச் சேர்த்துவைத்த நினைவுகளை மீட்கும்!

கையிரண்டும் நல்லவற்றைத் தேடிடவே நீளும் - நல்ல
கருத்துடையார் கைபிடித்து மகிழ்ந்திடவே போலும்
உய்வுண்டோ என்றெனது கையிரண்டும் விரியும் - சமூக
உயர்வுக்கா யுழைத்த பின்னர் தானே யுண்மை புரியும்!

'யாத்ரா' சிறப்பு மலர்

வானம் பூமியெல்லாம்
இறை படைத்த நாள்முதலாய்
வளர்ந்து தேய்ந்து வரும்
கூனல் இளம் பிறையே உன்றன்
குளிராம் வரவுகண்டோம்
மேன்மை தரும் 'ரமழான்'
மீண்டும் வந்து விட்ட
பான்மைதனை நீயோ
பகர்ந்து ஒளி வீசுகின்றாய்

ஆதி பிதாவாம்
ஆதம் நபியவர்கள்
அகத்தை மகிழ்வித்துச்
சோதி பரப்பி நின்ற
பெருமை உனக்குண்டு
மேதினி தோன்றிய
இறைதூதர் அனைவரும்
நீதி போதித்த
நெடுங்கதைகள் நீயறிவாய்!

மனித வாழ்வின்
மகிமை கூறுகின்ற
புனித வேதங்கள்
புகலும் போதனைகள்
அனைத்தும் நீவார்க்கும்
அமுத ஒளியின் கீழ்
புனையப்பட்ட தென்னும்
புகழும் உனக்குண்டு

இறைவன் உலகத்தை
மனித சமூகத்துக்காய்
முறையாய்ப் படைத்தான்
அதன் மேலாட்சி செய்யும்
உரிமையும் அளித்தான்
உண்மை நெறி வழங்கும்
இறை நேசச் செல்வர்களும்
இப்புவியில் அவதரித்தார்

இன்னும் எத்தனையோ
இனிய வழிகாட்டும்
பென்னம் பெரியவர்கள்
பிறந்தும் வருகின்றார்
புன்மை ஒழித்திடவே
புரட்சிகளவர் செய்தும்
இன்னும் இவ்வுலகம்
ஏனோ திருந்தவில்லை

புனித நோக்குடனே
போரில்லா வாழ்வை
இனிதாய்க் காண
இலட்சியம் கொண்டோரின்
கனவினைக் கலைக்கும்
கயமைகள் நிறைந்து
தினமும் உலகில்
தீமைகள் வழிவதுமேன்?

வாழ்வோடு போராடி
வாடுகின்ற மனிதர்கள்
எண்ணிக்கை இவ்வுலகில்
ஏறிப் போவதும் ஏன்?
கூழுக்கு வழியின்றிக்
குடிசையில் வாழுகின்ற
ஏழைகள் வாழ்வினிலே
ஏற்றமும் இல்லை ஏன்?

மேலே நீ இருந்து
மெல்லொளி வீசுகின்றாய்
கீழே இருக்கின்றோர்
இதயங்கள் இருளினிலே
மூழ்கிக் கிடக்கின்ற
முறையீட்டை இறைவனிடம்
மேலும் முன்வைப்போம்
மெல்லிராப் பொழுதுகளில்

கூனல் இளம் பிறையே
குளிராய் நீ பரப்பும்
மோன ஒளியின் கீழ்
முறையிடுவோம் இறைவனிடம்
தீனுல் இஸ்லாம் ஒரு
சிலருக்காய் மட்டுமல்ல
அது மானுடம் போற்றுகின்ற
மகத்தான வழியென்று

இறை கொள்கை நிலைநாட்டும்
எத்தனையோ நேசர்களோ
மறைமுகமாய் இருக்கின்றார்
மனத்தளவில் வாழ்கின்றார்
இறைவனே அவர்களது
எண்ணங்கள் நிறைவேற்றி
இவ்வாண்டும் மேன்மை பெற
இளம்பிறையே நீ சாட்சி!

வானொலி இ.ஒ.கூ.

சொர்க்க வாசல் திறந்திருந்தால்
சுகமாய் அங்கு புகலாமோ?
மக்கள் துயரை உணராது
மார்க்கம் பேச வரலாமோ?
தக்க வழிகள் இங்கிருக்க
தாழ்வாய் நடந்தாலது நன்றோ?
சொர்க்க வாசல் தனையடையத்
தொடர்ந்து முயல்தல் நலமன்றோ?

இந்த உலகில் செய் கருமம்
எதையும் நினைத்துப் பாராது
அந்த உலகின் சுகந் தன்னை
அகத்தால் நினைத்தால் முடிந்திடுமோ?
சொந்த நலனைக் கருதியவர்
சுகத்தை இங்கேதான் பெறுவர்
அந்த உலகை நினைத்தே நாம்
அறத்தில் மூழ்கல் நலமிலையோ?

நரக வாசல் திறந்திருந்தால்
நாங்கள் புகத்தான் விரும்புவமோ?
கரவு மனதில் கொள்வோமோ?
கஞ்சத் தனங்கள் செய்வோமோ?
சிரமம் எதுதான் வந்திடினும்
சேவை செய்யத் தவறுவமோ?
நரக வாசல் தனை நினைத்தால்
நாசம் செய்யத் துணிவோமோ?

பாவச் செயல்கள் அனைத்தினையும்
பதுக்கிச் செய்யத் துணிவோமோ?
நாவா லெந்தப் பொய்யுரையும்
நவிலத் துணிந்து நடப்போமோ?
ஆவி உடலில் போம்வரையும்
அன்பு நெறியை மறப்போமோ?
தேவை எதுதான் குறைந்திடினும்
தெய்வ சக்தியை இகழ்வோமோ?

இம்மை மறுமை இரண்டுக்கும்
இணைப்பா யமைந்த நல்வாழ்வை
கும்மா ளங்கள் செய்வதிலும்
கூத்துக் களிலும் களிப்போமோ?
நன்மை எவரும் பெறவேண்டும்
நாங்கள் சுவனம் புகவேண்டும்
என்னும் கருத்து நம்மனதில்
இருந்தால் தீமை செய்வோமோ?

வாழ்க்கைப் புதிரை நன்கறிந்து
வாழும் பாதை பலவகுத்து
வாழ்க்கைக் கடலைக் கலங்கொண்டு
வன்மை யுடனே கடந்துவிட்டே
ஊழ்வினை தனையே நம்பாது
உடைத்தே எறிந்து வீசிவிட்டு
வாழ்க்கை எவர்க்கும் வெற்றியென
வரைந்து பாடி மகிழ்வோமே

## பிணியும் மருந்தும்

கண்கள் இரண்டும் ஒளியிழந்து
கருத்தா லுணரும் வகையுமின்றி
எங்கும் உலகம் இருளாக
எங்கள் வாழ்வில் இருப்பதற்குக்
கண்கள் இரண்டும் குருடாகக்
காரணம் யாதென் றறிகையிலே
எங்கள் கண்கள் இரண்டையுமே
நாங்கள் தானே குத்திவிட்டோம்

நாங்கள் இந்தச் சமுதாய
நலிவுக ளைத்தான் காண்பதற்கும்
தூங்கிச் சுருளும் நம்மினத்தைத்
தொட்டே எழுப்பி நடத்துவதற்கும்
தீங்கிற் றிளைத்து அறிவுண்மைத்
தெளிவே பெறாத அனைவரையும்
நாங்கள் தேடிப் பிடிப்பதற்கும்
நமது கண்களிப் போதிலையே!

கண்கள் இரண்டும் இருண்டபின்னர்
கதறி அலைந்து திரிகின்றோம்
கண்கள் இரண்டும் நாம்குத்திக்
கலக்கம் எம்மைச் சூழ்ந்தபின்னர்
புண்ணா யிருக்கும் நமதுகண்கள்
புரையாய் மாறி விட்டபின்னர்
கண்கள் இரண்டும் புத்தொளியில்
கலந்து மிதக்க என்னவழி?

எங்கள் மனத்தில் எழுந்துவந்த
ஏற்ற மில்லா உணர்வுகளால்
பொங்கி மிகைத்த வெறிகொண்டு
போதை எங்கள் தலைக்கேறி
எங்கள் இரண்டு கண்களையும்
நாங்கள் தாமே குத்திவிட்டோம்
எங்கள் இரண்டு கண்ணொளியும்
இருளில் மூழ்கிக் கிடக்கிறதே!

எங்கள் கண்கள் இருண்டபின்னர்
எங்கள் வாழ்வும் இருட்கிடங்காய்
மங்கி மறைய நேர்ந்ததென்று
மனதைத் தொட்டுப் பார்த்தோமா?
எங்கள் கண்கள் இரண்டையுமே
ஏற்ற ஒளியில் மிதக்கவிட்டு
மங்கல் தன்னை மறைப்பதற்கு
மருந்தாய் ஒன்றும் இருக்கிறதே!

அந்த மருந்தால் நம்கண்கள்
அடையும் ஒளியே பேரொளியாம்
அந்த மருந்தால் நம்கருத்தும்
அடையும் உணர்வே பேருணர்வாம்
அந்த மருந்தால் வரும்பலன்கள்
அனைத்தும் நமது இருள்நிலையை
எந்த விதத்தில் தீர்த்திடுமோ
அந்த வழியை ஆய்ந்துகண்டால்
அந்த மருந்தே அருமருந்தாய்
அகிலத் தார்க்கே உதவிடுமாம்

அந்த மருந்தே அறநெறியாம்
அந்த மருந்தே திருமறையாம்
அந்த மருந்தே அண்ணலரின்
அன்பு வாழ்க்கைத் தத்துவமாம்

இறைவனின் திருநாமம் ஐவேளை
இவ்வுலகில் எண்திசையு மொலிக்கிறது
குறைபோக்கிப் பரஸ்பரம் வளர்க்கவே
கூடிவரும் மனித இனம்மிகைக்கிறது
முறைமுறையா யெங்கணுமே இஸ்லாமே
மூன்றெழுத்தி னுயிர்நிலையில் வாழ்கிறது
நிறபேதம் மறைகிறது பூமிதனில்
நீதியெனும் சந்திரனு முதிக்கிறது

இடைக்காலம் ஆட்சிசெய்த மாறுபட்ட
இழிவுள்ள நாசவழி மறுபடியும்
விடைபெற்றே இவ்வுலகைப் பிரிகிறது
வீணான கோட்பாடும் மறைகிறது
திடமுள்ள இளஞ்சமூக மெங்கெங்கும்
திரண்டெழுந்தே போராடத் துணிகிறது
புடமிட்ட பொன்னாக இஸ்லாத்தின்
போதனைகள் ஒளியாகத் தெறிக்கிறது

இறந்த காலங்களிலே நாமெல்லாம்
எண்ணியே வந்திருந்த இலட்சியங்கள்
சிறப்பான வளர்ச்சியுடன் இன்றெல்லாந்
தெருவெங்கும் நடமாட அஞ்சுகிறது
திறந்தவான் வெளியினிலே நீந்துகிற
கதிரவனி னொளிக்கற்றை ஒன்றாகி
நிறைந்த ஒளிபெற்று நம்எண்ணம்
நிகழுமிக் காலத்தில் ஒளிர்கிறது

நிகழ்காலக் காரியங்கள் நந்தமது
நினைவுகளில் வந்தலை மோதுகிறது
புகழ்வந்து தானாக அடிபணிந்து
புகையாகக் கிளம்பிவான் அடைகிறது
இகழ்வான ஷைத்தானின் தீயதாய
எண்ணமெல்லாம் தூளாகப் பறக்கிறது
நிகழ்காலம் எங்களுக்காய் வேண்டியன்றோ
நெடுந்தூர மாயியங்கி வருகிறது

எதிர்காலம் எப்படி யெல்லாமோ
இருக்குமென நமதுமனம் நினைக்கிறது
புதிரான கருத்துக்கள் தெளிவுடனே
புரிவதற்கோர் நல்வழியும் பிறக்கிறது
உதிர்கின்ற பசுமரத்தி னிலைகளாக
வீணான உணர்ச்சியெலாம் உதிர்கிறது
எதிர்காலம் எங்களையு மன்புடனே
இலட்சியக் கரங்கொண் டழைக்கிறது

இந்த உலகில்
என்றோ ஒரு நாள்
ஒரு கணப் பொழுதில்
மாற்றம் நிகழும்
அந்த மாற்றம்
அனைவரின் வாழ்விலும்
சிந்தை நிறையும்
சிறப்பையூட்டும்!

அந்த மாற்றம்
ஒரு கணப்பொழுதில்
உலகைத் திருப்பும்

எங்கள் வாழ்வில்
குறைகள் உண்டு
எங்கள் வாழ்வில்
நிறைகள் காண
எங்கள் நெஞ்சம்
உண்மை உணர்ந்து
பொங்கி வழியும்
பூரிப்படைய
மாற்றம் ஒன்று
மறுபடி தேவை!

அந்த மாற்றம் எவ்விதம் தோன்றும்?
அந்த மாற்றம் எவ்விதம் தோன்றும்?

சொந்த நலத்தில்
சுகித்து வாழ்வோர்
சொத்துகள் அனைத்தும்
சுருட்டும் நோக்கில்
அந்த மாற்றம்
அமைந்து உளதோ?

சொத்தால் உலகம்
சுழல்கிற தென்றால்
இத்தனை ஆண்டுகள்
சகித்தல் ஏனோ?
சொத்தால் எங்கள்
குறைகள் அனைத்தும்
எத்தனைத் தூரம்
இங்கே தீரும்?

அரைச்சதத்தால் அழிந்த மானம்
ஒரு கோடி கொடுத்தும் திரும்பி வருமோ?

செத்த பிணத்தின் பாவக்கறையைச்
சொத்தால் இங்கே துடைத்திடலாமோ?
சொத்தால் எங்கள்
குறைகள் அனைத்தும்
எத்தனை தூரம்
இங்கே தீரும்

மனித வாழ்வின்
மகிமை உணர்த்தும்
புனித நோக்கே
புவியை மாற்றும்
எனவே அந்த இலட்சிய நோக்கோ
இரத்தம் சிந்தாப் புரட்சியைப் படைக்கும்!

அந்த நாளில்
இந்த உலகில்
இறைவனின் ராஜ்ஜிய
எல்லைகள் விரியும்

நாங்கள் இந்த உலகத்தில்
தீங்கைப் போக்க வந்துள்ளோம்
மறைந்த பொருளை வெளிக்காட்டிக்
குறைகள் போக்க வந்துள்ளோம்
எனவே எங்கள் அனைவருக்கும்
ஏற்ற வழியும் வேண்டுவதே

நாங்கள் பார்க்கும் பார்வைகளும்
நாங்கள் நோக்கும் பாதைகளும்
நாங்கள் பேசும் பேச்சுக்களும்
நாங்கள் காட்டும் நடைமுறையும்
நாங்கள் அமைக்கும் ராஜ்ஜியமும்
நாங்கள் வாழும் விடுதிகளும்
நல்ல நோக்கைக் காட்டவேண்டும்

நாங்கள் இங்கே இறைவனுக்காய்
வாழ்ந்து காட்டத் துணியவேண்டும்!
எங்கள் வாழ்வில் படர்கின்ற
எல்லாக் குறையும் தீர்வதற்காய்
இறைவன் காட்டும் நேர்வழியை
எடுத்தே ஆண்டு பழகவேண்டும்
எங்கள் குறைகள் எல்லாமே
எளிதாய்த் தீரக்கும் உரியவழி
எங்கே அமைந்து இருக்கிறதோ
அங்கே சென்று பார்க்கவேண்டும்!

அந்த வழிகள் அத்தனைக்கும்
அழகிய உருவம் தீட்டவேண்டும்
எந்த வழிகள் எங்களுக்கு
இடையூறாக இருக்கிறதோ
அந்த வழிகள் எல்லாமே
மனிதன் இயற்றிய வழியாகும்

எந்த வழியை அடைவதற்கு
நாங்கள் முயலத் துணிந்தோமோ
அந்த வழிகள் மானிடர்க்கு
ஆறுதல் கொடுக்கும்; அவ்வழியால்
இந்த உலகின் குறையெல்லாம்
என்றோ தீர்ந்து போயிருக்கும்

இந்த உலகின் குறையெல்லாம்
தீர இடமும் இருக்குமெனின்
எந்த வழிதான் அதுவென்றோர்
எண்ணம் மனதில் எழுகிறது
சொந்தப் புத்தி கொண்டெவரும்
துழாவிப் பார்த்தே அமைக்காது
சிந்தனை தனையே விரிவாக்கும்
சிறந்த வழிதான் அதுவாகும்

உலகம் அளந்து கண்டவனும்
உலகை ஆட்சி செய்பவனும்
நிலவும் மனித வாழ்கையினை
நேர்த்தி யாக அமைப்பவனும்
உலகில் தன்னை இலனாக்கிப்
புரட்சி புரிந்த மனிதனுக்கும்
இலையெ னாது துணைசெயும்
இரக்க சிந்தனை உடையோனும்
நிலையில் லாத வாழ்வுணர
நீதி நூலைத் தந்தவனும்
கூறும் அந்த உயர்வழிதான்
கொள்ளும் வழியிற் சிறப்பாகும்

சிறந்த அந்த உயர்வழிக்குச்
சிறப்பை அளிக்கும் கடமையினைச்
செகத்தி லுள்ளோர் மறுக்கின்றார்
இறந்து மறைந்த அனைவரிலும்
இனிய வாழ்க்கை நடத்திய அச்
சிறந்தோர் போல நாமிருந்தால்....

எங்கள் வாழ்வும் இனிதாகும்
எங்கள் பாதை தெளிவாகும்
எங்கள் வாழ்வை நடத்தற்கு
வேறு வழிகள் வேண்டாதிருக்கும்

நாங்கள் பார்க்கும் பார்வைகளும்
நாங்கள் நோக்கும் பாதைகளும்
நாங்கள் பேசும் பேச்சுகளும்
நாங்கள் காட்டும் நடைமுறையும்
நாங்கள் அமைக்கும் ராச்சியமும்
நாங்கள் வாழும் விடுதிகளும்
நாங்கள எழுதும் எழுத்துகளும்
நல்ல வழியைக் காட்டிடுமே!

கொதிக்கின்றனவே எனது
குளிரான இரு கண்கள்!
மதிக்காத வஞ்சகரின்
மட்டான அறிவு கண்டு
கொதிக்கின்றனவே எனது
குளிரான இரு கண்கள்...

எங்களைப் பழிக்கும்
இழிவான பேடியரை
மங்காத பழமைகளை
மறைக்கப் பார்ப்போரைக்
கண்டு நெஞ்சம் கருகி
கனல்கின்ற கோபத்தால்
கொதிக்கின்றனவே எனது
குளிரான இரு கண்கள்...

நாகரிகம் என்கின்ற
நச்சுச் சாக்கடையில்
போகித்து வாழ்வதனால்
புரியாத சில பேரை
எந்தை முன்னோர்கள்
இயற்றி வாழ்வளித்த
சிந்தைக் கனிகளினைச்
சிரித்துப் பழிப்போரை...

மறைந்தவை விளக்கும்
மறையைப் படிப்பவரைக்
குறைந்த நோக்கோடு
குமைந்து பார்ப்போரை
கண்டு நெஞ்சங் கருகி
கனல்கின்ற கோபத்தால்
கொதிக்கின்றனவே எனது
குளிரான இரு கண்கள்...

கண்கள் கனன்று
கக்குகின்ற நெருப்பினிலே
எங்களைப் பழிப்போரை
எரிக்கப்பார்க்கின்றேன்; ஆனாலும்
உண்மை தெரிந்தால்
உணர்வார்கள் ஓர் நாளில்
என்னும் எண்ணத்தால்
இருக்கின்றேன் பொறுமையுடன்!

-யாத்ரா-

அந்தாதி

வருக! வருக! புனித ரமழானே
வாழ்விலின்பம் எமக்குத்
தருகவென இறைவனை நாங்கள்
தன்னலத்தோடு கேட்கவில்லை.
பெறுக இன்பம், இவ்வையகம்
பெருமானார் காட்டிய வழியினிலே
உரிய முறையில் இயங்குமெனில்
உயரும் என்றே கேட்கின்றோம்.

கேட்கின்றோம் இறைவனிடம் எங்களது
கேடுகளை நீக்கி விடு என்றுமல்ல
நோக்கமென்ன? வறுமையெனும்
நோயுற்றே எம் சமூகம் வாடலென்ன
வாழ்க்கையென்ன விழலாமோ
வாடுகின்றோர் எதிர்காலம் என்னவென்றே
கேட்கின்றோம் இறைவனிடம் விடை
கிடைக்குமென நம்பிக்கை வைத்துள்ளோம்.

வைத்துள்ளோம் நம்பிக்கை பலவாண்டாய்
வன்முறையாற் போராடி வெல்லவல்ல
மெய்த்தவத்தை மேற்கொண்டு ஊமைகளாய்
வெந்தமனப் புண்களுடன் வாழுகின்றோம்
எத்தனையோ இன்னல்கள் வாழ்வினிலே
இரவுபகல் அழுகின்றோம், உறக்கமில்லை
அத்தனையும் சமூகத்தின் உயர்வுக்காய்
ஆரறிவார் எங்களது வேண்டுதலை.

வேண்டுகிறோம் இறைவனிடம் ஐவேளை
மேதினியில் எமக்கெல்லாம் சுகவாழ்வு
வேண்டுமென்றா? இல்லையில்லை அன்றாடம்
வெறும் வயிற்றை நிரப்புதற்கு வழியின்றி
ஏந்துகின்ற கையோடு எத்தனையோ
ஏழையரும் எம் சமூக மத்தியிலே
சோர்ந்து தினம் வாடுகின்றா ரவர்களுக்குச்
சுகவாழ்வு கிடைக்காதா என்றேதான்

என்றோதான் எம் சமூகம் விழிப்புற்று
இஸ்லாத்தின் அடிப்படையில் இயங்கிடுமோ
அன்றேதான் எங்களுக்கு உயர்வுண்டு
அதற்காக இறைவனிடம் வேண்டுகிறோம்
நன்றேதான் நாம் செய்வோம் சமூகத்தின்
நாற்றத்தை மணம்பெறவே மாற்றிடுவோம்
என்றேதான் இம்முறையும் ரமழானே
இருக்கின்றோம் வாழ்வளிக்க நீவருக!

கோடிக்கணக்கான உம்மத்துக்களின்
சோடிக் கண்களுக்குள்ளும்
கோ மணியாய்த் திகழும் மா மணியே
உங்கள் மீது நாங்கள் ஓதுகிறோம் ஸலவாத்தை
அல்லாஹ்வும் உங்கள் மீது
அதனையே ஓதுவதால்

பின்பற்றும் நாங்களும் பேறுபெற்றோம்.
வரலாற்றில் மாபெரும் மனிதர்களுள்
முதலிடம் உங்களுக்கே
அந்த இடத்தை அல்லாஹ்வே அளித்ததனால்
அம்மகத்துவத்தின் அற்புதப் புருஷராய்ப்
போற்றப்படும் உங்கள் புனித வரலாறு
ஏற்றம் மிகுந்தது என்றென்றும்;
நேற்றும் இன்றும் நாளையும்
பிறர்க்கு நடவா மகத்துவம் அது!

உலகம் இதுவரை காணாத
உன்னத அற்புதங்களின்
பாட்டுடைத் தலைவர் நீங்கள்
நெஞ்சம் நிறை மணியே!
பென்னம் பெரிய பெருமை பெருத்த அற்புதமாம்
தன்னிகரில்லா அல்குர்ஆன் எனும்
அருளைத் தந்த நெஞ்சம் நிறை நபியே!
அற்புதத்தின் அற்புதத்தை
ஆற்றிய பெரு நபியே!

என்றும் பிறர் எவர்க்கும் அளிக்கப்படாத
அற்புதப் பரிசுக்கு உரியவர் நீங்களே!
அதுதான் -
இறைவன் தன்னிடத்தின்
இரகசியங்களைத் திறந்து
காட்டுதற்காய் உங்களை அழைத்த
அந்த நாளின் கதை;
மிஃராஜ் என்னும்
விண்ணுலக யாத்திரையின் வரலாறு

நீங்கள் இன்றேல் நாங்கள் இல்லை;
இவ்வுலகில்லை
ஜீவராசிகளும் புல் பூண்டுகளும் இல்லை
அண்டசராசரங்களும் இல்லை
அத்தனை மகத்துவம் மிக்க உங்களின்
உம்மத்துக்களான எங்களுக்கு
நீங்கள் கொண்டு வந்த ஐவேளைத் தொழுகை
மிஃராஜின் நினைவுச் சின்னம்.

ஸ்தூல சரீரியாய் நீங்கள்
மேற்கொண்ட அந்தப் பயணத்தின்
தத்துவங்களைக் கூடப் புரிந்து கொள்ளமுடியாது
தத்தளித்துக் கொண்டிருக்கின்றோம் நாயகமே!
இறைவனின் எந்த அடியார்க்கும்
கிடைக்காத அந்த மகத்தான பேறு
தங்களுக்குக் கிடைத்ததே!
இறைவனின் இராஜ்ஜிய மகத்துவங்களை
நேரில் கண்ட ஒரே ஒரு
பூமியின் புதல்வர் நீங்கள் தாம்!

அந்தப் பேறு இனி
எந்த மனிதர்க்கும் எட்டப்போவதில்லை
சுவர்க்கமும் நரகமும் உங்களுக்கு காட்டப்பட்டபோது
நரகத்தைக் கண்டு கவலைப் பட்டீர்கள்
சுவர்க்கத்தைக் கண்டும் சுயநலம் கொள்ளாது
பூமிக்குள் மீண்டும் புகுந்தீர்கள்
இதை எண்ணிப் பார்க்கையில்
நெஞ்சங்களில் நெகிழ்ச்சிகள்
சிரம் முதல் கால்வரை சிலிர்ப்புகள்!

பூமிக்கு நீங்கள் புனிதமாய் மீண்டபோது
உங்கள் இல்லத்தின் கதவுகள்
இருந்தவை போன்றே இருந்தன
உங்கள் துயில் விரிப்பின் சூடும்
துணையாய் அமைந்தது.
அத்தனை வேகப் பயணத்தை
அகிலம் முன் கண்டதில்லை.

இந்த அற்புதத்தைச் செய்ய
அந்த அல்லாஹ் ஒருவனாலேயே முடிந்தது.
அது மின் வேகப் பயணமா?
விண் வேகப் பயணமா?
மெய்ஞ்ஞானம் இங்கே வியப்பில் குழம்புகிறது!
விஞ்ஞானம் கூட விளங்கவில்லையே என்று
கருவிக் கைகளை விரிக்கிறது
அஞ்ஞான இருள் போக்கிய அஹமது நபியே!
அஞ் ஞானம் உங்களுக்குள் அடக்கம்

கவிதைக் களம் - இ.ஒ.கூ. முஸ்லிம் சேவை

## 43 நம் கடமை

கோபத்தை தின்று உயர் குணமாக்கிக்
குத்துகின்ற வெம்பைகள் பல போக்கி
ஆபத்தின் மத்தியிலும் நம்பிக்கை
அசையாமலிருக்கின்ற உணர்ச்சி பெற்றுத்
தீபத்தின் ஒளியாகத் தெவிட்டிடாத
தித்திப்பாம் இஸ்லாத்தின் பொருளுணர்த்திச்
சோபனமாய் இகமீது வாழ்வதற்குச்
சோதரரே எல்லோரும் வாருங்களேன்.

இரத்தத்தை வெறியாக்கி அலைகின்ற
எத்தனையோ நீசர்கள் இருந்தும் என்ன?
பரத்தையதரின் உறவினையே ருசி பார்க்கின்ற
பகல் வேஷம் போடுவோர் சிரித்துமென்ன?
கருத்தின்றி அலைகின்ற கயவர் கூட்டம்
கை தட்டிச் சிரித்தாலும் நமக்கென்ன?
கரத்தினிலே பிடித்தபிடி நழுவிடாது
காத்திடுவோம் நம் கொள்கை சோதரரே!

காலத்தாற் சாகாத நமது கொள்கை
காற்றடித்தால் வீழாத நமது கொள்கை
கோலத்தாற் குறையாத நமது கொள்கை
குவலயத்தில் தாழாத நமது கொள்கை
மேலைத்தேயத் தாரின் பிடியினிலே
வீற்றிருந்தே ஆடுவது கண்ட பின்னும்
ஊழித் தீயினில் விழுந்தழிய விட்டால்
உண்மை வழி நாம் காணோம் சோதரரே!



தாஸிம் அகமது

பெருமானார் நமக்களித்த போதனைநம்
பேச்சினிலும் மூச்சினிலும் வருதல் வேண்டும்
அருமையாம் பேறுபெற்ற அண்ணலரின்
அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழவேண்டும்
உரிமையுள்ள இஸ்லாத்தின் ஓர்சமூகம்
உலகத்தில் இன்றுமுதல் உதிக்கவேண்டும்
பெருமையெலாம் எங்களுக்கே என்றுநாங்கள்
பேதைமைகள் நீங்கிநிதம் மகிழவேண்டும்

பெருமானார் எமக்களித்த போதனைகள்
பெருமையுடன் வாழ்வதற்காய் உழைக்கவேண்டும்
சிறுமையுள்ள நெஞ்சமுத்தம் நீங்கவேண்டும்
சேர்ந்துபலர் நம்கொள்கை மதிக்கவேண்டும்
உரிமையுடன் எல்லோரும் ஒன்றுபட்டே
உலகத்தை ஒரேவழியில் திருப்பவேண்டும்
உருவமிலா இறைவனுக்கே நன்றியெலாம்
ஓரணியில் நின்று பலர் செலுத்தவேண்டும்

பெருமானார் நமக்களித்த போதனையில்
பேருவப்பை எல்லோருங் காட்டவேண்டும்
திருமறையாம் குர்ஆனின் கருத்தைஎல்லாம்
தேசமெங்கும் பரப்பிமனம் மகிழவேண்டும்
குருதியிலே ஓடுகின்ற அணுக்களெங்கள்
குறையாத வீரத்தைக் காட்டவேண்டும்
பெருகிவரும் ஷைத்தானின் கொள்கையெலாம்
பேதமிலா நம்கருத்தால் சிதறவேண்டும்.

## தோழனுக்கு.....

அன்புள்ள தோழனுக்கு அஸ்ஸலாமு அலைக்கும்
அல்லாஹ்வின் கிருபையினால் நலமுடையேன்
உன்னுடைய நலத்துக்காய்ப் பிரார்த்தித்தே
ஒளி மிகுந்த எதிர்காலம் உன்வாழ்வில்
என்றென்றும் நிலையாக அமைந்திடவே
இறைவனிடம் கையேந்திக் கேட்கின்றேன்
குன்றாது வளர்ந்து வரும் அன்பு நம்முள்
குறையாமல் நிலைபெறவும் வேண்டுகிறேன்.

அன்பெனும் ஓர் கயிற்றால் உம்மத்து
ஆன்மாக்கள் அத்தனையும் இணைந்திருக்கும்
பொன்னான இஸ்லாத்தின் போதனைகள்
புவி மீது எழுச்சிபெறும் நாள் தன்னை
என்றோ நாம் இழந்து விட்டோம் என்பதனை
இனிமேலும் நினைப்பதனால் பயனேது
பண்பான ஓர் சமூகம் உருவாக்கும்
பணியினிலே திளைத்திடுதல் நம்கடமை

புனிதமுள்ள இஸ்லாத்தின் போதனைகள்
புத்தகத்தின் ரூபத்தில் இருப்பதனால்
மனிதர்கள் எப்பயனும் பெறமாட்டார்
வாழ்வினிலே கடைப்பிடித்தல் கூடுமென
உனதுள்ளம் கூறுகின்ற உண்மையினை
உலகிற்கு எடுத்தோத எழுந்திடுவாய்
மனிதரெலாம் மாமறையின் மறைபொருளை
மகிழ்வோடு ஏற்குமொரு காலம் வரும்.

---

 தாஸிம் அகமது

எழுந்திடுவாய் எனதருமைத் தோழனே
இந்நாளில் பாவங்கள் அதிகமாய்
விளைந்திடுதல் தடுத்திடவே உன்றனது
மேன்மை மிகு செயலூக்கம் வழிவகுக்கும்
களைந்தேதான் அறியாமை இருள் தன்னை
கடிதாக ஓட்டுகின்ற மனம் படைத்து
பழம்புராணம் பேசுகின்ற சிலர் மனதை
பண்படுத்திப் புடம் போட்டுப் புனிதராக்கு.

வழிகாட்டும் ஒளி விளக்காய் வாழ்ந்து வந்த
வரலாற்று நாயகர்கள் பாதையிலே
எழிலூட்டும் இன்வாழ்வு மலர்ந்திடுமே
இஸ்லாத்தில் ஓர் சமூகம் உருவாகும்
நிலையான ஒரு வாழ்வு யாவருக்கும்
மறுவுலகில் கிடைத்திடவே வேண்டுமென
குலையாத திடன் கொண்டு போராடும்
கொள்கைகளை எடுத்தோத நீயெழுவாய்

கடமை பல நம்முன்னே கிடக்கிறதே
காலத்தைக் கடத்தாது நம் பணியைத்
திடமான மனதுடனே செய்து வரின்
தீன் என்னும் இஸ்லாமும் தழைத்தோங்கும்
நடமாடும் சிலைபோல வாழ்வதனால்
நாமிந்தப் புவியினிலே ஏது கண்டோம்.
சுடரானதொளிவீசி வழிகாட்டி நிற்பது போல்
தோழா நீ எழுந்தேதான் வழி காட்டு.

எத்திக்கும் எங்களது இலட்சியத்தை
ஈடில்லாக் கொள்கையினை வளர்த்திடுவோம்
தித்திக்கும் திருமறையின் வாக்கியங்கள்
தீவினைகள் மத்தியிலே பரப்பி நிற்போம்
புத்திக்கும் புதியதோர் வாழ்வுக்குமிப்
புவி மீது அறிவொளியை இயற்றி வைப்போம்
நித்தியமாம் வாழ்வு தரும் அவ்வுலகை
நினைந்துருகி இறைவனையே தொழுது நிற்போம்
சத்தியத்திற் குயிர்கொடுத்து நண்பர்களைச்
சாந்தி சொல்லி உபசரித்து மகிழ்ந்திடுவோம்

பெண்களினம் வாழ்வதற்கு வழிவகுத்துப்
பிரிவினைகள் நீக்குமொரு வாழ்வமைப்போம்
அன்னையிரு காலடிகள் சுவனமென்று
அன்புடனே அவள்தனுக் கடிபணிவோம்
மண்ணுலகின் அடியினிலே புதைத்திருக்கும்
மறைபொருள்கள் அத்தனையுங் கண்டெடுப்போம்
செந்நெல்கள் கழனியிலே குலுங்கக் காணச்
செறிவுமிகு காடுகளைச் சீர்மை செய்வோம்
கண்ணை இமைகள் காப்பது போல்நம்
கருத்தைக் காக்கும் வழி சமைப்போம்.

---

ஏழைகளுக் குதவுவதால் இறையன்பு
எங்களுக் குமுண்டாகு மென்றறிவோம்
கோழைகளாய், பாவிகளா யுலகத்தில்
கூத்தாடித் திரிவோரைப் புறக்கணிப்போம்
பேழைநிறை செல்வங்கள் வேண்டுமெனும்
பேராசை கொள்ளுமெண்ணம் களைந்திடுவோம்
கூழைத்தா னுணவாகக் கொண்டிடினும்
குறையின்றி இறைவனையே புகழ்ந்திடுவோம்
வாழைகள்போல் சந்தனம்போல் என்றென்றும்
வான்புகழத் தியாகங்கள் செய்திடுவோம்

சமுதாயம் வளர்வதற்குப் பாடு பட்ட
சான்றோரைப் பல்லாண்டு போற்றிடுவோம்
அமுதான அவர்களது நற்கருத்தை
ஆசையுடன் எடுத்தோதிச் சாற்றிடுவோம்
எமைப்பெற் றுணவூட்டி விழித்திருந்த
ஈன்றவர்கள் சொல்பணிக ளாற்றிடுவோம்
நமக்காக நல்வாழ்வு அளித்துநின்ற
நபிமணியின் அன்புவழி தேற்றிடுவோம்

துன்பங்கள் என்னென்ன வந்துறினும்
தொடர்ந்துபணி செய்துவரல் கடமையென்போம்
இன்பங்கள் எங்களுக்கு ஏற்படினும்
ஏனையர்க்கும் பங்கிட்டு அனுபவிப்போம்
அன்பெங்கள் இதயத்தில் ஊற்றெடுத்து
அணையின்றி ஓடிவரும் நட்பமைப்போம்
வன்சொற்கள் பேசுவது பாவமென்று
வஞ்சமிலா இன்சொற்கள் பேசிடுவோம்
மண்மக்க ளுதிர்க்கின்ற துளிவியர்வை
மானிலத்தை உய்விக்கும் முத்தே என்போம்

மார்க்க வழியில் திளைத்தூறி
மகிழ்ச்சிப் பாதை வேண்டிநின்று
ஆக்கம் தன்னை விரும்புகின்றோர்
அழிவுப் பாதை விரும்புவரோ?

அந்நாள் வாழ்ந்த பெரியார்கள்
அறத்தின் நிலைமை உணர்ந்தபின்னர்
இந்நாள் வாழும் மாந்தரெல்லாம்
இழிவாம் செயல்கள் செய்வாரோ?

கல்விச் செல்வம் தனையடைந்தோர்
கருணைச் செல்வம் விரும்பாமல்
அல்லும் பகலும் வீண்வழியில்
அறிவைச் செலுத்த விரும்புவரோ?

உலகி லமைதி நிலைநாட்டும்
ஊக்கம் மனதில் கொண்டவர்கள்
கலகம் செய்து வேற்றுமைக்குக்
காரண கர்த்தராய் விளங்குவரோ?

உழைப் பாலுயர விரும்புகின்றோர்
ஒல்லும் வகைகள் தெரியாமல்
இளைத்து நலிந்து மனையினுள்ளே
இழிவாய் முடங்கிக் கிடப்பாரோ?

உள்ளந் தெளிந்தே உயர்வழியை
உணர்ந்து நடக்கும் மானிடர்கள்
கள்ள வழியிற் பணம்சேர்க்கும்
காரியந் தன்னி லிறங்குவரோ?

முன்னோர் தந்த நன்னெறியை
மூச்சுப் பிடித்து பேசுகின்றோர்
இன்னாள் முதலாய் வாழ்க்கையிலே
எடுக்கா திகழ்ந்து வீசுவரோ?

தன்னைப் படைத்து காக்கின்ற
தலைவன் வழியை மறந்தெவரும்
கண்ணை மூடிப் பாவத்தைக்
காசு கொடுத்து வாங்குவரோ?

வெந்த புண்ணில் வேல்பாய்ச்சி
வேதனைப் பட்டுத் துன்புறவே
இந்தப் புவியில் வாழ்கின்றோர்
எவரும் இணக்கந் தருவாரோ?

உறியில் வெண்ணெ யிருக்கையிலே
ஓடி நெய்க்காய் அலைவதுபோல்
நெறிகள் நல்லன பலவிருந்தும்
நீசத் தனமாய் வாழுவதோ?

மணக்கின்ற மலரெல்லாம் இதழ்விரித்து
பரப்புகின்ற மணமென்றும் நிலைக்காது
கணக்கில்லாப் பலமலர்கள் தினம் விரியும்
காலையிலே இருக்குமந்த ஓர் நிலையும்
நினைக்கின்ற மறுகணமே மாறிவிடும்
நேரமெல்லாம் உருண்டோடி மாய இருள்
அணைக்கின்ற வேளையிலே அம்மலர்கள்
அழகுதனை இழந்து பின்னர் வாடிவிடும்.

வாடிவிடும் மலரெல்லாம் மனிதனது
வாழ்வினுக்குச் சிறந்தவொரு உவமைதானோ?
ஆடிவிழும் வாழ்க்கையிலே ஆயிரமாய்
அன்பு மலர் பூத்திருக்கும் அவை இங்கு
வாடிவிடும் என்றோ நாம் நீரூற்றி
வளர்க்கின்றோம் இல்லையில்லை அதுவென்றும்
கூடிவரும் உள்ளன்பால் கொழுந்து விடும்
குவலயத்தில் நாமழிந்தும் நிலைத்து நிற்கும்!

நிலையான அன்புக்கோ தம்முயிரை
நீத்தவர்கள் வரலாறு கண்டுள்ளோம்
விலையில்லை, அவ்வன்பின் மகிமைக்கு
வேதனைகள் நீக்குமொரு அருமருந்தாய்
அழியாத உடலமைக்க அது உதவும்
அவ்வன்பு தியாகத்தில் மலர்ந்திருக்கும்
உலகத்தில் ஒரு மலரும் இணையில்லை
உள்ளத்தில் மலர்வதுதான் அம்மலரே!

தியாகத்தில் மலர்கின்ற அன்புமலர்த்
தேன் சிந்தும் சுவையினிலே நாமின்று
பயபக்தி நிறைந்தவொரு திருநாளைப்
பார்க்கின்றோம் இபுறாகீம் நபி தந்த
அயராத திடனாலே அமைந்த கதை
அழகான வாழ்வமைக்க உதவுமொரு
உயர்வான தத்துவத்தை விளக்கி நிற்கும்
ஒளியேற்றி, வாழ்வுக்கு வழிகாட்டும்!

வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காய்
வாழ்ந்த நபி இபுறாகீம் பாதையிலே
தாழ்வு வரும்; சத்தியத்தின் சோதனைகள்
தாமும் வரும் அவை சகித்து, வெல்லுகிற
மேலான மனம் படைத்தால் வெற்றி வரும்;
மேகம் போல் ஓடி வரும் துயர் மறையும்
சூழ் துன்பம் மறைந்த பின்னர் இறைவனது
துதிபாட எமது மனம் துடித்து நிற்கும்!

இறைவனது துதி பாடி மகிழ்ந்திருக்கும்
இந்நாளில் உங்களுக்கும் எங்களது
குறைவில்லா வாழ்த்துக்கள் கூறுவதால்
கொழுந்து விடும் நமதன்பு, குவலயத்தில்
நிறைவான மணம் வீசும் பலமலர்கள்
நெஞ்சத்தில் இன்று முதல் மலர்ந்திருக்க
இறைவனையே வேண்டுகிறோம்; எமதன்பு
இன் காற்றில் பரவுமொரு இயல் பெறட்டும்!

நான் ஒரு முஸ்லிம்
நல்லெண்ணத்தூதுடன் வந்த
என்னுடைய வரலாறு
மிகத் தொன்மையானது
சாத்தானின் தூண்டுதலால்
என்னை நான் உணர்ந்தேன்
யாருக்கும் புரியாத
ஆத்மீக ஞானம்பேசி
விளங்காத ஒருவனாய்
நானிருக்கவிரும்பவில்லை

இறைவனின் பிரதிநிதியாய்
இந்த உலகுக்கு
இறைவனால் தெரிவுசெய்யப்பட்டவன் நான்
தெளிவான ஞானமுடன்
சமாதானத் தூதினை
சனங்களின் மத்தியில்
எத்திவைக்கும் போது
எத்தனையோ இன்னல்களை
எதிர்கொண்டேன் என்பதை
என்னுடைய வரலாறு
எடுத்துக் கூறிநிற்கும்.

கல்லடியும் பொல்லடியும்
காயங்களும் பட்டதனால்
தள்ளாடியது என்னுடம்பு
தழும்புகளும் தோன்றின
சொல்லடிகள் தொடர்ந்தாலும்
சோர்வடையா என்மனமோ
காயம் படாமல்
நன்கு தூய்மையாய் இருந்ததனால்
தொடர்ந்தும் வாழுகிறேன்

அன்று என்னை நோக்கி
அம்புகளும் வாள்களும்
கொன்று விடுவதற்காய்க்
குறிபார்த்து நின்றன!
அம்புகளும் வாள்களும்
அழிப்பதற்கு வரும்போது
நம்பிக்கை வைத்து நான்
எதிர்கொண்டு நின்றதனால்தான்
இன்னும் நிலையாக வாழுகிறேன்

இன்று என்னுடலைத்
துப்பாக்கி ரவைகள்
துளைத்துச் செல்கின்றன
இருந்தும் என்மனது
தூய்மையாய் இருப்பதனால்
தொடர்ந்தும் வாழுகிறேன்

ஏவு கணைகளையும்
நவீன ஆயுதங்களையும்
எதிர்நோக்கும் சக்தியினை
எனக்கிறைவன் அளித்துள்ளான்!

அணுவால் செய்த
ஆயுதங்கள் தாங்கி
துணிவாய் வருவோரைத்
தூசென மதிக்கும்
மனோதிடம் கொண்டு
வாழப் பயின்றுள்ளேன்
எனவேதான்
தொடர்ந்தும் இவ்வுலகில் வாழுகிறேன்!

நெருப்பிலிட்ட அந்த
நீசன் நம்றூதின்
நெருப்பும் என்னை
ஒன்றும் செய்யவில்லை
என்பதை என்சரிதை
எடுத்துக் கூறிநிற்கும்!
ஒட்டகங்கள் இரண்டை
ஒவ்வொரு திசைக்கும்
இட்டு இடையினிலே

என்னிரு கால்களையும்
அவ்வொட்டகங்களின் கால்களில்
ஒவ்வொரு திசை நோக்கிக்
கட்டி வைத்து
ஒட்டகங்களைக் கலைத்து விரட்டி
என்னுடம்பை இரண்டாய்க் கிழித்த போதும்
என்னுடைய இலட்சியத்தை
மறந்து விடாமல்
மனதைத் திடப்படுத்தி
இருந்தேன்
அதனால்தான் இன்னும் வாழுகிறேன்

சுடுகின்ற பாலைவனத்தில்
என்னுடைய
காற்சுவடுகள் இன்னும்
அழியாமல் இருக்கின்றன!

இறைவனுடன் நான்
உரையாடுவதற்காகத்
தெரிவு செய்த இடங்கள்
இன்னும் என்னுடைய வரலாற்றை
எடுத்துக் கூறுகின்றன!

இறைவன் என்னுடைய
பிடரி நரம்பையும்விட
அருகில் இருந்தான்
அதனால்தான் நானன்று
பெருமையுடையவனாய்
உலவித் திரிந்தேன்!

சமாதானத் தூதுவனாய்
வந்த எனது
அமைதியைக் கெடுக்க
ஆயிரம் சதிகள்
நடந்தன
எனினும் நானின்னும் பொறுமையுடன்
திடமாக வாழ்கிறேன்
திண்ணமாய் இவ்வுலகில்
இடமொன்றைப் பிடிப்பேன்
என்னும் நம்பிக்கை
என்மனதில் இருக்கிறது!

மொழியால்
என்னுடைய முயற்சியைத்
தடுக்க முடியாது
நிறத்தால்
என்னுடைய நெஞ்சுரத்தை
நீக்க முடியாது
பணத்தால்
என்னுடைய பலத்தை
வாங்க முடியாது
தேசியம் பேசி
என்னைத் திசை திருப்ப முடியாது
நவீன ஆயுதங்களால்
என்னை
நாசமாக்கிட முடியாது

எந்தமொழியும்
எனக்குச் சொந்தமொழியே
ஆனாலும்
எண்ணங்களை வெளியிட
இலகுவாயிருக்கும் மொழியை
நேசிப்பதனால்
நானோர்
மொழி வெறியன் என்ற
பழிச் சொல்லைப் பெற்றேன்!

எந்த நிறமும்
எனக்குச் சொந்த நிறமல்ல
ஒவ்வொரு நிறத்திலும் நான்
உலவித் திரிவதனால்
நிறத்துவேசிகளால்
நன்கு நெருக்கப்படுகின்றேன்!

பணத்தால் என்னுடைய
பலத்தை வாங்கிவிட
நினைத்தவர் இன்று
நிலைதடுமாறுகின்றார்!

நவீன ஆயுதங்களால் என்னை
நாசம் செய்ய முயன்றவர்

அவமானப்பட்டு இன்னும்
அடிவாங்கி ஓடுகின்றார்!

நவீன ஆயுதங்களை
நான் ஏந்தி நிற்பதுவும்
புவிமீது என்னைப்
பூண்டோடு ஒழிப்பதற்கு
வருவோர் அனைவரையும்
வன்மையாய் எதிர்ப்பதற்கே!

தேசியம் பேசி
என்னைத் திசை திருப்ப முயன்றவரின்
வேஷங்கள் இப்போது
வெளியாகி விட்டனவே!

நானொரு முஸ்லிம்
நன்றாய் இனங்காண்பீர்
புனை பெயருக்குள்
புரியாத ஒருவனாய்
இருப்பதனால் என்னை
இனங்காண முடியாது
என்னுடைய பெயரையே
என்றும் தாங்கியவனாய்
முன்னால் வருவேன்!
அப்போது என்னை இனங்காண்பீர்

இந்த உலகத்துக்கு நீதியை
எடுத்துச் சொல்வதற்காய்
வந்தவன் நான் என்பதை
வரலாறு கூறிநிற்கும்

என்றன் பழம்பெருமைகளை நான்
எடுத்துக் கூறுவதால்
எந்த நன்மைகளும்
இங்கெனக்கில்லை!

என்னுடைய பலவீனங்களை
இப்போது நான் உணர்ந்துள்ளேன்!

நான் மீண்டும் இறைவனை
நாடிப்போகின்ற
நாளும் வெகுதூரத்திலில்லை
அந்த நாளில் இறைவனுடன்
ஐக்கியமாவேன்
அப்போது இறைவன் என்னுடைய
பிடரி நரம்பையும்விட
அருகில் இருப்பான்
அதுவரை என்னை எவரும்
அழித்து விட முடியாது!

நாங்கள் ஏன்தா னிங்கிருந்து
நாய்கள் போலும் அலைகின்றோம்
நாங்கள் ஏன்தான் வீணாக
நம்பி யவற்றைக் கைவிட்டு
ஏங்கித் திரிந்து இறுதியிலே
இதயம் வெடித்துச் சாகின்றோம்
நாங்கள் இங்கே ஆண்டவனின்
பிரதி நிதியாய்ப் பிறந்துள்ளோம்!

நாங்கள் கேட்கும் ஒவ்வொன்றும்
நசுக்கி எறியப் படுகின்ற
மர்மம் எதுதா னென்றறிந்து
மார்க்கம் காணத் துடித்தோமா?
நாங்கள் பார்க்கும் ஒவ்வொன்றும்
நெருப்பைக் கக்கும் அடுப்பாகித்
தீங்காம் வழியைக் காட்டுகின்ற
தீமை தானு முணர்ந்தோமா?

எங்கள் பார்வை இறைவனவன்
ஏற்ற வழியில் செல்லுமெனில்
எங்கள் இரண்டு கண்களுமே
இறைவன் கண்கள் போலாகும்!
எங்கள் கைகள் இறைவனவன்
ஏற்ற வழியில் செல்லுமெனில்
எங்கள் இரண்டு கைகளுமே
இறைவன் கைகள் போலாகும்

எங்கள் கால்கள் இறைவனவன்
இனிய பாதைதனில் நடந்தால்
எங்கள் இரண்டு கால்களுமே
இறைவன் கால்கள் போலாகும்
எங்கள் உறுப்பு ஒவ்வொன்றும்
ஏற்ற வழியில் இயங்குமெனின்
எங்கள் வாழ்வு மலர்ந்துபின்னர்
இதயத் தூடே ஒளிபரவும்

நாங்கள் கேட்கும் பிரார்த்தனைகள்
நன்மை பலவும் விளைவிக்கும்
நாங்கள் கொண்ட இலட்சியங்கள்
நம்பிய வாறே வெற்றிதரும்
தூங்கும் போதும் எங்களுக்குத்
துணைகள் தாமே வந்துவிடும்
தீங்கே நினைக்கா நமக்காகத்
தேவைகள் வந்து குவிந்துவிடும்

எங்கள் பார்வை அத்தனையும்
இறைவன் விரும்பும் பார்வைஎன
எங்கள் செய்கை அத்தனையும்
இறைவன் விரும்பும் செய்கைஎன
எங்கள் நினைப்பு அத்தனையும்
இறைவன் விரும்பும் நினைப்புஎன
எங்கள் வாழ்வில் அமைந்துவிடின்
என்றும் இன்பம் நிரம்பிவிடும்!

எங்கள் உறுப்புகள் எல்லாமே
இறைவன் உறுப்பாய் மாறுகின்ற
பொங்கும் மகிழ்ச்சி தருமந்தப்
புதிய நாளின் வருகையினை
எங்கும் கண்டு இன்புறவே
இங்கே நாங்கள் இருக்கின்றோம்!

மாதர் குல மாணிக்கமாம் பாத்திமாவே!
மன்னர் ஹசன் ஹுசைனை ஈன்ற பாத்திமாவே!
நீதமுள்ள நெறி நின்றீர் பாத்திமாவே!
நேர்மையுள்ள தவமணியே பாத்திமாவே!

அலி என்னும் புருஷருடன் பாத்திமாவே!
அன்பாக வாழ்ந்திட்டீர் பாத்திமாவே!
கலி இருந்தும் கணவனையே பாத்திமாவே!
கண் குறையக் காணவில்லை பாத்திமாவே!

கோதுமை அரைத்த கைகள் பாத்திமாவே!
கொப்பளித்து விட்டனவே பாத்திமாவே!
தூது வந்த நபி மகளார் பாத்திமாவே!
தூய்மையுடன் துயர் கொண்டீர் பாத்திமாவே!

ஈரலில் ஒரு துண்டமான பாத்திமாவே!
ஈன்றெடுத்த நபி மணியின் பாத்திமாவே!
தீரமுடன் தீன் ஒளியை பாத்திமாவே!
தீவிரமாய் ஏற்று நின்ற பாத்திமாவே!

தந்தையின் துயர் கண்டு பாத்திமாவே!
தாங்காமல் அழுது நின்றீர் பாத்திமாவே!
புந்தி கெட்ட புவியோர்க்கு பாத்திமாவே!
பொறுமைநெறி காட்டி நின்றீர் பாத்திமாவே!

இஸ்லாத்தின் தவப்புதல்வி பாத்திமாவே!
எளியோரைச் சார்ந்துநின்றீர் பாத்திமாவே!
விசுவாசம் கொள்ளஎங்கள் பாத்திமாவே!
விரைவுடனே விளங்கிநின்றீர் பாத்திமாவே!

மங்கையர்க்கு வழிகாட்டப் பாத்திமாவே!
மானிலத்தில் வந்துதித்தீர் பாத்திமாவே!
இங்கிதமா யுங்கள் புகழ் பாத்திமாவே!
என்றென்றும் ஓதிநிற்பேன் பாத்திமாவே!

திக்கெட்டும் நலவு ஒலிக்கட்டும் - தீதைத்
தேடிப்போய் உலகம் பழிக்கட்டும் - மனம்
மக்களின் மனங்களில் திளைக்கட்டும் - என்றும்
வஞ்சனை பொடியாகிச் சிதறட்டும்!

பொங்கிய வெஞ்சினம் அடங்கட்டும் - அவை
பொறுமையின் ஒளியிலே மறையட்டும் - சுவை
தங்கிய கருத்துக்கள் எழும்பட்டும் - ஏற்றத்
தாழ்வுகள் நடுங்கியே ஓடட்டும்!

மண்ணிணி லுண்மைகள் பெருகட்டும் - அது
மனதினிற் கருவாய் வளரட்டும் - இரு
கண்ணிலும் ஒளிகள் பிறகக்கட்டும் - சூழுங்
காரிருள் கலைந்த பின் விடியட்டும்

**கண்திறவாய்** - **தாஸிம் அகமது**

நெஞ்சினிற் தழும்புகள் ஆறட்டும் - என்றும்
நீதிகள் மேடையில் ஆடட்டும் - சில
அஞ்சிய நெஞ்செலாம் அசையட்டும் - அசைந்து
அகிலத்தின் வெற்றியை நாடட்டும்!

பார்வயைின் நோக்குகள் பறக்கட்டும் - சேவைப்
பான்மையில் அவைகள் தெறிக்கட்டும் - நூற்
கோர்வைகள் நெஞ்சினிற் புரளட்டும் - வீண்
கூத்துக்கள் மூலையில் உறையட்டும்!

ஆடிய காலெலாம் ஆடட்டும் - மன
ஆசைகள் அலைகளாய் உருளட்டும் - வாகை
சூடிய புயங்களும் துடிக்கட்டும் - நம்
சூத்திரம் பிறருக்கும் விளங்கட்டும்!

நித்தம் நித்தம் உயிர் வாழும்
நீதி எங்கும் போதிக்கும்
புத்தகம் ஒன்று இருந்தாலும்
புரட்ட எம்மில் பலரில்லை
எத்தனை காலம் நாமெல்லாம்
ஏமாந் தலையும் மூடர்களாய்
இத்தனை பேரின் மத்தியிலும்
இளைத்து மெலிந்து வாழ்கின்றோம்!

வித்தை எறிந்து விதைக்காது
விளைச்சல் தனையே எதிர்பார்க்கும்
சித்தம் தளர்ந்த செய்கையினால்
சின்னா பின்ன மடைந்திட்டோம்
பெற்றாள் அன்னை பிறந்திட்டோம்
பிழைக எறியோம் நாங்களென
குற்றம் புரிந்து திரிவோராய்க்
குர்ஆன் தன்னை மறந்திட்டோம்!

எங்கு சென்று நாமெல்லாம்
இடித்துத் தள்ளப் படுகின்றோம்
கங்குல் என்னும் அறியாமைக்
கழுதைச் சவாரி செய்கின்றோம்
துங்க மணிபோற் சுடர்விட்டுத்
தூய்மை யுடனே இனிமேலும்
எங்கும் புகழைப் பெற்றிடவே
இனிய குர்ஆன் வழிநடப்போம்!

# வணக்கத்துக்குரியவன்

எங்கும் ஆளும் ஓர் இறைக்கே
எங்கள் வணக்கம் உரித்தாகும்
பொங்கும் மகிழ்ச்சி வாழ்க்கையினைப்
புவியில் ஆக்கித் தந்தோனாம்
எங்கும் ஆளும் ஓர் இறைக்கே
எங்கள் வணக்கம் உரித்தாகும்

அகிலம் எல்லாம் காப்போனாம்
ஆட்சி அனைத்தும் செய்வோனாம்
முகிலில் மழையைத் தருவோனாம்
முற்றாய் உருவம் அற்றவனாம்
எங்கும் ஆளும் ஓர் இறைக்கே
எங்கள் வணக்கம் உரித்தாகும்

பெற்ற தாயும் இல்லாதோன்
பிள்ளை ஒன்றும் பிறவாதோன்
உற்றார் உறவும் இல்லாதோன்
ஊணும் குடிப்பும் உறக்கமிலா
எங்கும் ஆளும் ஓர் இறைக்கே
எங்கள் வணக்கம் உரித்தாகும்

கரிய கல்லி னுள்ளிருக்கும்
கரிய தேரைக் குணவளிப்போன்
அரிய கலைகள் அனைத்தினையும்
அறிவும் அளித்துக் காப்பவனாம்
எங்கும் ஆளும் ஓர் இறைக்கே
எங்கள் வணக்கம் உரித்தாகும்

மறையை நமக்கு இறக்கிவைத்தோன்
மன்னித் தருளுங் கருணைபெற்றோன்
குறைகள் வராது காத்திடுவோன்
கோட்டை இன்றி ஆட்சிசெய்யும்
எங்கும் ஆளும் ஓர் இறைக்கே
எங்கள் வணக்கம் உரித்தாகும்

திங்க ளுருவைத் தேயவைப்போன்
சீறும் புலியைப் பாயவைப்போன்
அங்கம் அனைத்துமழ காயமைப்போன்
ஆதி அந்தம் இல்லாதிருக்கும்
எங்கள் ஆளும் ஓர் இறைக்கே
எங்கள் வணக்கம் உரித்தாகும்

உமரென்னும் புலவன் - அவன்
உணர்ச்சியூட்டும் கவிஞன்
இறையடி சேர்ந்தான் - எனினும்
இலங்கு புகழ் கொண்டான்

அமிழ்தினுமினிய உயர்
அழகுறு 'சீறா' தந்தோன்
கமழ் நறுமணத்தில் - தீங்
காவியமளிக்க வல்லோன்

எத்தனை காட்சிகள் - சீறாவில்
எளிதா யாற்றியுள்ளோன்
வித்தகர் போற்றும் - பெரும்
வீரர்க் கிலக்கணந்தந்தோன்

உள்ளத் தொளியேற்றும் - இனிய
உயர் கவிதை தந்தோன்
தெள்ளத் தெளிய தமிழில் - என்றுந்
தெவிட்டாக் கனியளித்தோன்

பாலையின் கொடுமையினை அரும்
பாவாலினிக்க வைத்தோன்
சோலைகடோறும் - சென்று
சுவை பல காண வைத்தோன்

மக்காவி னோங்கு புகழ் - தலங்களை
மனதிற் பதிய வைத்தோன்
திக்கெலாம் போற்ற ஒரு
தீஞ் சுவைப்புராணந் தந்தோன்

அற்புதங்கள் செய் - எங்கள்
அண்ணல் நபி மணியின்
பொற்புடைச் சிறப்பினைக் கண்டு
போற்றுங் கருத்தளித்தோன்

உயிரற்ற பொருள்களுக்கு உயிர்
ஊட்டிடும் புலமையினால்
துயரற்றுப் போக்க வல்ல
துடிப்புள்ள புலமையுள்ளோன்

தேர்ந்த இலக்கியங் கற்றோன் - நல்
சிந்தனைக் கறிவு தந்தோன்
ஓர்ந் தெதையுங் கூறுவோன் - நல்
உணர்ச்சி கவிக்களித்தோன்

அண்ணல் வாழ்க்கையினை - உயர்
அறிவா யாக்கியுள்ளோன்
கன்னல் சுவையும் கனி - ரசமும்
கண்டே அறிய வைத்தோன்

வாழ்விற் காணல் போலும் - பல
வண்ண உவமை கண்டோன்
கோளிற் குணங்காண முத்துக்
குவிய லார்த்துத் தந்தோன்

உள்ளுந் தோறும் - பொருள்
உவகை காட்டி மலர்க்
கள்ளில் மயக்கமில்லை முற்றாய்க்
கவியில் மயக்கந் தந்தோன்

கைக்கட கத்தையெடுத்து ஆட்டிக்
காவியம் பாடவைத்தோன்
செய்கரும மத்தனையும் - சீரிய
சிந்தனை யாயமைத்தோன்

நாதரிறசூல் நெறி பல தமிழ்
நாட்டிற் பரவச் செய்தோன்
காதல் கொண்டே நபிக்காய்ப் - பெருங்
காவிய மொன்றளித்தோன்

வானம் பூமி கடல்கள் - கவியில்
மனக்கண்ணால் கண்டிடலாம்
காணு மியற்கை வளங்கள் - படக்
காட்சி போன்று பார்த்திடலாம்

கம்பனின் கவிரசமுண்டு அதில்
கலைநறு மணங்களுமுண்டு
என்பெலா மூறுகின்ற எழில்
இன்சுவை பலவுமுண்டு

கற்பனைத் தன்மையினால் - சிறு
காட்டினைச் சோலை செய்தோன்
அற்புதங்கள் பலவும் - பாவில்
அழகுற சிருஷ்டி செய்தோன்

அறுசுவை யோடன்னம் பாலும் - அவன்
அழகிய கவியிலுண்டாம்
குறுநடை போடுமவன் - அடியில்
குறும்புகள் பலவுமுண்டாம்

மேடை
வானொலி
தொலைக்காட்சி

# அரங்கக் கவிதைகள்

# வைரியின் வலை காணாய்

எங்கும் இன்பந்தான் விளங்க
இதய வானின் ஒளி நிலவாய்ப்
பொங்கும் மகிழ்ச்சிக் கடலாகப்
புத்துணர்வில் நாம் மூழ்க
மங்கும் கரிய இருள் மறைய
மனதை ஆட்டும் கவலை நோய்
அங்கே ஓடி ஒளிந்திருக்க
அன்பில் உலகம் இயங்குகிறது.

ஆசை இன்பம் அவனியின் மேல்
அழிந்து மாண்டு மடிந்துவிடக்
கூசும் மனத்தின் பாவக்கறை
குதித்து குதித்து மேலெழும்ப
தூசிப் போர்கள் பின் நின்று
தொடர்ந்தும் எம்மைப் பார்த்திகழ
ஆசி கூறிக் கரம் கொண்டு
ஆதரிப் போர்கள் இருந்துமென்ன?

இயங்கும் உலகின் புதுமையெலாம்
எண்ணிலடங்கா அறிவு தர
தயங்கும் கோழை நெஞ்சமெலாம்
தரையில் வீழ்ந்து மடிந்துவிடப்
புயங்கள் இரண்டும் வீங்கி எழப்
பொறுமை எங்கோ மறைந்து விட
மயங்கும் உலகின் மடைமைக்கு
வாய்மை காட்டி வாழ்ந்தாலென்ன?



தாஸிம் அகமது

பேயாய் மாறி உலகத்ததோர்
பெரிதாய் ஆட்டம் போட்டாலென்ன?
தூய நிலையில் நடக்கையிலே
துன்பம் சூழ்ந்து வந்தாலென்ன?
நாயாய் அலைந்து மனிதரெல்லாம்
நசிந்து வாழ்விலின்னலுற்று
ஓயாதென்றும் வாடுவதை
உள்ளக் கண்ணால் பார்த்தாலென்ன?

ஊரார் சிரித்தாலோர் நாளில்
உண்மை தலையை நீட்டாதோ?
நேராய் நின்று நாம் எதிர்த்து
நெருக்கும் இன்னல் பல போக்கிச்
சீராய்த் தூய்மைக் கிடங்கொடுத்தால்
சிரிப்போர் பார்த்து என்ன செய்ய?
கூராய் இருக்கும் கொள்கையினால்
குத்திக் குத்திப் பார்த்தாலென்ன?

காற்றில் எங்கள் ஒழுக்கமெல்லாம்
கலந்து வீசிப் பறக்க விட்டுத்
தூற்றித் தள்ளி எம் கொள்கைத்
தூய்மை தன்னை அகற்றிவிட்டு
வேற்றுப் பாதை காட்டுகின்ற
வேச தாரிக் கொள்கைகளை
ஏற்று வாழும் எங்களுக்கோ
இதயம் ஒன்று இருக்கிறதா?

பிறந்தோம் நாங்கள் யாபேரும்
புவிலடிமையாய் விடவா?
மறந்து போன கோட்பாடும்
மார்க்கம் கூறும் தவறான
இறந்து போன வழிமுறைகள்
ஏற்று நடக்கும் இங்குள்ளோர்
சிறந்த ஒழுக்க நெறிமுறைக்குத்
தேடும் வினைகள் தாம் என்ன?

நாச வழிகள் எங்கிருந்தும்
நம்மை ஒன்றும் செய்வதில்லை
நேசம் கொண்டே நாம் அவற்றைத்
தேடிப் பிடித்துக் கொள்வதனால்
வீசி எறியும் குப்பைகளாய்
வீசி எறியப் படலானோம்
ஆசைதனுக்கே அடிமைகளாய்
அவதிப்பட்டு வாழுகின்றோம்.

எங்கிருந்து நாம் வந்தோம்
எந்த வேலை எங்களையும்
இங்கிருந்து எதிர் நோக்கி
அழைத்துக் கொண்டிருக்கிறதோ
அங்கே நாங்கள் போவதற்கு
அஞ்சிப் பதுங்கி இருந்து விட்டோம்
அதனால் என்ன? அதனால் என்ன?
இங்கு வாழும் மானிடர்கள்
இறந்தால் கொள்கை இறந்திடுமோ?

நான்கு வேதம் நாமுணர்ந்தோம்
நறிய மொழிகள் பல கேட்டோம்
வீங்கும் தீமை வெறி போக்கும்
வெற்றிப் பாதை பல கண்டோம்.
ஏங்கித் தவிக்கும் எங்களுக்கோ
இந்த உலகில் இடமிலையேல்
நாங்களென்ன மூடர்களோ?
நலிவு கொண்டே இங்கிருக்க

உணர்ச்சி பெறுவோம் உணர்ச்சி பெறுவோம்
அணைந்த நமது இலட்சியத்தை
அணைத்துப் பிடித்துச் செயல்படவே
மேலைத்தேய நாகரீகம்
வெற்று மனிதராக்கி விட
நாளும் சகியோம் அவைகளுக்குக்
கனவிலேனும் இடமளியோம்
வாழத் தெரியும் வழிவகைகள்
வகுத்து வைத்த நம் சமூகம்
ஊழித் தீயில் விழுந்தழிய
ஒரு நாளேனும் சம்மதியோம்.

என்ன செய்தோம்? என்ன செய்தோம்?
இந்தப் புவியிலென்ன செய்தோம்
மன்னு பொருட்கள் கொண்டு வந்து
வகுத்து விற்றுத் தேர்ச்சி பெற்று
இன்னும் பலவாம் செயல் முறைகள்
இங்கே பலர்க்கும் காட்டி விட்டு
பொன்னை நிகர்த்த கருத்துகளைப்
புவியில் தூங்க வைத்து விட்டோம்.

தூங்கும் அந்த கருத்துக்களைத்
தொட்டு எழுப்ப யாருமின்றி
ஏங்கி ஏங்கி தவிக்கின்றோம்.
இன்னல்களுக்கு மத்தியிலும்
நாங்கள் மடிந்து சாகின்றோம்.
நல்ல மதிப்பை இழந்து விட்டோம்.
தேங்கிக் கிடக்கும் தீமைகளைத்
திருத்தும் மனதைக் கெடுத்துவிட்டோம்.

அகிலம் படைத்து காக்கின்ற
ஆண்டவனும் இங்கெமக்கீந்த
எதிலும் நாங்கள் குறைசொல்ல
இடமே இல்லாதிருக்கின்றோம்
முகில்கள் கூட்டம் காற்றடிக்கும்
திசைக்கு ஏகிச் செல்வது போல்
அகிலந் தன்னில் அலைகின்றோம்
அண்ணல் வழியை மறந்து விட்டோம்.

இறைவன் வேதம் கூறுகின்ற
இலட்சியத்தை ஏன் மறந்தோம்.
குறைகள் மீண்டும் திரும்பி வரக்
கொண்ட கருத்தை எனிழந்தோம்
உறையும் பனியின் கட்டிகளாய்
உறைந்து உறைந்து கிடக்கின்றோம்
கரைந்து ஓடி எப்போது
கடலை அடையப் போகின்றோம்.

சகாபாக்கள் தாம் காட்டியவச்
சரித்திரத்தை ஏன் மறந்தோம்
தகாதன வாழ்வில் சேர்த்தே நாம்
சத்தியத்தை ஏன் மறைத்தோம்
மகா பெரும் ராஜ்ஜியம் அமைத்து
மாற்ற வொண்ணாப் புகழே கொண்டு
தொகை தொகையாய் அணிதிரண்ட
தொன்மை வாழ்வை ஏன் வெறுத்தோம்.

தொன்மை வாழ்வை வெறுத்திங்கு
தொல்லைகளுக்கு மத்தியிலும்
இம்மை வாழ்வுக் கடிகோலும்
எழுச்சி தானும் பெற்றோமா?
புன்மை வேலை பல செய்து
புல்லர்களாக மாறிவிட்டோம்
இம்மை மறுமை இரண்டினையும்
இணைக்கும் பொருளை நாம் மறந்தோம்.

அன்று நாங்கள் காட்டி நின்ற
அணையாப் பெற்றி தனை மறந்தோம்
இன்று உலகின் காந்தத்தால்
ஈர்க்கப்பட்டே மயங்குகிறோம்
ஓலை வரைந்து மாற்றார்க்கு
உண்மை விளக்கிய பெருமானார்
அன்று காட்டிய விதிமுறைகள்
அனைத்தும் மறந்து இழிவானோம்.

வைரிகள் உலகின் நாற்புறமும்
வலையை விரித்து வைத்துள்ளார்
உயரிய கருத்தை விட்டும் நாம்
ஓட்டை வலைக்குள் சிக்கி விட்டோம்!

என்று தானோ நாம் எழுவோம்
எழுந்தே உணர்ச்சி தனைப் பெறுவோம்
தென்றல் காற்றின் மணமாகத்
திகழ்ந்து நாங்கள் உலவி வரச்
சென்ற கால நினைவுகளைச்
சிறிதும் நினைத்துப் பார்ப்போமேல்
அன்று இருந்த நிலைமைக்கு
அகிலந் தன்னில் நிலை பெறுவோம்.

வெற்றி! வெற்றி! வெற்றியென
வீரமுழக்கம் செய்கின்ற
பெற்றி மிகுந்த நன் நாளின்
பேற்றை என்று தான் காண்போம்
சுற்றம் கடமை தொண்டாற்றல்
தூய்மை தனுக்கே இடமளித்தல்
உற்ற கொள்கை வகையுணர்ந்து
உலகை வேறுதிசை திருப்பல்
முற்றும் உணர்தல் இவையனைத்தும்
முறண்பாடின்றிச் செய்வோமேல்
வெற்றி! வெற்றி! வெற்றியெனும்
வீரமுழக்கம் தனைக் கேட்போம்!

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி
மாநாடொன்றில் வாசிக்கப்பட்ட கவிதை

எங்கும் ஆளும் இறைக்கே
எல்லாப் புகழும் உரித்தாகும்
பொங்கும் மகிழ்ச்சி வாழ்க்கையினை
புவியில் ஆக்கிக் தந்தவனாம்.

கறுப்பு வெள்ளிக்கிழமைகளின்
கதாநாயகரே
சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின்
தேசியத் தலைவரே - உங்கள்
நெருப்பு யாகங்கள் ஒவ்வவொன்றும்
எங்களை
நிமிர்ந்து நிற்கவைக்கின்றன.

கவிஞன் பிறக்கின்றான்
உருவாக்கப்படுவதில்லையாமே
தலைவர்களும் அப்படியோ?
ஆம் அப்படித்தான்
உங்களைப் பொறுத்தவரையில்

அட்டாளைச்சேனை என்றால்
நினைவுக்கு வருவது
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை
எட்டுத்திக்கும்
இவ்வூரின் பெயர் முழங்க வைப்பதற்காய்
நீங்கள் பட்ட பாடுகளின்
பலனை இன்று பார்க்கின்றோம்.

தேசிய மீலாத்தினமொன்றில் - இந்தத்
தேசத்தையே திரண்டு வரச் செய்து
விடாமல் பொழியும் அருள் மாரியாம்
எங்கள் பெருமானார் நாமம்
பெருமையுறச் செய்யும் உங்களுக்கு
அல்லாஹ்வின் அருள்மாரி
என்றென்றும் சொரியட்டும்.

எம்மான் நபியின் ஜனனதினம்
இனிய தமிழில் கவியமர்வு
பெம்மான் கவிஞர் பெருமக்கள்
பெருமான் நபியின் புகழ் பாடி (புகழ்பாட)
இம்மேடை மீது வீற்றுள்ளார்
இனிய சலாத்தை அவர்களுக்கும்
அம் மாநபியின் வழி நடக்கும்
அனைத்து முஸ்லிம் மாந்தருக்கும்
அன்பாய் உரைத்தேன்
அஸ்ஸலாமு அலைக்கும்.
ஏந்தல் நபியின் பெயரினிலும்
இனிய ஸலவாத் ஓதிடுவோம்.

இம்மை வாழ்வின் வரலாற்றில்
ஏற்றம் மிகுந்த ஒரு நிகழ்வு
பெருமான் நபியின் பிறப்பாகும்
பெருமை கொள்ளும் சிறப்பாகும்.

காலத்தால் சாகாத கருத்துக்ள்
கருவாகக் கொண்டிங்குமிஸ்லாத்தை
ஞாலத்திலுள்ளோருக் கெனவளித்து
நலமான வாழ்வு முறை தந்தவராம்
சீல நறும் போதனையாலுல கோரைச்
செம்மையோடு வாழவென சிறந்த பல
பாலனங்கள் தந்த நபி வாழ்வு முறை
பலகாலும் அருள் சொரியும் நெறியாகும்.

**வேறு**

பெண் சிசு பிறத்தல் அவமானம்
பிறந்தால் வளர்த்தல் பெருஞ்சுமையாம்
எனுங் குருட்டு நம்பிக்கை
இருந்த அறபு தேசத்தில்
பெண் சிசு பிறந்தால் உயிருடனே
பெருங்குழி தோண்டி புதைத்திட்ட
கருணையில்லாக் கல்மனத்துக்
கயமை கொண்டோர் மத்தியிலே
பெருமான் நபியின் பிறப்பதுவோ
ஒரு பெரும் உலக நிகழ்வாகும்.
பெருமான் நபியின் பிறப்பதுவோ
பெண்கள் வாழ்வு பயிர் தழைக்க
விடாமல் பொழியும் அருள் மழையாய்
விளங்கும் உலகம் முடியும் வரை

அல்லாஹ் இந்த மண்ணுக்கு
அளித்த கொடைகள் அனைத்திலுமே
வள்ளல் நபியின் வருகையொன்றே
மகத்துவமிக்க கொடையாகும்
எல்லா இனத்து மக்களுக்கும்
ஏற்றமிகுந்த வாழ்க்கை முறை
கல்லா நபியின் (உம்மி நபியின்) வாழ்கையிலே
காணக் கிடப்பதும் பெரும் அருளே!

அல்லாஹ் வழங்கிய அவ்வருளால்
அகிலம் எங்கும் பொழிகின்ற
அருளின் மாரி பேதமின்றி
நெல்லும் வளர பொழிவது போல்
புல்லும் வளர பொசிவதனால்
விடாமல் பொழியும் மாரியெனப்
பெருமான் நபியைக் காண்கின்றோம்.

கொடுக்கும் மழையும் கொடையாகக்
கூடிய மாதம் மூன்றாகும்.
தொடராய்ப் பெய்தால் மாரியென்போம்
சுற்றம் நீரால் நிரம்பி விடும்
விடாமல் பெய்து வெள்ளம் வரின்
விளைவோ வாழ்வில் துயராகும்
அடடா அண்ணல் நபியென்னும்
அருளின் மாரி என்றென்றும்
விடாமல் பொழிய வேண்டுமென
வேண்டி நின்றது இவ்வுலகு.

அண்ணல் நபியின் ஜனனத்தால்
அன்று சொரிந்த அருள் மாரி
இன்று வரையும் இடைவிடாது
இந்த உலகில் சொரிகிறது
இதனால்தானோ நாமெல்லாம்
இன்று நபியின் விழாவெடுத்தோம்.
அண்ணல் நபியின் அருள்மாரி
அட்டாளைச் சேனையெனும் இந்த
மண்ணில் என்றும் சொரிந்திடுக இங்கு
வருகை தந்தோர் அனைவரதும்
வாழ்க்கை வளம்பெற சொரிந்திடுக.

ஆண்டுகள் தோறும் அழகுத் திருநாளாய்,
ஈங்குள முசுலிம்கள் இணைந்து காணும்
ஈகைத் திருநாள்இணையிலா இன்பம்
பாகாய் இனித்திட பாரினில் மலர்ந்தது.
ஏகனாம் அல்லாஹ்வின் இனிய திருமறை
வாகுடன் இறங்கிய மகத்துவமிக்கதோர்
மாதத்தின் பெருமை சாற்றிடும் ரமழான்
போதிக்கும் நீதிகள் புரிந்திடும் ஒருநாள்.

ஆண்டியும் அரசனும் அல்லாஹ்வின் முன்னால்
கூண்டினில் வாழும்குருவிகள் போலாம்
மானுடம் ஒன்றேமனித தர்மமாய்
பேணும் இஸ்லாத்தின் பெருமை விளக்கும்
மாதமாய் இன்றுமலர்ந்த ரமழானில் -
ஓதியே வந்த உண்மைகள் யாவும்
நாளும் வாழ்வினில் நாம் பிடித்தொழுக
வேளையும் வந்ததேவிழித்ததே வையகம்!

விழித்தெழு தோழாவிண்ணும் மண்ணும்
விழித்திடு மிதனால் விடிந்திடும் வாழ்வு
உழைத்துடல் வாடி இழைத்து மெலிந்தவர்
குழைத்த பின் கைக்குள் குழைந்து உருளும்
மாவாய் இங்கே வருந்துதல் கண்டும்
கூவாமல் நீயும் குலை நடுங்கி இருப்பதனால்
நாளை உன்னுடைய நல்ல சந்ததியும்
வாழ இடமின்றி வாடும் இது உண்மை.

வாடும் ஏழைகள் வறுமை போக்கி
ஈடு கொடுத்தவர் ஏற்றம் கண்டிட
வந்ததே றமழான் வறுமையின் கொடுமையை
எந்த முஸ்லிமும் உணர்ந்திட வேண்டி
முப்பது நாட்கள் முழு நோன்பிருந்தோர்
ஒப்புவார் இதனை உணர்ந்த பின் அவரும்
மாறாய் நடந்தால் மறுமை நாளில்
சேருவார் நரகில் திண்ணமே திண்ணம்.

ஏழ்மை என்பது எதனால் வந்நது?
வாழும் வாழ்க்கைப் பிசகால் வந்ததா?
சூழும் சமூகக் கொடுமையால் வந்ததா?
நாளும் சுமைகள் நீள்வதால் வந்ததா?
சில்லறை கேட்டு தெருவில் அலையும்
ஒல்லும் வகைள் உணராதிருக்கும்
பலமிலா மனிதர்கள் பலரால் வந்ததா?
உலகில் அநீதிகள் ஓங்கியதால் வந்ததா?

அண்ணலார் உவந்த அருமையாம் றமழான்
எண்ணத் திருத்தி எத்தனை மக்கள்
கண்ணியமிக்க மாதம் அதனில்
புண்ணியம் செய்து புத்தொளி பெற்றார்.
எண்ணமும் செயலும் இணையும் போது
திண்ணமாய் எம்மை தீமைகள் அணுகா
என்னும் சிறந்த இலட்சிய நோக்குடன்
பண்ணும் ஈகையே பாரினை உயர்த்தும்.

ஈகை என்பதோ எளியோர் கீழோர்
ஈகை செய்வோர் அவரினும் மேலோர்
என்பதற்கல்ல எளியவர் தம்மை
துன்பத் திலிருந்து தூக்கி எடுத்தலாம்.
அடுத்தவர் பசியை அறிவதே செல்வம்
படைத்தவர் கடனாம் பஞ்சம் போக்கும்
மாபெரும் வழியே வகுத்தனர் அண்ணல்
சீர் பெறு மாதமும் சிறந்ததே இதனால்.

சிறந்ததாம் அந்தச் சீர் பெறும் மாதம்
அறத்தில் பிறழா அண்ணலார் உவந்த
அரும் பெரும் மாதம் ஆதலால் இந்நாள்
ஒரு பெரும் சக்தியாய் உருவெடுத்துலகில்
கோடி மக்கள் குதூகலித்திருந்து
கூடித் தொழுது குறைகளை இறைவன்
அடுத்த ஆண்டிலும் அகற்றிட வேண்டி
எடுத்த தம் கரங்களை ஏந்தினர் அவனிடம்.

ஏந்துக கைகளை இறையிடம் - மனிதரிடம்
ஏந்தி இரத்தல் இழிவாம் என்னும்
அண்ணல் நபியின் அழகிய மொழியை
எண்ணத் திருத்தி இரவும் பகலும்
அயரா துழைத்திடு அதனால் உன்றன்
துயரம் போகும் தொடர்ந்து கையை
ஏந்தும் நிலையும் இருப்பதால் மனிதா
மாந்தருள் பதராய் மதிப்பை இழக்கிறாய்.

மனிதப் பதராய் வாழும் மனிதா
புனித இஸ்லாம் புகட்டும் போதனை
ஒரு சில மனிதராய் உயர்ந்த வர்க்கல்ல
பெருமானார் வாழ்ந்த பெரிய வாழ்வை
ஒரு முறை நீயும் உணர்ந்து கொண்டால்
வருமே உன்னிடம் வளங்கள் யாவும்
தெருவாய் அலைந்து - சில்லரை கேட்டு
உருவம் மாறும் உன் நிலை உணர்க.

எல்லா நாட்களும் இறைவன் படைத்த
நல்ல நாட்களே எனினும் நன்மைகள்
அறுவடை செய்து அகத்தில் தூய்மை
உருப்பெறச் செய்யும் உயர்ந்த நாளாய்
இன்று விளங்கும் என்பதை மனத்தில்
நன்றாய் இருத்துக நன்மைகள் மேலும்
பெருக்கிட வேண்டிப் பிராத்தனை செய்து
செருக்குகள் நீக்குக சிறந்திடும் சமூகம்.

மாதங்கள் தம்மில் மகத்துவமிக்கதோர்
மாதமாய் இங்கு மலர்ந்த ரமழானில்
இலை மேலிருந்து ஆடும் பனி போல்
அலையும் மனதை அடக்கி ஆண்டு
பாவச் செயல்கள் செய்யப் பயந்து
நாவை அடக்கி இறைவன் இட்ட
ஏவல் செய்து விலக்கல் விலக்கி
ஆவியும் உடலும் புத்தொளி பெற்று
புதிய மனிதரைப் புவியினிலளித்து
இதயந் திறக்கும் இனிய நன்னாள்.

போலிச் சமூகம் புதிதாய்ப் போட்ட
வேலிகள் உடைத்திட வேண்டும் என்றே
எத்தனை பெரிய இறை நேசச் செல்வர்கள்
சத்திய இஸ்லாம் சாற்றும் வழியினில்
முறையாய்ப் போராடி முயன்ற போதிலும்
குறைகள் நாளும் குறைவதாயில்லை.
கறைகள் இல்லாச் சரிதம் படைத்த
முன்னோர் வாழ்ந்த வழியினில் செல்கையில்
இன்னல் கோடி எழுவதும் இயல்பாம்.

கண்ணீரே வாழ்வின் கதையாய்க் காணும்
பெண்கள் சமூகத்தில் பெரிய சுமையாய்
இருக்கும் நிலையினை எவர்தான் உணர்வார்
பொறுப்பு மிகுந்தோர் அனைவரும் இதனை
எண்ணிப் பார்த்து ஏற்றம் கண்டிட
அண்ணல் வழியை அடிக்கடி நினைத்து
புண்ணியம் செய்யப் பிறந்ததே ரமழான்
என்னும் உண்மையை இன்றே உணர்வோம்!

நன்மைகள் எங்கும் பூத்துக் குலுங்கிய
புண்ணிய மாதம் ஈந்த கனிகளைப்
புசிக்கும் நந்நாள் பூமியில் மலர்ந்தது
திசைகள் தோறும் தீன் ஒளி பரவி
உலகம் இன்று ஒளியில் மிதக்கும்
பொலிவில் நாமும் பூரித்திருக்கும்
போதில் மார்க்க போதனை மறந்து
சூதும் குடியும் சூழ இருந்தால்
நபி மணி நயந்த நற் பெருநாளை
புவிதனில் எங்கனம் காணுதல் கூடும்.

நபி மணி நயந்த நற் பெருநாளிது
புவிதனில் வறுமைப் புழுதியைத் துடைத்து
ஒளிபெறும் சமூகம் ஒன்றினைக் காண
வழி பல சொன்ன மாநபியவர்கள்
உளந்தனைக் கவர்ந்த ஒரு பெருநாளிது
பழுதிலாத் தவத்தின் பலன் பெறும் நாளிது.
உடலும் உள்ளமும் இறைவனின் பாதையில்
திடமுடன் செயல்படும் சிறந்த நாளிது
இந்நாள் பெரிது ஏந்தல் நபிகள்
சொன்ன மொழிகள் வாழ்வில் ஏற்று
பொன்னாய் ஒளிரும் புதிய சமூகம்
ஒன்றை அமைத்துஉயர்வோம் இனிது.

பெருநாள் கவியரங்கு இ.ஒ.கூ

அல்லாஹு அக்பர் அலாலாஹு அக்பர்
அலாலாஹு அக்பர் அலாலாஹு அக்பர்

ஆண்டுகள் தோறும் அழகுத் திருநாளாய்
ஈங்குள முஸ்லிம்கள் இணைந்து காணும்
ஈதுல் அழ்கா தியாகத் திருநாள்
தினமாம் இதுவோ அண்ணலார் நயந்த
அருமைத் திருநாள் அண்ணலார் வயது
அறுபத்து மூன்றை அடைய முன்னர்
இறுதியாச் செய்த ஏற்றம் நிறைந்த
ஹஜ்ஜின் மகிமை எடுத்து இயம்பும்
இந்த நாளில்...

தியாகத்தில் மலர்கின்ற அன்பு மலர்த்
தேன் சிந்தும் சுவையினிலே நாமின்று
பயபக்தி நிறைந்தவொரு நந்நாளைப்
பார்க்கின்றோம் இபுறாகிம் நபி தந்த
அயராத திடனாலே அமைந்த கதை
அழகான வாழ்வமைக்க உதவுகின்ற
உயர்வான தத்துவங்கள் விளக்கி நிற்கும்
ஒளியேற்றி வாழ்வுக்கு வழிகாட்டும்.

வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காய்
வாழ்ந்த நபி இபுறாகீம் பாதையிலே
தாழ்வு வரும் சத்தியத்தின் சோதனைகள்
தாமும் வரும் அவைசகித்து வெல்லுகிற
மேலான மனம் படைத்தால் வெற்றி வரும்
மேகம் போல் ஓடிவரும் துயர் மறையும்
சூழ் துன்பம் மறந்து பின்னர் இறைவனது
துதிபாட எமது மனம் துடித்து நிற்கும்.

அல்லாஹு அக்பர் அலாலாஹு அக்பர்
அலாலாஹு அக்பர் அலாலாஹு அக்பர்

சொல்லாலும் செயலாலும் வாழ்க்கையினை
அல்லாஹ்வின் பொருத்தத்தை அடைவதற்காய்
எல்லாமே ஏகனுக்காய் என்று நபி
எமக்காக அமைத்தளித்த இஸ்லாத்தின்
இறுதியாம் கடமையெனும் ஹஜ் தன்னை
இறுதியாய் நபியவர்கள் நிறைவேற்றி உரையாற்றி
சகாபாக்கள் உள்ளங்களை
இறைவன் பால் இழுத்தெடுத்த வரலாறு
இறுதிநாள் வரைக்கும் இங்கே நிலைத்து நிற்கும்
இகபரத்தின் ஈடேற்றம் தமையளிக்கும்.

இகபரத்தின் ஈடேற்றம் பெறுவதற்காய்
ஏந்தல் நபி எமக்களித்த போதனைகள்
சுகமான சுவனத்தின் வாசல்களில்
சோபனங்கள் பெறுவதற்கு வழிவகுக்கும்.

இறுதி ஹஜ்ஜின் இறுதியுரை நபிவாழ்வின்
இறுதியினை எடுத்தியம்பி நிற்கிறதோ
என்றபூபக்கர் சித்தீக்கும் ஏங்கி அழ, சகாபாக்கள்
ஒருலட்சத்திருபத்தி நாலாயிரம் ஒன்று கூடி
நபிமணியின் இறுதியுரை செவிமடுக்க
நல்லாவல் கொண்டவராய் நின்றனரே!

தோழர்களே நாமிங்கு மறுமுறையோ
தூயவிந்தக் கடமையினை நிறைவேற்ற
கூடுவமோ, நானறியேன்
ஆகையினால் கூறுகின்றேன் அல்லாஹ்வின்
ஏவல்கள் எடுத்திடுவீர்
எடுத்துரைப்பீர் வருகை தராத் தோழருக்கும்
வட்டியினைத் தவிர்த்திடுவீர்
பழிக்குப் பழி, வாங்குகின்ற கொலை தவிர்ப்பீர்
கெட்ட சைத்தானின்
வலையினிலே சிக்கி நீவிர்
வாழ்க்கையினைக் கெடுக்காதீர்.

இறைவனையே என்றென்றும்
மறந்திடா திருந்திடுவீர்
பெண்டிரையும் உங்களது
அடைக்கலப் பொருளாகக்
கண்டிடுவீர் அவர்க்கேற்ற
கடமைகளைச் செய்திடுவீர், ஈமான்
கொண்டவர்கள் அனைவருமே
உடன் பிறப் பாகிடுவர்
கொண்டவுங்கள் அடிமைகளைக்
குறைவுறவே நடத்தி நிதம்
அண்டியும்மை வாழுகின்ற
வாழ்க்கையினை அமைத்திடுவீர்
பிறர் பொருட்கள் கவர்வதுவோ
பெரும் பிழையே யாகிடுமாம்.

அறபிகளும் அஜமிகளும்
வேறு வேறு என்கின்ற,
பேதங்களைத் விட்டுடுவீர்
சிறிதளவேயாயினும் உயர்வு தாழ்வு
கருதி நிதம் வாழுவதைத் தவிர்த்திடுவீர்.

ஆதிபிதா ஆதம் அலை
ஆனதுவும் மண்ணாலே
அவர்களது தோன்றல்களாய்
ஆனவரும் மண்ணாலே
ஆகையினால் யாவருமே
அல்லாஹ்வின் அடிமைகளே
அவனின்
சொல்லைப் பணிவதனால்
சுவர்க்கத்தைப் பெற்றிடுவீர்.

திருமறையாம் குர்ஆனும்
பெருவழியைக் காட்டி நிற்கும்
அருள் மறையாகவே அது காட்டும்
போதனைகள் கடைப்பிடிப்பீர்
என் வழி நடந்து நீவிர்
ஏற்றமே கண்டிட
என் வழியனைத்தும் வாழ்வில்
ஏற்றே நடந்திடுவீர்
திருமறை என் வழி
இரண்டுமே இருவிழி
வருவன எதிர்கொள்
மனத்திடன் கொண்டு

இருமையின் வெற்றிக்கு
இடையறா துழைத்திடுவீர்
இதனால் நீவிரும்
வழிகெட மாட்டீர்
உரையதை முடித்து
நபிமணி அங்கு
ஒன்று திரண்ட தோழரை நோக்கி
தொடர்ந்து கூறினர்.

தோழர்காள் நீங்கள்
தூதுவத்தின்
பூரணத் தன்மை புகன்றிட சாட்சி
பகன்றிட வேண்டும் எனப்
பகர்ந்திட்ட வேளை
தூதர் நபியே இறைவனின் தூதினை
பூரணமாக்கிப் புனித மேயடைந்தீர்
எல்லாம் வல்ல அல்லாஹ் விடத்தில்
சொல்வோம் சாட்சி என்றனர்; ஏற்றனர்
நபிமணி இருகரம் ஏந்தி
இறைவனை வேண்டி இரந்து நின்றனர்.

"இறைவா இதற்கு நீயே சாட்சி"
"இறைவா இதற்கு நீயே சாட்சி"
"இறைவா இதற்கு நீயே சாட்சி"
என்று மும்முறை எடுத்தே இயம்பினர்
"இன்று உமக்காய் உமது மார்க்கம்
நிறைவு செய்தேன்" என்னும் இறைவனின்
இனிய வசனம் இறக்கப்பட்டதும்
இறுதி ஹஜ்ஜை முடித்து நபிகள்
இல்லம் ஏகினர்; மதீனா இல்லம் ஏகினர்
சொல்லும் செயலும் தொடர்ந்து வாழ்வில்
வெல்லும் வழிகள் வேந்தர் நபிகள்
இறுதி ஹஜ்ஜிலும் எடுத்துக் காட்டினர்.
மறுமை வாழ்விலும் வெற்றி கொள்ளும்
உம்மத்தாரை உலகுக்களிக்கும்
செம்மை மிகுந்த சீரிய நாளாம்
இன்று இறைவன் துதியை நாமும்
நன்று பாடி மகிழ்ந்தே இருப்போம்
ஈத் முபாறக்! ஈத் முபாறக்!.

ஹஜ்ஜுப் பெருநாள் வானொலிக் கவியரங்கு

எங்கும் ஆளும் ஓர் இறைக்கே
எல்லாப் புகழும் உரித்தாகும்
பொங்கும் மகிழ்ச்சி வாழ்க்கையினைப்
புவியில் ஆக்கித் தந்தோனாம்
எங்கும் ஆளும் ஓர் இறைக்கே
எல்லாப் புகழும் உரித்தாகும்

அவைத் தலைவ, ரவூப் ஹகீம்
அழகான தமிழெடுத்துச்
சுவை ததும்பக் கவியமைத்து
செவிக்குணவு விருந்தளிக்கும்
சொல்லேருழவர்காள்
நல்ல தமிழ் சொற்பொழிந்து
நம் மனங்கள் நிறையச் செய்யும்
வல்லமைகள் கொண்டவர்காள்
மெல்ல வந்து அமர்ந்திருந்து
“மீறல்கள்” வெளியீட்டு விழாவிதுவோ
நல்லவிதமாய் நடை பெறுதல் காண்பதற்கு
நாடிவந்த சோதரர்காள், சோதரிகாள்
எல்லோருக்கும் என்றன்
இனிய சலாம் வந்தனங்கள்.

கல்லொழுவை தந்த ஒரு கலைஞன்
கவிஞன், கதாசிரியன், பாடகன், தமிழ்ச்
சொல்லெடுத்துச் சுவை கொடுத்துப்
படைத்திருக்கும் சிறுகதைகள்
மெல்லவொரு தொகுப்பாகி
தடைகள் பல மீறி வந்து - ''மீறல்களாய்''
மேடையேறுகின் றதின்று
மினுவாங்கொடை தனிலே.

மலையாளம் தந்தவொரு
மாபெரிய படைப்பாளி
வைக்கம் பஷீர்
அவர் நாமம் கொண்டு
அவர்போன்று
அழகான புனைகதைகள் தருகின்ற
முப்பரிமாணம் கொண்டவராய் மு.பஷீர்
இப்போது எம்முன்னே தோன்றுகின்றார்.
கவிஞனாய்ப் பாடகனாய்க் கதாசிரியனாய்

பாடகனாய் வந்திருக்க வேண்டியவர்தான்
இந்த பஷீர்
படைப் பிலக்கியங்கள்
தேடிப் படித்தும்,
திறனாய்வு செய்வது போல்
இலக்கிய நண்பர்களுடன்
கூடிக் கதைத்தும்
குறை நிறைகள் நிறுத்தும்.

இலக்கியத்தின்
ஆழம், அகலம், நீளம், அளந்தும்
நெடுங்காலம்
முயன்று தன்னைத் தானே
புடம் போட்டுக் கொண்டதனால்
புனை கதைகள் படைக்குமொரு
நிலையான இலக்கியத்தின்
ஆளுமையின் நிலை கண்டு
கலையை விலை பேசாக்
கற்பு நெறி கொண்டு
இப்போது
எம்முன்னே தோன்றுகின்றார்
முப்பரிமாணம் கொண்டவராய்
மு.பஷீர்.

“பாடகனால்
சில கணப் பொழுதுகளையே
பரவசத்தில் ஆழ்த்திடலாம்
படைப்பாளனோ
பேனாப்பிடித்துப்
பிரசவிக்கும் படைப்பனைத்தும்
மானுடத்தின் மேன்மைக்காய்
மலர வேண்டுமென”
மூனா பஷீர் முனைந்து முனைந்து
படைத்தவைகள்
மானுடத்தின் மேன்மையினை
வளர்ப்பதற்கு உதவட்டும்

ஆதம் நபியவர்கள் (ஆதிபிதாவாம்)
அல்லாஹ்வின் கட்டளையை
மீறியதனால் அன்றோ
மேதினியில் நாம் பிறந்தோம்
மீறல்கள் தந்தவொரு
வரலாற்றுச் சின்னமாய்
மானுடரின் பிறப்புலகில்
தொடரான நிகழ்வாகத்
தொடர்வதையும் நாமறிவோம்.

எண்ணில்லா மீறல்கள்
இப்புவியில் நிகழ்வதுண்டு
அவற்றையெல்லாம்
எழுத்தினிலே வடிப்போரும்
இங்குண்டு பஷீரைப் போல்
கண்ணீரில் வாழுகின்ற மாந்தரினைக்
கதையாகக் கவியாகக் காவியமாக
மண்ணுக்கு அளிப்பவனே
மகத்தான படைப்பாளி.

மரபுடைத்து மீறி
மானுடத்தைப் பேணுதற்காய்
வடக்கினிலே
டொமினிக் ஜீவாக்கள்
டானியல்கள், தெணியான்கள்
செங்கை ஆழியான்கள்
தெற்கினிலே திக்குவல்லை கமால்கள்
தெளிவத்தை ஜோசப்கள் அல் அஸூமத்கள்
ஆப்டீன்கள், 'ஷம்ஸுகள், பஷீர்கள்

இலக்கியத்தில்
வரலாற்று மீறல்கள்
எத்தனையோ எத்தனையோ
மரபுடைத்து, அதை மீறிக்
கவியெழுத
வந்ததன்றோ புதுக்கவிதை

சாதிக் கொடுமையினைச்
சாடி எழுதியவர்கள் சாதியெனும்
வழிவழியாய் வந்தவொரு
மரபுதனை மீறிக்
கவிதைகளும் நாவல்களும்
சிறுகதையும் புனைந்ததனால்
எத்தனையோ பாத்திரங்கள்
எம்முன்னே நடமாடும்
தத்துவத்தைப் பெற்றுத்
தலை நிமிர்ந்து நின்றனவாம்.

எழுத்துக்களால் வாசகரின்
இதயத்தைத் தொட்டவனே!
சமூகக் கொடுமைகளைப்
பேனாவின் மைத் தீ கொண்டு சுட்டவனே!
உன் கதைகளில் வரும்
கதா பாத்திரங்களோ
மரபுகள் மீறியவர்களாய்
மாறியிருக்கலாம் - ஆனால் நீயோ
மனிதன் என்னும் மரபை விட்டும்
இன்னும் மீறாமல் இருக்கின்றாயே!

இனிமை, எளிமை,
பண்பாகப் பேசும் பான்மை
அநீதி கண்டு கொதிக்கும் போக்கு
அத்தனையும், அத்தனையும்
மரபாக இன்னும் உன்னிடம்
மலர்ந்து கொண்டுதானே இருக்கிறது
அவற்றை விட்டும் உன்னால்
ஒருக் காலும் மீறவே முடியாது.

நடமாடும் கதை மாந்தர்
நம்முன்னே நடமாடக்
கதையெழுதும் நாயகனே!
மு.பஷீரே உன்கதைகள்
இடம் காலம்
எல்லாமே மீறி இலக்கியத்தில்
இடம் பிடிக்க வேண்டுமென
வாழ்த்தி விடை பெறுகின்றேன்
வணக்கம், வஸ்ஸலாம்.

மு. பஷீரின் வெளியீட்டு விழாக் கவியரங்கு

05.01.1997

## அநாதைகள்

எம்மான் நபியின் ஜனனதினம்
இனிய தமிழில் கவி அமர்வு
பெம்மான் கவிஞர் பெருமக்கள்
பெருமான் நபியின் வாழ்க்கையினை
தம்மாலான தலைப்புக்களில்
தரமாய் வழங்க வந்துள்ளார்
அம் மாநபியின் வழி நடக்கும்
அனைத்து முஸ்லிம் மாந்தருக்கும்
எந்தன் சலாத்தை உரைக்கின்றேன்
ஏந்தல் நபியின் பேரினிலும்
இனிய சலவாத் ஓதிடுவோம்...

இம்மை வாழ்வின் வரலாற்றில்
ஏற்றம் மிகுந்த ஒரு நிகழ்வு
பெருமான் நபியின் பிறப்பாகும்
பெருமை கொள்ளும் சிறப்பாகும்

பெண் சிசு பிறந்தால் அவமானம்
பிறந்தால் வளர்த்தல் பெருஞ்சுமையாம்
என்னும் குருட்டு நம்பிக்கை
இருந்த அரபு தேசத்தில்
பெண் சிசு பிறந்தால் உயிருடனே
பெருங்குழி தோண்டிப் புதைத்திட்ட
கருணையில்லாக் கல் மனத்து
கயமை கொண்டோர் மத்தியிலே
பெருமான் நபியின் பிறப்பது வோ
ஒரு பெரும் உலக நிகழ்வாகும்

அல்லாஹ் இந்த மண்ணுக்கு
அளித்த கொடைகள் அனைத்திலுமே
வள்ளல் நபியின் வருகையொன்றே
மகத்துவமிக்க கொடையாகும்.

இத்தனை மகத்துவமிக்கதொரு
ஏந்தல் நபிகள் பிறக்கையிலே
தந்தை இழந்த அநாதையென
இந்த மண்ணில் உதித்தார்கள்

தந்தை இழந்த நபியவர்கள்
தாயார் ஆமினா அரவணைப்பில்
சிந்தை கவரும் சிறுவரெனச்
சிறப்புற வளர்ந்து வருகையிலே
அந்தோ! தாயும் இழந்து ஒரு
அநாதைச் சிறுவர் ஆனார்கள்.

வேறு:

நலிவுற்றோர் வாழ்வுக்கு ஒளி கொடுத்த
நபிமணியின் வாழ்வினது ஆரம்பமே
அநாதை நிலை ஆனதுவும் எல்லாம் வல்ல
அல்லாஹ்வின் அமைப்பன்றோ, அதனாற் போலும்
அநாதைகளைக் கரங்கொடுத்து அரவணைக்கும்
அழகான சம்பவங்கள் பெருமானார்
வாழ்க்கையிலே அமைந்திருக்கக் காணுகின்றோம்,
வகையாக நாமவற்றைக் கடைப்படித்து
தூக்கிடுவோம் அநாதைகளைத் தோள் கொடுத்து

மனிதருக்கு மனிதர்கள் ஆதரவு
வழங்குவதே இல்லையெனில் அநாதரவு
அநாதரவாய் வாழ்பவரும் அநாதைகளாம்
அவர் வாழ்வுக் கொளி கொடுத்தல் அவசியமாம்

தாய் தந்தை அற்றவர்கள் மட்டும்தான் இந்தத்
தரணியிலே அநாதைகளா? வறுமையெனும்
நோய் கொண்டு வாழ்கின்றோர் அநாதைகளே
அவர் வாழ்வு
நொடியாது இருப்பதற்கு உதவுவதும் இங்கே
அநாதைகளுக் குதவுவதாய் அமையுமொரு
அழகான நபி வழியாய் ஆகிடாதோ?

தாய் தந்தை இழந்தவர்கள் மட்டும்தான் இந்தத்
தரணியிலே அநாதைகளா கல்வியெனும்
செல்வத்தைப் பெறுவதற்கு முடியாது, பல
சிரமங்கள் படுவோரும் அநாதைகளே அவர்வாழ்வு
கல்வியினால் சிறப்புறவே கரம் கொடுத்தல்
கருணை நபி காட்டிநின்ற நடைமுறையாம்.

நலிவுற்றோர் வாழ்வுக்கு ஒளிகொடுத்த
நபிமணியோ அநாதையிடம் காட்டி நின்ற
நிகரில்லா அன்புக்கோர் நிகரில்லை, அந்த
நிகழ்வுகளை வரலாறு கூறி நிற்கும்
மதினாவில் அநாதைகளாய் கல்வி கற்க
வசதியின்றி வாழ்ந்து வந்த சிறுவருக்குப்
போரினிலே கைதிகளாய் ஆனவரைக் கல்வி
போதித்துக் கொடுத்திடவே பணித்தார்கள்.

பெருமானார் ஒரு பெருநாள் தினத்தன்று
இறையில்லம் நோக்கி நடை போடுகையில்
வழியினிலே ஒரு சிறுவன் அழுதவனாய்
வருகின்ற கோலத்தைக் கண்டார்கள் அவனிடமே
ஏன் பிள்ளாய் அழுகின்றாய் என வினவ
எனக் கெவரும் இங்கில்லை பெருநாளை
இனிதாகக் கொண்டாட உடையில்லை, என்றவுடன்
பெருமானார் அவனைத் தம்
கரம் பிடித்து இல்லம் சென்று
புத்தாடை அணிவித்துப் பூரிக்க வைத்துப் பின்
தலை தடவி அரவணைத்து மகிழ்ந்த கதை
அநாதைகளுக்கு அவசரமாய் உதவுவதில் நபிமணியின்
அழகான நடைமுறையைக் காணுகின்றோம்.

தாய் தந்தை அற்றவர்கள் மட்டுந்தான் இந்தத்
தரணியிலே அநாதைகளா, தமக்குதவ
ஆருமின்றி வாடிநிற்கும் முதியோரும் அநாதைகளே
அவர் வாழ்வு
சீர் பெறவே விளங்குதற்கு உதவுவதும் இச்
செகத்தினிலே சிறப்பான செயலாகும்.

பெற்றெடுத்த தம்மக்கள் வசதியுடனிருந்தும் சில
பெற்றோர்கள் படும் அவஸ்தை கண்டு மனம் கலங்கும்
பெற்றோரைப் பெருஞ்சுமையாய் ஒதுக்கிவிடும்
பிள்ளைகளாற் பெற்றோரும் அநாதைகளாய்
மாறுகின்ற நிலைமாற வேண்டும், மாநபிகள்
கூறிநின்ற கருத்துக்கள் மனங் கொள்ளல் வேண்டும்.

பெற்றோரால் முறையாகக் கவனிக்கப் படாதிருக்கும்
பிள்ளைகளும் அநாதைகளே அவர் வாழ்வு
குற்றமிலா வாழ்வாக மலர்வதற்கு உதவிடுதல்
குவலயத்தில் முஸ்லிம்கள் அனைவரதும் கடனாகும்
உற்றாரும் உறவினரும் இருந்தாலும் அவர்களினால்
ஒருநாளும் கவனிக்கப்படாதோரும் அநாதைகளே!

ஆயிரமாம் அநாதைகளும், போர் நடக்கும் பூமியிலே
அன்றாடம் உலகத்தின் நிகழ்வாக ஆனதுமேன்?
சேயிழந்த பெற்றோரும் சீரழிந்த வாழ்க்கையுடன்
திசை தெரியாதல்லலுறும் சிறுவயதுக் குழந்தைகளும்
தாயிழந்து தவிக்கின்ற அநாதைகளாய் மாறிவரும்
தன்மையது எப்போது மாறிடுமோ? சமாதானம்
காயங்கள் பட்டிங்கு குற்றுயிராய்க் கிடக்கிறதே
கண்கலங்கித் தனிமையிலே அழுகின்ற அநாதையைப் போல்

இம்மையிலே இஸ்லாத்தின் வழி நடந்து
எம் பெருமான் நபிமணியின் போதனைகள்
செம்மையுடன் கடைப்பிடித்து ஒழுகிவந்தோர்
மறுமையிலே ஒரு போதும் அநாதைகளாய்
மாறாது சுவனபதி அடைவதுண்மை இங்கு
நன்மைகளில் குறை செய்து வாழ்ந்து வந்தோர்
நரகத்தில் நுழைய முன்னர் அநாதைகளாய்
என்ன செய்வதென்றறியாது இருக்கையிலே
எமது நபி அவர்களுக்காய் இறைவனிடம்
மன்றாடிக் கேட்பார்கள் மற்றும் சில மனிதர்களோ
அல்லாஹ்வின் கோபத்துக்குள்ளாகி அநாதைகளாய்ப்
பொல்லாத நரகத்தைப் போய்ச் சேர்வார்.

எக்கதியும் அற்றவொரு அநாதையராய் மறுமையிலே
இருப்பவர்க்கு எக்கதியும் இல்லையன்றோ
அக்கதியோ நமக்கென்றும் அமையாதிருப்பதற்கும்
அண்ணல் நபி ஷபாஅத்தை மறுமையிலே பெறுவதற்கும்
நலிவுற்றோர் வாழ்வுக்கு ஒளி கொடுத்த
நபிமணியின் வழிநடப்போம் சோதரரே!
இலை இங்கு அநாதைகளாய் வாழ்பவர்கள் என்கின்ற
நிலை தோன்ற வேண்டுமென்றே
அதற்காக எல்லாம் வல்ல
அல்லாஹ்வின் அருள் கிடைக்கப்
பிரர்த்திப்போம் நபி பேரில்,
எல்லோரும் சலவாத்தை ஓதிடுவோம்
சல்லல்லாஹு அலாமுகம்மது
சல்லல்லாஹு அலைஹிவசல்லம்.

# முஸ்லிம் பெண்ணே

(அந்தாதி)

சாந்தியும் சமாதானமும் மலர்ந்திடுக
சன்மார்க்க வழி வந்த முஸ்லிம் பெண்ணே!
சூழ்ந்திடும் பாவ இருள் நீக்கிடவே
தூயோனைப் பிரார்த்தனை செய் முஸ்லிம் பெண்ணே!

தூய இஸ்லாத்தின் வழி நடந்து
துன்பங்கள் போக்கிடுவாய் முஸ்லிம் பெண்ணே!
நாயனருள் கிட்டுமுன் வாழ்விலென
நம்பிக்கை வைத்திடுக முஸ்லிம் பெண்ணே!

நம்பிக்கை ஒன்றேதான் இஸ்லாத்தில்
நாமீட்டும் பொருளாகும் முஸ்லிம் பெண்ணே!
அம்புவியில் தேடுகின்ற பொருட்களெல்லாம்
அவ்வுலகில் உதவ வரா முஸ்லிம் பெண்ணே!

அவ்வுலகம் என்பதுவோ மறுமையாகும்
அங்கேதான் இன்பமுண்டு முஸ்லிம் பெண்ணே!
இவ்வுலகில் நன்மைகளைச் செய்வதனால்
ஈடேற்றம் உண்டாகும் முஸ்லிம் பெண்ணே!

ஈடேற்றம் உண்டாகும் வழிகளினை
இஸ்லாமே போதிக்கும் முஸ்லிம் பெண்ணே!
தேடற் கரியவொரு பொக்கிஷமாய்த்
திருக் குர்ஆன் இருக்கிறது முஸ்லிம் பெண்ணே

திருக்குர்ஆன் கூறுகின்ற வழி நடப்பாய்
தீமைகளை அகற்றிடுவாய் முஸ்லிம் பெண்ணே!
பெருமானார் மனைவியரின் வரலாற்றை
பெருமையுடன் எடுத்தோது முஸ்லிம் பெண்ணே!

பெருமையெலாம் பெண்களுக்கே என்கின்ற
பெருமானார் மொழியறிவாய் முஸ்லிம் பெண்ணே!
அருமையெலாம் திருமறையின் அருள் மொழியில்
அமைந்துளதை நீ காண்பாய் முஸ்லிம் பெண்ணே!

அமைந்துள்ள பொக்கிஷங்கள் இரண்டாகும்
அதிலொன்று குர்ஆனாம் முஸ்லிம் பெண்ணே!
சுமையதிகம் நம் வாழ்வில் சேர்வதற்கு
சோம்பல்தான் காரணமாம் முஸ்லிம் பெண்ணே!

சோம்பலினால் குர்ஆனை ஓதாமல்
சூழ்ந்தனவே பாவங்கள் முஸ்லிம் பெண்ணே!
வீண் பொழுதைப் போக்கி நீ காலத்தை
விரயந்தான் செய்யாதே முஸ்லிம் பெண்ணே!

விரயந்தான் செய்கின்றார் நம் பெண்கள்
மேலான நேரத்தை முஸ்லிம் பெண்ணே!
கறைபடிந்து போனசிறார் வாழ்க்கையினை
கல்வியினால் ஒளிபெறச் செய் முஸ்லிம் பெண்ணே!

கல்வியெனும் செல்வத்தை மக்களுக்கு
கவனமுடன் ஊட்டிடுக முஸ்லிம் பெண்ணே!
செல்வத்துள் சிறப்பான ததுபோன்று
தேடுதற்கு கிடையாதே முஸ்லிம் பெண்ணே!

தேடுதற்கு அரிதான கல்வியினை
சிறுவருக் களிப்பதனால் முஸ்லிம் பெண்ணே!
ஓடிடுமே அறியாமை எதிர் காலம்
ஒளிமயமாய் விளங்கிடுமே முஸ்லிம் பெண்ணே!

ஒளிமயமாய் எதிர் காலம் அமைவதற்கு
ஓயாது உழைத்திடுக முஸ்லிம் பெண்ணே!
குழிதோண்டி மடைமையினைப் புதைத்திடுதல்
கொள்கையென வாழ்ந்திடுக முஸ்லிம் பெண்ணே!

கொள்கைக்காய் உயிர் நீத்த தியாகிகளின்
குன்றாத புகழ் பாடு முஸ்லிம் பெண்ணே!
கல்விக்காய் உயிர் கொடுத்தோர் வரலாற்றின்
காவலர்கள் என்றறிக முஸ்லிம் பெண்ணே!

காவலனாம் அல்லாஹ்வை அறிவதற்கும்
கற்பதுவே வழிவகுக்கும் முஸ்லிம் பெண்ணே!
நாவலராய் உன்னுடைய குழந்தைகளை
நாளை நீ உருவாக்கு முஸ்லிம் பெண்ணே!

நாளையினை நம்பிநீ செயலாற்று
நன்மக்கள் தமைக் காண்பாய் முஸ்லிம் பெண்ணே!
வேளை வரும் வரட்டுமென இருப்பதுவோ
வெற்றியினை அளிக்காது முஸ்லிம் பெண்ணே!

வெற்றியெலாம் இன்றுள்ள சிறுவர்களின்
வெறும் கையில்தானுண்டு முஸ்லிம் பெண்ணே!
குற்றங்கள் காணுங்கால் அவர்களினை
கோபித்து வெருட்டாதே முஸ்லிம் பெண்ணே!

கோபத்தால் குழந்தைகளின் மனம்வருந்தும்
குணமாகத் திருத்திவிடு முஸ்லிம் பெண்ணே!
தீபத்தின் ஒளிபோல நாளைஅவர்
சுடர் விட்டுத் திகழ்வாரே முஸ்லிம் பெண்ணே!

சுடராக இருந்தொளி வீசியவர்
சொன்னவற்றைக் கேட்டாயா? முஸ்லிம் பெண்ணே!
இடர்வென்றார் இம்மையிலும் மறுமையிலும்
ஈடேற்றம் பெற்றாரே முஸ்லிம் பெண்ணே!

ஈடேற்றம் நம் சமூகம் பெற்றிடவே
இன்றுமுதல் பாடுபடு முஸ்லிம் பெண்ணே!
நாடேற்றம் பெற்றிடவே உன்பங்கை
நல்லாட்சி களித்துவிடு முஸ்லிம் பெண்ணே!

# நல்லாட்சி

நல்லாட்சி மலர்ந்திடுதற் கொன்றாக
நலியா துழைத்திடுக முஸ்லிம் பெண்ணே!
மெல்லியலார் இல்லையெனில் மேதினியில்
மேலான ஆட்சி இல்லை முஸ்லிம் பெண்ணே!

மேலான ஆட்சியினால் மக்களிடை
விதிவிலக்கு ஒழிந்து விடும் முஸ்லிம் பெண்ணே!
கீழானோர் மேலானோர் என்கின்ற
பேதங்கள் மறைந்து விடும் முஸ்லிம் பெண்ணே!

பேதமிலா இறையாட்சி மலர்ந்திடவே
பெருமானா ருழைத்தனரே முஸ்லிம் பெண்ணே!
ஏதமிலா ஆட்சியினை நம்பிடுதல்
ஈமானின் ஒரு பகுதி முஸ்லிம் பெண்ணே!

ஈமானைக் கெடுக்கின்ற ஆட்சியினை
இறைவனிடம் முறையிடுக முஸ்லிம் பெண்ணே!
ஆமான பெறு பேறும் அதற்குண்டு
அல்லாஹ்தான் நீதிபதி முஸ்லிம் பெண்ணே!

அல்லாஹ்வைத் தொழுவதனால் உன்மனதை
ஆள்வதற்கு பழக்கிடுக முஸ்லிம் பெண்ணே!
சொல்லாலும் செயலாலும் உன் வாழ்வை
சுவனத்துக் கெனவாக்கு முஸ்லிம் பெண்ணே!

சுவனத்தின் வாயில்கள் மூமினுக்காய்
சுகமளிக்கத் திறந்திருக்கும் முஸ்லிம் பெண்ணே!
நவமான பாக்கியங்கள் அதிலுண்டாம்
நல்வழியில் நடப்பவருக்கு முஸ்லிம் பெண்ணே!

நல்வழியில் நடப்பதுதான் இவ்வுலகில்
நாகரீகம் என்றறிவாய் முஸ்லிம் பெண்ணே!
இல்வாழ்வில் துன்பங்கள் வந்திடலாம்
இவ்வுலகில் அவை சகிப்பாய் முஸ்லிம் பெண்ணே!

இவ்வுலக வாழ்க்கையுமே நிலையில்லை
எண்ணத்தில் இருத்திக் கொள் முஸ்லிம் பெண்ணே!
அவ்வுலகில் நிலையான சுகம் பெறுவாய்
அல்லாஹ்வைத் தொழுவதனால் முஸ்லிம் பெண்ணே!

அல்லாஹ்வை நம்பியவர் வரலாற்றில்
அழியாத புகழ்பெற்றார் முஸ்லிம் பெண்ணே!
சொல்லத்தான் வார்த்தையுண்டோ அவரெல்லாம்
சுகமான பேறுபெற்றார் முஸ்லிம் பெண்ணே!

சுகமாக மறுமையிலே மகிழ்ந்திருக்க
சுவனங்கள் எட்டுண்டு முஸ்லிம் பெண்ணே!
இகவாழ்வில் நாமென்றும் காணாத
இன்பங்கள் அங்குண்டாம் முஸ்லிம் பெண்ணே!

இன்பமே இஸ்லாத்தின் அடிப்படையில்
இயங்குவதில் தானுண்டு முஸ்லிம் பெண்ணே!
அன்பான நெஞ்சங்கள் கொண்டோரை
அகமகிழ்ந் துபசரிப்பாய் முஸ்லிம் பெண்ணே!

அகத்தூய்மை ஈமானுக் கடிப்படையாம்
அழுக்காறு தீதாகும் முஸ்லிம் பெண்ணே!
முகத்தளவில் உறவுகொண்டு பேசுபவர்
முஸ்லிம்க ளாகாரே முஸ்லிம் பெண்ணே!

முஸ்லிம்கள் சமுதாயம் உயர்ச்சி பெற
முறையான பயிற்சி பெறு முஸ்லிம் பெண்ணே!
விசுவாசம் தளராத மனமிருந்தால்
விடிவுவரும் எனநம்பு முஸ்லிம் பெண்ணே!

விடிவில்லா திருக்கின்ற நம்சமூகம்
வெற்றிபெறும் நாள்என்றோ முஸ்லிம் பெண்ணே!
கொடியமனம் படைத்தசிலர் இப்புவியில்
குறைக்கின்றார் நம்பெருமை முஸ்லிம் பெண்ணே!

குறைகள்வரும் உன்வாழ்வி னிலேநல்ல
குணங்களினால் அவைவெல்லு முஸ்லிம் பெண்ணே!
மறைபோற்றும் இன்வாழ்வுப் பாதையிலே
மகிழ்ச்சி பெறு என்னருமை முஸ்லிம் பெண்ணே!

---

மகிழ்ச்சியெலாம் சமூகத்தின் தொண்டாற்றும்
மனநிறைவில் தானுண்டு முஸ்லிம் பெண்ணே!
இகழ்ச்சி வரும் என்று நீ கலங்கிடாதே!
எதிர்காலம் ஒன்றுண்டே முஸ்லிம் பெண்ணே!

எதிர்காலம் தளிர்விட்டுப் பூவாகி
இதழ்விரித்து மணம்பரப்பும் முஸ்லிம் பெண்ணே!
இதுகண்டு நீமகிழ்வாய் எனஇன்று
எழுதிமன மகிழுகிறேன் முஸ்லிம் பெண்ணே!

எழுதுகின்றோர் கோல்களெல்லாம் இலட்சியத்தை
ஏந்துகிற வாளாகும் முஸ்லிம் பெண்ணே!
பொழுதுவரும் போதுவரும் புத்துலகம்
பொன்னான வாழ்வுதரும் முஸ்லிம் பெண்ணே!

பொன்னான வாழ்வெமக்கும் புலராதா?
என்றுசிலர் ஏங்குகிறார் முஸ்லிம் பெண்ணே!
அன்னவரின் ஏக்கத்தில் பங்குகொள்ளு
அளவில்லா நன்மையுண்டு முஸ்லிம் பெண்ணே!

அளவில்லா நன்மையினைப் பெறுவதற்கும்
ஆசையொரு தடைக்கல்லாம் முஸ்லிம் பெண்ணே!
விளைநிலமாய் நாமுள்ளோம் விதைகளினை
வெற்றியுடன் தூவிவிடு முஸ்லிம் பெண்ணே!

வெற்றியுடன் வாழ்ந்த நம்முன்னோரின்
வீரத்தைப் பாடுகின்ற முஸ்லிம் பெண்ணே!
நற்றவத்தை மேற்கொண்டு நடந்தாலோ
நானிலத்தில் சிறப்புண்டாம் முஸ்லிம் பெண்ணே!

நானிலம் போற்றுகின்ற நபிநாதர்
நாயகியர் வாழ்ந்த விதம் முஸ்லிம் பெண்ணே!
பேணிடுக! அதனாலே பெருமையுண்டாம்
பெண்களெலாம் உனைப்புகழ்வார் முஸ்லிம் பெண்ணே!

பெண்கள்தாம் சமூகத்தின் வெற்றியிலே
பெரும்பங்கு வகிக்கின்றார் முஸ்லிம் பெண்ணே!
கண்களாய் அவரிருந்தார் ஆகையினால்
காவியங்கள் பலகண்டோம் முஸ்லிம் பெண்ணே!

காவியத்தின் நாயகிகள் சிறப்புக்களை
கவிஞர்கள் வரைந்துள்ளார் முஸ்லிம் பெண்ணே!
பாவிகளாய் பேதையராய் வாழ்ந்தவரை
பாவையர்கள் திருத்தியுள்ளார் முஸ்லிம் பெண்ணே!

பாவையர்கள் நல்வழியில் நடப்பரெனில்
பாவங்கள் குறைந்துவிடும் முஸ்லிம் பெண்ணே!
ஆவியுடல் பொருளெல்லாம் பொதுப் பணிக்காய்
அர்ப்பணித்தால் வெற்றியுண்டு முஸ்லிம் பெண்ணே!

---

அர்ப்பணம் செய்வதனால் உடல்பொருள்ஆவி
அழியாத புகழுண்டு முஸ்லிம் பெண்ணே!
கற்பைநீ கண்ணாகக் கருதி விடு
கறையில்லா நெறியொழுகு முஸ்லிம் பெண்ணே!

கறையில்லா நபிமணியின் போதனைகள்
கடைப்பிடிக்க திடம்கொண்ட முஸ்லிம் பெண்ணே!
அறைகூவி அழைத்துனது தோழிகளை
அன்பான போதனை செய் முஸ்லிம் பெண்ணே!

அன்புக்கு முன்னாலே எல்லாமும்
அடிமையென அறிந்திடுக முஸ்லிம் பெண்ணே!
பண்பான வழிநடந்து உனதன்பை
படைத்தோனுக் கர்ப்பணம் செய் முஸ்லிம் பெண்ணே!

படைத்தவனுக் குனதன்பை அர்ப்பணித்தால்
பாவங்கள் மன்னிப்பான் முஸ்லிம் பெண்ணே!
அடுத்தவர்க்காய் வாழுவது சிறப்பூட்டும்
அன்றாடம் மனதிற் கொள் முஸ்லிம் பெண்ணே!

அன்றாடம் ஏழையர்க் குதவுவதால்
அல்லாஹ்வின் அருளுண்டு முஸ்லிம் பெண்ணே
சென்ற சென்ற இடத்திலெலாம் உன்றனுக்கு
சீர்மைகளும் தேடி வரும் முஸ்லிம் பெண்ணே!

# சீர்மை

சீர்மைமிகு வாழ்வளிக்கும் இறைவனுக்குச்
சிரம்பணிந்து நன்றிசெய்க முஸ்லிம் பெண்ணே!
நேர்மையெனும் ஆயுதத்தை ஏந்தி நில்லு
நீசர்கள் மறைந்திடுவர் முஸ்லிம் பெண்ணே!

நீசர்கள் தமைக்கண்டு பயந்தாலோ
நீதியெங்கு தழைத்தோங்கும் முஸ்லிம் பெண்ணே!
நேசர்கள் இறைவனுக்கு பலருண்டு
நேசமுடன் பணிந்திடுக முஸ்லிம் பெண்ணே!

நேசமுள்ள யாவரிலும் மேலான
நேசமுள்ளோன் அல்லாஹ்வாம் முஸ்லிம் பெண்ணே!
பாசமுள்ளான் விதிவிலக்கே யில்லாது
பாவியர்க்கும் அன்பு செய்வான் முஸ்லிம் பெண்ணே!

பாவிகளாய் வாழுகின்ற மானிடரைப்
பண்புடனே சீர்மை செய் முஸ்லிம் பெண்ணே!
பாவங்கள் செய்வதனை விட்டுமவர்
பரிசுத்தம் பெறுவாரே முஸ்லிம் பெண்ணே!

பரிசுத்தம் தொழுகையின் திறவுகோலாம்
பாத்திமா வழிவந்த முஸ்லிம் பெண்ணே!
புரிவணக்கம் சுவனத்தின் திறவுகோலாம்
புதுவாழ்வு சீர் செய்யும் முஸ்லிம் பெண்ணே!

புதுவாழ்வு தொடங்குதற்குத் தீர்மானம்
பூண்டுள்ளாய் எனவறிந்தேன் முஸ்லிம் பெண்ணே!
எதிர்காலம் எங்களுக்காய் இருக்குமென
எழுச்சிமிகு கவிபாடு முஸ்லிம் பெண்ணே!

எழுச்சிமிகு கவிபாடிச் சிந்தனையை
எழுச்சியுறச் செய்திடுக முஸ்லிம் பெண்ணே!
மகிழ்ச்சிமிகு வுண்டாகும் ஒரு நாளை
வரவேற்போர் இங்குள்ளார் முஸ்லிம் பெண்ணே!

வரவேற்போம் புதுவாழ்வு ஒன்றினையே
வரலாறும் வரையட்டும் முஸ்லிம் பெண்ணே!
சிரமீந்து செந்நீரைத் தானீந்த
தியாகிகளைக் கண்டோமே முஸ்லிம் பெண்ணே!

தியாகத்தின் அடிப்படையில் மலர்ந்ததுவே
தேனொத்த எம்இஸ்லாம் முஸ்லிம் பெண்ணே!
பயபக்தி கொண்டேதான் நாமதனைக்
காத்திடுதல் கடனாகும் முஸ்லிம் பெண்ணே!

காத்திடுவோம் நம்முயிர் உள்ளவரை
காலத்தால் புகழ் பெறுவோம் முஸ்லிம் பெண்ணே!
ஏற்றிடுவோம் இஸ்லாத்தின் தீபத்தை
இன்பமார் உலகமைப்போம் முஸ்லிம் பெண்ணே!

இன்பமுள்ள வாழ்வமைக்கத் திடமே பூண்டு
இஸ்லாத்தின் வழிநடக்கும் முஸ்லிம் பெண்ணே!
துன்பத்தைக் கண்டுநீ மனம் சோர்ந்து
துக்கித்துக் கிடக்காதே முஸ்லிம் பெண்ணே!

துக்கத்தை நீக்குமொரு மாமருந்து
தொழுகைதனில் உண்டாமே முஸ்லிம் பெண்ணே!
பக்குவமாய் ஐவேளை தொழுவதனால்
பலமாக மனம்அமையும் முஸ்லிம் பெண்ணே!

பலமான மனமிருந்தால் பெண்களிடம்
பாவங்கள் விலகி நிற்கும் முஸ்லிம் பெண்ணே!
நலமான வாழ்வமைக்கும் பெண்களினை
நம்சமூகம் காணாதோ முஸ்லிம் பெண்ணே!

நம்சமூகம் இஸ்லாத்தின் சமூகமென்றே
நலமான கவிபாடு முஸ்லிம் பெண்ணே!
எம்மவர்கள் எல்லோரும் இஸ்லாத்தால்
இணைந்ததொரு கட்டடமாம் முஸ்லிம் பெண்ணே!

இணைகின்ற கற்களாய் நம்முன்னோர்
இவ்வுலகில் இருந்ததனால் முஸ்லிம் பெண்ணே!
அணையாத புகழ் பெற்றார் அகிலத்தில்
அழகான வாழ்வமைத்தார் முஸ்லிம் பெண்ணே!

அழகான நன்மைகளை இறைவனிடம்
அடைவதற்கு முயன்றிடுக முஸ்லிம் பெண்ணே!
நிழலான இவ்வுலக வாழ்க்கையுமே
நிலையில்லை என்றறிக முஸ்லிம் பெண்ணே!

நிலையில்லா அன்புக்காய்த் தம்முயிரை
நீத்தவர்கள் கண்டுள்ளோம் முஸ்லிம் பெண்ணே!
விலையில்லை இறையன்பின் மகிமைக்கு
வேண்டிடுக அதற்காக முஸ்லிம் பெண்ணே!

வேண்டுகிறோம் இறைவனிடம் நிராகரித்து
வீசலுறும் மர்மமென்ன முஸ்லிம் பெண்ணே!
தீண்டுகிறோம் பாவங்களை எக்கணமும்
தீமையுடன் வாழுகிறோம் முஸ்லிம் பெண்ணே!

தீமையினால் இறைவனிடம் எங்களது
தேவைகளும் நிறைவேறா முஸ்லிம் பெண்ணே!
ஊமைகளாய்ப் பாவியராய் இருப்பவர்க்கும்
உரைத்திடுக இவைகளினை முஸ்லிம் பெண்ணே!

உரைத்திடுக இறைவனது மகத்துவத்தை
உன்போன்ற சகோதரிக்கும் முஸ்லிம் பெண்ணே!
திரை போட்டுப் பாவங்கள் செய்தாலும்
தெளிவாக அவனறிவான் முஸ்லிம் பெண்ணே!

தெளிவான நீரோடை யாகமனம்
தெளிவாக மாறுதற்கு முஸ்லிம் பெண்ணே!
வழிகாட்டும் வான்மறையைத் தினமோது
வாழ்க்கையொளி யாகிவிடும் முஸ்லிம் பெண்ணே!

வாழ்கையொரு விளையாட்டுப் பொருளல்ல
வாழ்ந்திடுக இறைவனுக்காய் முஸ்லிம் பெண்ணே!
சூழ்கின்ற சமுதாயச் சுமைகளெல்லாம்
சோர்ந்திருந்தால் நீங்கிடுமோ முஸ்லிம் பெண்ணே!

சோர்ந்திருக்கும் உள்ளத்தை துடிப்பாக்கு
சுவனத்தில் இடமுண்டு முஸ்லிம் பெண்ணே!
ஆய்ந்துணர்ந்து காரியங்கள் அத்தனையும்
ஆற்றிடுக புகழ் பெறுவாய் முஸ்லிம் பெண்ணே!

ஆற்றல் மிகு கொண்டவர்கள் சமூகத்தின்
ஆக்கத்துக் குதவுகின்றார் முஸ்லிம் பெண்ணே!
போற்றிடுக அவர்பணியை இதனாலே
புத்துணர்வு அவர்பெறுவார் முஸ்லிம் பெண்ணே!

புத்துணர்வு பெற்றவரை சமூகந்தன்னில்
புதியவரை உருவாக்க முஸ்லிம் பெண்ணே!
ஒத்துழைத் தலுன் கடனாம் முஸ்லிம் பெண்ணே!
உள்ளத்தைப் பண்படுத்து என்றும் சாந்தி

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தேசியத் தலைவரும், அமைச்சரும் எனது பால்ய நண்பருமான மறைந்த மாமனிதர் கவிஞர் திலகம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்களை வாழ்த்தி அவரது ஐம்பதாவது பிறந்தநாள் விழாவின்போது வெளியிடப்பட்ட **'ஓடும் நதியை பாடும் மலர்கள்'** எனும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற இக்கவிதை விரிவாக எழுதப்பட்டு பாமடல் எனும் வடிவத்தில் அன்னாருக்கு அப்போது அனுப்பிவைக்கப்பட்டது

அந்த அதிமானுடனின் நினைவாக............

# பாமடல்

கறுப்பு வெள்ளிக்கிழமைகளின்
கதாநாயகரே,
உங்களின்
நெருப்பு யாகங்கள் ஒவ்வொன்றும்
எங்களை
நிமிர்ந்து நிற்க வைக்கின்றன.

பழுத்தும் பக்குவமடையாத
தலைவர்களை நம்பி
அழுகிப் போவதற்கு நாங்கள்
ஆயத்தமாயிருந்தோம்;
நீங்கள் தெளித்த
அரசியல் ரசாயனத்தால்
மீட்சி பெற்றோம்; புது
மெருகு பெற்று
காட்சியளிக்கின்றோம்
தேசத்தின் கடைகளில் இன்று

பொதுமக்களின் முன்
தேசிய வர்ணங்களைப்
பூசிக் கொண்டும்
தமது மக்கள் முன்
இனவாத முகங்களைக்
காட்டிக் கொண்டும்
வேஷம் போடுபவர்கள் மத்தியில்
இனத்தின் பெயரால்
தேசியம் பேசும்
தேசியத் தலைவரே!
நீங்கள் நிஜ முகத்துடன் வரும் போது
பொய் முகங்கள் வியர்த்து விடுகின்றனவே!

இலங்கையின்
அரசியல் வரலாற்றில்
தங்க நாக்குகளையும்
வெள்ளி நாக்குகளையும் கண்டு
புருவங்களை மேலுயர்த்தியவர்கள்
உங்களிடமிருக்கும்
வைர நாக்கின் வல்லமை கண்டு
தங்கள் நாக்குகளையே
வாய்க்கு வெளியே வரவிடாது
பூட்டி வைத்திருக்கும்
புதுவரலாறுகளும் கண்டோம்.

கவிஞன் பிறக்கின்றான்
உருவாக்கப் படுவதில்லையாமே
தலைவர்களும் அப்படியோ?
ஆம்; அப்படித்தான்
உங்களைப் பொறுத்தவரையில்.

உறுதி மிக்க உங்கள்
கரங்களைப் பற்றி
அறிந்தவன் நான்
ஆனால் உங்கள்
கரங்களைப் பற்றி
உடன் வரமுடியாதவனாய்
ஒதுங்கி இருந்து விட்டேன்
காரணம் குடும்பச் சுமைகளே
அ.்.தன்றேல்
களத்தில் குதித்திருப்பேன்
கழுத்தும் கொடுத்திருப்பேன்

என்னுடனிருந்த அந்த இனிய நாட்களினை
இன்னும் மறக்காது இதயத்திலிருத்திப்
பண்ணிய அன்றைய உரையினை
எண்ணி நான் இதயம் நெகிழ்ந்தேன்.

“எதிர்க் கட்சியும், ஆளும் கட்சியும்
கத்தரிக் கோலின் எதிரெதிர்
இரு விளிம்புகள்” என்ற உங்கள்
சித்தாந்தம் சிலரைச்
சிந்திக்க வைத்ததும்
அதுவே, அவர்களை, உங்களை வந்து
சந்திக்க வைத்ததும்
சரித்திரமல்லவோ சாணக்கியரே!

உடல், பொருள், ஆவியைக்
கொடுப்போமென
வாய்கிழியக் கத்திச் சமூகத்தின்
வாயைக் கிழித்தவர்கள்
கிழிந்து போன அவர்களின்
வாய்களைத்
தைத்துக் கொண்டிருக்கையில்
வாய் திறக்காத புன்னகை மூலம்
எல்லோரதும்
வாய்களைத் திறக்க வைத்தவரே!
நீங்கள்
வாய் திறந்தால் எங்களுக்கு
வாய்ப்பதெல்லாம் வாய்ப்புக்களே!

பிள்ளையையும் கிள்ளித்
தொட்டிலையும் ஆட்டித் திரிந்தவர்கள்
உங்களையும் கிள்ளிப் பார்க்கலாமென்று
பகற்கனவு கண்டு கொண்டிருந்தனர்

நிஜக்கனவு கண்டு கொண்டிருந்த
உங்களை அவர்கள்
நெருங்கவும் முடியாமல்
நெட்டி முறித்த போது
பார்த்துக் கொண்டிருந்த நாங்கள்
கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டோம்.

கற்பக தருவே, உங்களை
வெட்டி விறகாக்கி
விற்பனை செய்யப் பார்த்தவர்களுக்கோ
நீங்கள்
கற்பனைக் கதையானீர்கள்.

கோடரிக் காம்புகளைக்
கொழுக்கி போட்டிழுத்து
அறுவடை செய்து
புது விதை சொரிந்த விருட்சமே!
உங்கள் அடி மரத்தின்
களைகளைப் பிடுங்கியதாலல்லவோ
நீங்கள் இன்று ஆரோக்கியக்
கிளைபரப்பி நிற்கின்றீர்கள்.

குருவிச்சைகள் உங்கள் கிளைகளில்
வேரூன்ற வந்த வேளைகளிலெல்லாம்
உருவிப் பிடுங்கி ஓரமாய் வீசியதாலல்லவோ
ஓங்கி வளர்ந்து இந்த அரசு
நாற்காலியில் அமர்வதற்கும்
நாற்காலி ஆனீர்கள்.

தனிமரமும் தோப்பாகும் என்பதைச்
சாதித்துக் காட்டிய கனிமரமே!
பதின் மூன்றாவது தேசிய மாநாட்டுத்
தோப்புக்குள்
நானும் ஒரு மரமாய் வீற்றிருந்தேன்.

நீங்கள்
ஆணிவேரில்லாமல்
ஆடிப்போய் விடுவீர்களோ என்று
ஆடிப்போயிருந்தவர்கள்
உங்களைப் பாதுகாக்க வந்த
பக்க வேர்களைப் பார்த்து
வேரூன்றி விட்டீர்கள் என்பதை
விளங்கிக் கொண்ட பின்னர்
பாறைகளாய்ச் சமைந்து விட்டதைப்
பார்த்துக் கொண்டிருந்தோம்.

பக்க வேர்களை மேலும் கவனமாய்ப்
பரப்புவதன் மூலம் ஓர் நாளில்
நெக்குருகிவிடும்
அப்பாறைகளும் நிச்சயம்.

நீங்கள்
அமைதியாகச் செய்து கொண்டிருக்கும்
அரசியல் யாகங்களுக்கு
எண்ணெய் ஊற்ற வருபவர்கள் மீது
எச்சரிக்கையாயிருப்பீர்களென
எதிர் பார்க்கின்றோம்.

கறுப்பு வெள்ளிக் கிழமைகள்,
நூறுமைல் பாதயாத்திரைகள்,
புனர்வாழ்வுகள், புனரமைப்புக்கள்,
ஒலுவில் துறைமுகங்கள்,
சப்பாத்து நாடா யோசனைகள்
இன்னும் இன்னும் எத்தனையோ...
உங்கள் அரசியல் விருட்சத்தின்
ஆணிவேர்கள்.

சப்பாத்தாகவும் இருக்க விரும்பவில்லை
சப்பாத்துக்குக் கீழாக
இருக்கவும் விரும்பவில்லை
சப்பாத்துக்கு மேலுள்ள
நாடாவைப் போல் நாங்கள்
வாழ விரும்புகின்றோம் என்ற
மதிநுட்பக் கோரிக்கை
“ஒற்றுமை என்னும் கயிற்றைப்
பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்” என்ற
குர்ஆனின் அடியொற்றியதொரு
சிறந்த அரசியல் சித்தாந்தமன்றோ.

உங்கள்
கறுப்பு வெள்ளிக் கிழமைப்
பிரகடனத்தின் பின்னர் வந்த
எல்லா வெள்ளிக் கிழமைகளுமே
வெள்ளை வெள்ளிக் கிழமைகளாகவே
விளங்குகின்றன.

இது என்ன அதிசயம் உங்கள்
வார்த்தைகளுக்கிருக்கும் வசீகரத்தால்
போர்த்துப்பாக்கிகள் கூட ஒரு
புறமாகத் திருப்பப் பட்டனவே.

அரசியல் தோப்புக்குள்ளும்
இலக்கியக் குரல் எழுப்பும்
அதிசயக் குயிலே
எங்களுக்காக நீங்கள்
எழுப்புகின்ற குரல்
எங்கள் இனத்தின் ஏக குரலாய்
ஏற்றுக் கொள்ளப் படுவதை நாங்கள்
ஏற்றுக் கொள்ளுகின்றோம் ஆனால்
உங்களைப் பாதுகாப்பதில்தான்
எங்களின் பாதுகாப்பும்
இருக்கின்ற தென்பதையும்
எத்தி வைக்க விரும்புகின்றோம்
அதற்காக
ஏந்துகின்றோம் எங்களிரு
கைகளையும் இறைவனிடம்.

சொத்துக்களைச் சொந்தமாக்கும்
உச்சவரம்புகள்
சொத்துக்களுக்குத்தானுண்டு
பொதுச் சொத்தாகிய உங்களுக்கு
உண்டோ உச்சவரம்பு

கிழக்கின் சூரியச்சுடரே
மேற்கில் உங்களை
மறைக்கப் பார்க்கும்
வழுக்குவாய்ப் பிரச்சாரங்கள்
முழுக்க ஓர் நாள் ஓயும்; அப்போது
இந்தத் தேசமென்ன
சர்வதேசங்களும்
உங்களைத் தேடி ஓடிவரும்.

கடந்த கால நட்பினை மறக்காத
கண்ணபிரானே இந்தக்
குசேலனிடம் உங்களுக்காகக்
கொடுப்பதற்கு ஏதுமில்லை
கவிதையைத் தவிர
ஏற்றுக் கொள்வீர்களென
எதிர் பார்க்கின்றேன்
போற்றற் கரிய உங்கள் பணிகளினைப்
போற்றி
வாழ்த்துக்கள் கூறி விடைபெறும்
தங்களன்பின்

தாஸிம் அகமது

## ஆசிரியரின் பிற நூல்கள்

வெளிவந்தவை

- ✯ வெள்ளையில் ஒரு புள்ளி (கவிதைகள்)
- ✯ சுழற்சிகள் (கவிதைகள்)
- ✯ ஆசுகவி (கவிவாழ்த்து)
- ✯ கண் திறவாய் (இஸ்லாமிய எழுச்சிக் கவிதைகள்)

வெளிவரவிருப்பவை

- ✯ கவிதைச் சிறகு (கவிதைகள்)
- ✯ பெருமானார் (கவிதைகள் - ஆற்றுப்படை)
- ✯ கட்டுரைத் தொகுதி

**DR. THASSSIM AHAMED**
**NO. 9, SAUNDER'S COURT**
**COLOMBO - 02**
**SRI LANKA**



# தாஸிம் அகமது

கவிதை என்பது கலை, அந்தக் கலைத்திறன் நல்லவனுக்கு மட்டுமன்றி அல்லவனுக்கும் வாய்க்கலாம் எனவே கவிஞன் எத்தகையவன் என்பதைப் பொருத்து கவிதைகளும் நல்லவையாகவோ, அல்லவையாகவோ வெளிப்படலாம். உயர்ந்த இலட்சியங்கள் உடையவனிடம் வாய்க்கும் கலைத்திறனே ஆக்கக் கருவியாகப் பயன்படுகிறது. கவிஞர் தாஸிம் அகமதுடைய ஒவ்வொரு கவிதையிலும் உயர்ந்த இலட்சியங்களையே காண முடிகிறது.

இறையருட் கவிஞர்

**செ. சீனி நைனா முகம்மது**

ஆசிரியர் – உங்கள் குரல்

பினாங்கு மலேசியா

கவிதை, சிறுகதை, நாடகம், கட்டுரை, இலக்கிய ஆய்வு, வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் பட்டிமன்றம் என்பவற்றில் ஈடுபாடு கொண்டுள்ள வைத்திய கலாநிதி தாஸிம் அகமது அவர்கள் வைத்தியம் மற்றும் இலக்கியத்தில் பிரகாசித்து வரும் குடும்பம் ஒன்றின் ஐந்தாவது தலைமுறையைச் சேர்ந்தவராவார்.

இஸ்லாமிய எழுச்சிச் சிந்தனைகளை இலக்கியமாக்க வேண்டும் எனும் உணர்வு தாஸிமின் இளமைக் கால அபிலாசையாகும். இப்போது வெளியிடப்பட்டுள்ள "கண்திறவாய்" எனும் கவிதைத் தொகுதி மரபில் அமைந்த அழகிய பொதுக் கவிதைகளையும் தத்துவ அறிவுரை மற்றும் இஸ்லாமிய எழுச்சிக் கவிதைகளையும் கொண்டதாக அனைவரது கவனத்தையும் நிச்சயம் ஈர்க்கும்.

கல்விமான்

**எஸ்.எச்.எம். ஜெமீல் MA**

கொழும்பு